Civil Aviation Authority
Sri Lanka

Safe and Efficient Skies for all

# ஆண்டறிக்கை 2016

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

Civil Aviation Authority Sri Lanka

Safe and Efficient Skies for all

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

# வருடாந்த அறிக்கை - 2016

(2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் 15 வது வாசகத்திற்கிணங்க பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது)




## சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தொனிப்பொருள் கீதம்

ஶ்ரீ லங்கா சிவில் குவன் சேவா அதிகாரிய
கித் யாசின் கதலே
ஹெலி தொட்ட ஹெலி ஹெலே //

சக்வித்தி ராவண ஆருதி யுகேன்
தண்டு மொனிரின் குவன தினா //
விஸ் அமதி லக்தன வாரிய பொலனுத்
பாவிது நுவன மனா //

“உவதுரு தொர பவ சந்தஹா முல்வெமு”
வெய்பெர வெக்கிய அபே //
“இக்மன் அய மகநெகுமகி முல்வெவ”
மேவெய் தமக்கும அபேய் //

ரடவெசி யுதுகம இடுவன அயுரின்
மௌபிம ஹா பெதமு //
சமாஜ மெஹவர சாரதாஹம் ரெக
வககீமென் புதமு //

**ஆக்கம** : **கலாபூசனம் அரிசன் அஹபுது**
**பாடியவர்** : **கலாநிதி பண்டிதர் டப்ளியு.டி. அமரதேவ**
**இசையமைத்தவா** : **கலாநிதி பண்டிதர் டப்ளியு.டி. அமரதேவ**



## கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்

இவ் ஆண்டறிக்கை 2002 இலக்கம் 34 கொண்ட சிவில் விமான சேவை அதிகாரசபைச் சட்டத்தின் 15 வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2016 ஜனவரி 01 ஆம் திகதி ஆரம்பித்து 2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபையின் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

**ஆனந்த விமலசேன**
தலைவர்

**இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபை**
2017 பிப்ரவரி 28

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தொனிப்பொருள் கீதம்** | **2** |
| **உள்ளடக்கம்** | **4** |
| **சுருக்கமான சொற்றொடர்கள்** | **8** |
| **விபரக் கொத்து** | **10** |
| **தலைவரின் மீளாய்வு** | **12** |
| **சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வு** | **16** |
| **CAASL பக்கத் தோற்றம்** | **21** |
| அறிமுகம் | 21 |
| CAASL அங்கத்தவர்கள் | 21 |
| 10 வது பணிப்பாளர் சபையின் (அமுலில் உள்ள) அங்கத்தவர்கள் தொடர்பான தகவல்கள் | 24 |
| **இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை** | **29** |
| தூரநோக்கு | 29 |
| குறிக்கோள் | 29 |
| குறிக்கோள் வாசகம் | 29 |
| தத்துவம் | 29 |
| இலக்குகள் | 29 |
| தந்திரோபாயங்கள் | 29 |
| மதிப்பீடுகள் | 29 |
| இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் முதன்மை இலக்குகள் | 30 |
| எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் | 30 |
| வெளியீடுகள் | 31 |
| வெளியீட்டு வகைகள் | 31 |
| ஒழுங்கு முறை விடயத் துறைகள் | 32 |
| **இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் நிருவாக மற்றும் பொறுப்புக்கள்** | **34** |
| அதிகார சபையின் செயற்பாடுகள் | 37 |
| பணிப்பாளர் சபை | 37 |
| அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரங்கள் | 37 |
| அதிகார சபையின் குழுக்கள் | 37 |
| பணியாளர் சபைக் குழு | 38 |
| நிதிக் குழு | 38 |
| கணக்காய்வுக் குழு | 38 |
| சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) | 39 |
| பங்காளர் தரப்பினருடனான உறவினைப் பேணல் | 39 |
| அதிகார சபை மற்றும் சிரேட்ட முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் | 39 |
| பொறுப்புக் கூறும் செயற்பாடுகள் | 39 |
| ஆர்வ ரீதியிலான முறன்பாடுகள் உள்ளகக் கணக்காய்வு | 40 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 40 |
| நிலையியற் சபை தேவைகளுக்கு அமைவான செயற்பாடுகள் | 40 |
| விழுமியச் செயற்பாடுகள் | 40 |
| இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை | 41 |
| **செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம்** | **42** |
| அதிகார சபை மற்றும் அதன் குழுக்கள் | 42 |
| விபத்துப் பகுப்பாய்வுப் பிரிவு | 42 |
| தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 43 |
| ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டப் பிரிவு | 43 |
| **வான் பரப்பு மற்றும் பாதுகாப்பு மேற்பார்வைக் கிளை** | **46** |
| விமானப் பாதுகாப்புப் பிரிவு | 46 |
| விமானத் தளப் பிரிவு | 47 |
| காற்று வழிசெலுத்தல் பிரிவு | 48 |
| **வானியல் தற்காப்பு மேற்பார்வைக் கிளை** | **52** |
| பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவு | 52 |
| வானியல் செயற்பாட்டுப் பிரிவு | 53 |
| விமானங்களைப் பதிவு செய்தல் மற்றும் விமானத் தகைமைப் பிரிவு | 55 |
| **கூட்டிணைந்த செயற்பாடுகள் மற்றும் பொருளாதார மேற்பார்வைக் குழு** | **57** |
| பொருளாதார மேற்பார்வை மற்றும் விமானப் போக்குவரத்துப் பிரிவு | 57 |
| மானித வள மற்றும் அலுவலக முகாமைத்துவப் பிரி | 62 |
| செலவின மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு | 65 |
| **2016 ஆம் ஆண்டில் நுறைசார்ந்த டுன்னேற்றங்கன்** | **66** |
| CAASL இன் செயற்சாதனை - 2016 | 66 |
| விமான சேவை துறைபின் தகவல்கள் - 2016 | 72 |
| போக்குவரத்து விபரங்கள - 2016 | 72 |
| **நிதிக் கூற்றுக்கள்** | **73** |
| **கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை** | **102** |
| **கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்** | **118** |



*“அனைவருக்கும் பாதுகாப்பும் வினைத்திறனும் மிக்க வான்பரப்பு”*

**இலங்கைக்கான முபிவிட இணைப்பு**

## சுருக்கமான சொற்றொடர்கள்

| | |
|---|---|
| AE | விமானத் தளங்கள் |
| ANS | வான்செலவுகள் சேவை |
| AASL | விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி |
| AIU | விபத்து விசாரனை அலகு |
| ADG | மேலதிக பணிப்பாளர் நாயகம் |
| AME (BL) | வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் (அடிப்படை அனுமதிப் பத்திரம்) |
| AML | வானூர்திப் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் |
| AMO | அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு அமைப்பு |
| AMT | வானூர்தி பராமரிப்புத் தொழில்நுட்ப கலைஞர் |
| ANR | வான்செலவுகள் ஒழுங்குக் கோவை |
| AOC | வான் செயற்பாட்டாளர் சான்றுப் பத்திரம் |
| AS | வானியல் சேவைகள் |
| ASN | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு அறிவித்தல்கள் |
| AT & LA | வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் |
| ATC | வான் நெரிசல் கட்டுப்பாடு/வான் நெரிசல் கட்டுப்பாட்டாளர் |
| Av.Sec. | விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு |
| AW | வான் தகைமை |
| Aw E | வான் தகைமைப் பொறியியலாளர் |
| BIA | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் |
| CAASL | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| CADEC | சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்வியூட்டற் குழு |
| CEO | பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் |
| COSCAP-SA | செயற்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகைமையினை விருத்தி செய்வதற்கான தெற்காசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டம் |
| CSI | வானறைப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| C of R | பதிவுச் சான்றிதழ் |
| D | பணிப்பாளர் |
| DDG/ASR | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வான்பரப்பு மற்றும் பாதுகாப்பு ஒழுங்கு விதிமுறைகள்) |
| DDG/CAER | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கூட்டாண்மை விவகார மற்றும் பொருளாதார கட்டுப்பாடுகள்) |
| DDG/FSR | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமானப் பாதுகாப்பு ஒழுங்கு விதிமுறைகள்) |



| | |
|---|---|
| D/AED | பணிப்பாளர்/விமானத்தளம் |
| D/ANS | பணிப்பாளர்/விமானச் செயற்பாட்டுச் சேவைகள் |
| D/A Ops | பணிப்பாளர்/விமானச் செயற்பாடுகள் |
| D/ARAW | பணிப்பாளர்/விமானச் செயற்பாடுகள் மற்றும் பதிவுகள் |
| D/ATER | பணிப்பாளா/விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதாரக் கடப்பாடுகள் |
| D/Av S | பணிப்பாளர்/விமானப் பாதுகாப்பு |
| D/HROM | பணிப்பாளா/மனித வள மற்றும் அலுவலக முகாமைத்துவம் |
| D/RFM | பணிப்பாளர்/வருமானம் மற்றும் நிதி முகாமைத்துவம் |
| D/TOPL | பணிப்பாளா/தனியார் அனுமதிப்பத்திரம் மற்றும் பயிற்சி ஒழுங்குகள் |
| D/RDSP | பணிப்பாளா/விசேட செயற்திட்ட ஆய்வு, அபிவிருத்தி |
| D/QIA | பணிப்பாளா/தர மற்றும் உள்ளகக் கணக்காய்வு |
| DG | ஆபத்தான பொருட்கள் |
| DGCA | சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் |
| FIR | விமானப் பறப்புத் தகவல் வலயம் |
| FS | விமானப் பறப்புப் பாதுகாப்பு |
| IA | உள்ளகக் கணக்காய்வு |
| ICAO | சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு |
| PBN | விமானப் போக்குவரந்து சார்ந்த முன்னேற்றங்கள் |
| FPP | விமான ஒழுங்கு விதிமுறைத் திட்டங்கள் |
| MRIA | மத்தளை ராஜபகஷ சர்வதேச விமான நிலையம் |
| NCASP | தேசிய சிவில் விமான சேவை போக்குவரத்து வேலைத்திட்டங்கள் |
| PEL | தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் |
| PLO | தனிநபர் அனுமதிப் பத்திரம் வழங்கும் உத்தியோகத்தர் |
| RPK | பிரயாண கிலோமீற்றருக்கமைய வருமானம் |
| RTK | கிலோமீற்றருக்கமைய வருமானம் |
| SARPs | தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறைகள் |
| SARI | தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு |
| SLAS | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் |
| SLCAP | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் |
| SLFRS | இலங்கை நிதியிடல் அறிக்கையிடல் நியமங்கள் |
| RDPSP | ஆராய்ச்சி, பயிற்சித் திட்டங்கள் மற்றும் விசேட வேலைத்திட்டங்கள் |
| SMS | பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை |
| SSP | தேசிய பாதுகாப்பு திட்டம் |
| USAP | உலகளாவிய பாதுகாப்பு சோதனை வேலைத்திட்டம் |
| USOAP | உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை சோதனை வேலைத்திட்டம் |

## விபரக்கொத்து

| | | |
|---|---|---|
| தலைமை அலுவலகம் | : | இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>இல.04. ஹுுணுபிட்டிய வீதி<br>கொழும்பு 02<br><br>தொலைபேசி: 94 - 11-2304632, 94 - 11-2358800<br>தொலைநகல்: 94 - 11-2304644<br>மின்னஞ்சல்: info@caa.lk<br>இலத்திரணியல்: www.caa.lk<br>தபால் முகவரி : த.பொ.இலக்கம் 535, கொழும்புதந்தி<br>முகவரி: AIRCIVIL<br>AFTN முகவரி : VCCCYAYX |
| கட்டுநாயக்கா அலுவலகம | : | இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>எப்.டி 11, வெளியேறும் பிரிவு<br>பண்டாரநாயக்க சா்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா<br>தொலைபேசி: 94 - 11-2252269<br>தொலைநகல்: 94 - 11-2252269 |
| மத்தளை அலுவலகம | : | இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>மத்தளை ராஜபக்' சா்வதேச விமான நிலையம் மத்தளை.<br>தொலைபேசி: 94 - 47-7510530<br>தொலைநகல்: 94 - 47-7510541 |
| விமானத் தகைமை உப அலுவலகம் | : | இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>கொழும்பு விமான நிலையம்<br>இரத்மலானை<br>தொலைபேசி: 94 - 11-3135828 |
| கணக்காய்வாளா் | : | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்<br>கணக்காய்வாளா் நாயகம் |
| சட்டத்தரணிகள | : | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டமா அதிபா |
| வங்கியாளா | : | இலங்கை வங்கி |
| காப்புறுதியாளா | : | வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்<br>வ/ப செலிங்கோ காப்புறுதிக் கம்பனி |





## தலைவரின்

# மீளாய்வு

***விமானப் போக்குவரத்து சேவையை (ANS) விருத்தி செய்யும் வகையில் CAASL இனால் உரிய செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை செல்லுபடியாகும் நிலைமைக்காக ICAO உடன் இணைந்து BIA இற்காக செயற்சாதனைகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் (PBN) விமான செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக ADS-B (Automatic Dependence Surveillance - Broadcast) அமுல்படுத்துவதற்காக ANS விநியோகஸ்தரான AASL கம்பனிக்கு மேற்பார்வை வழிகாட்டல்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.***



அபிவிருத்திகளுக்கமைய கருத்திற் கொள்ளும்போது 2016 ஆம் ஆண்டு விமான சேவைக் கைத்தொழிலுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக மாற்றம் பெற்றது. சர்வதேச விமானப் போக்குவரத்துக் கம்பனிகள் அனேகமானவைகளின் கொள்ளளவினைப் பயன்படுத்தும் வகையில் மற்றும் இலாபகரமான முறையில் பலமுடன் அபிவிருத்தியும் காண்பிக்கப்பட்டது.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை, ஆகஸ்ட் மாதத்தில் ஆசிய பசுபிக் வலயத்தின் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகங்களின் 53 வது மாநாட்டிற்கு அனுசரனை வழங்கி இச் சம்மேளனத்தை இலங்கையில் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த மாநாடு வெற்றியளித்தது சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) மத்திய சபையின் தலைவர் மற்றும் (ICAO) பொதுச் செயலாளர் ஆகிய இருவரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். கொழும்பு சம்மேளனம் இதுவரையில் அவர்கள் பங்கேற்ற சம்மேளனங்களில் அதிசிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட சம்மேனங்கள் என்று இவர்கள் இருவரும் ஏற்றுக் கொண்டனர்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி அதிமேன்மை தங்கிய மைத்திரிபால சிறிசேன அவர்கள் இம் மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந் நிகழ்வினை மேலும் அழகூட்டியதுடன் இலங்கை பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க விசேட அதிதியாக கலந்து கொண்டார். போக்குவரத்து சிவில் விமான சேவைகள் கௌரவ அமைச்சர், போக்குவரத்து சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் மற்றும் மேலும் விசேட அதிதிகள் பலரும் அதில் கலந்து கொண்டனர். ஆசிய பசுபிக் வலயத்தின் மேலும் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு கூட்டங்களான பிராந்திய விமான சேவை பாதுகாப்பு அமைப்பு (RASG) 6 வது கூட்டம் மற்றும் பிராந்திய விமான சேவை பாதுகாப்பு அனுசரனை அமைப்பின் (RASCF) 4 வது கூட்டமும் DSCA சம்மேளனத்திற்கு முன்னர் அதற்கிணைவாக நடாத்தப்பட்டுள்ளது. RASG கூட்டத்தில் 157 பிரதிநிதிகளும் RASCF கூட்டத்தில் 78 பிரதிநிதிகளும் கலந்து கொண்டதுடன் பிரதான DGCA கூட்டத்தில் 237 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகாமையில் CAASL இற்கான தலைமையகக் கட்டடத்தை நிர்மானிக்கும் பணிகள் இவ்வாண்டுக்குள் அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகளில் ஒன்றாகக் காணப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட அளவு துரிதமாக மேற்கொள்ளப்படாத போதிலும் தற்போது இதன் நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2017 இறுதிப் பகுதியில் இக் கட்டடம் பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலையில் மாற்றம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

விமானச் செயற்பாட்டுப் பணிகளின் கீழ் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் விண்ணப்பதாரர்கள் 03 பேர்களுக்கு விமானச் செயற்பாட்டுச் சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையில் தனியார் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக விமானங்களை இறக்குமதி செய்வதற்கு CAASL இற்கு ஆர்வத்தினை வெளியிட்டிருந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள்

மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டிருந்து. அசூர் எயார், யுக்ரேனியன் எயார் லைன்ஸ், நியோஸ் எயார், பிமார் எயார் லைன்ஸ், ஸ்ரீவிஜயா எயார் லைன்ஸ், ஹிமாலயா எயார் லைன்ஸ், மெலோபல் மோல்டிவ்ஸ், ரோயல் பிளைட், கொமிசன் எயார் மற்றும் பொலஸ்கோ எயார் லைன்ஸ் கம்பனிகளுக்கு இலங்கையில் அவர்களின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

புதிய விமானப் பராமரிப்புக்கள் 07 அமைப்புக்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் விமான பராமரிப்பு அமைப்புக்களுக்கு 66 அனுமதிப் பத்திரங்களும் புதுப்பிக்கப்பட்டன. புதிய விமானங்களுக்காக 1000 விமானத் தகைமை சான்றிதழ்கள் முதற் தடவையாக வழங்கப்பட்டதுடன் விமானத் தகைமைச் சான்றிதழ்கள் 56 புதுப்பிக்கப்பட்டன. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் CAASL இனால் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனியின் பராமரிப்புப் பிரிவு தொடர்பில் நடாத்தப்பட்ட விரிவான கணக்காய்வு உட்பட அதன் தேடுதல் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன.

வழங்கப்படும் சேவைகளுக்கு கூடுதலான பெறுமதியினை வழங்குவற்காகவும் தரத்தினை விருத்தி செய்வதற்காகவும் தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவு CASSL இன் தகவல் தொழில்நுட்ப ஊக்குவிப்புத் திட்டத்தில் உள்ளடக்குவதற்காக கணனியை அடிப்படையாகக் கொண்ட பரீட்சை முறையினை மேற்கொள்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

விமானப் போக்குவரத்து சேவையை (ANS) விருத்தி செய்யும் வகையில் CAASL இனால் உரிய செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை செல்லுபடியாகும் நிலைமைக்காக ICAO உடன் இணைந்து BIA இற்காக செயற்சாதனைகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் (PBN) விமான செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக ADS-B (Automatic Dependence Surveillance - Broadcast) அமுல்படுத்துவதற்காக ANS விநியோகஸ்தரான AASL கம்பனிக்கு மேற்பார்வை வழிகாட்டல்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தொடர்ந்தும் 03 ஆண்டுகள் SAR பங்குடமை வேலைத்திட்டம் (SCPP) இன் கீழ் அவுஸ்திரேலியா சமுத்திரப் பாதுகாப்பு அதிகார சபை (AMSA) உதவியினைப் பெற்றுக் கொண்டு இலங்கையில் தேசிய தேடல்கள் மற்றும் மீட்பு அமைப்பினைத் தாபிப்பதற்கான யோசனைகள் உட்பட அனர்த்தத்திற்குட்பட்ட விமானங்களைத் தேடுவதற்கு மற்றும் மீட்புச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காகவும் தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ICAO இன் வழிகாட்டல் ஆவணத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் இலங்கை ரோன் ஒழுங்குக் கோவை (SLCAIS-053) முதற் தடவையாக மறுசீரமைப்புப் பணிகள் இறுதியாக தயாரிக்கப்படுகின்றன. வெளிநாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகள் நீண்டகாலம் தொடக்கம் பற்றாக்குறையாக காணப்பட்ட மேலே பறப்பதற்கு மற்றும் தரையிறக்கும் கட்டணத்தை அறவிடுவதற்கு (CAASL AASL) உதவிகள் வழங்கப்பட்டன.

2016 ஆம் ஆண்டுக்குள் இலங்கை விமானப் போக்குவரத்துப் பிரிவு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியினை எட்டியுள்ளது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மொத்த பிரயாணிகளின் அசைவு எண்ணிக்கை 9.3 மில்லியனாகக் பதிவாகியுள்ளது. இப் பிரயாணிகளின் எண்ணிக்கையில் 48% அளவு தேசிய விமானப் போக்குவரத்துக் கம்பனியினால் அழைத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது CAASL இன் வருமானம் 5% தினால் அதிகரித்துள்ளதை காண முடிந்தது. உண்மையான வருமானம் 1579 மில்லியன் தொடக்கம் 1660 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. விமானக் கையாளுகை வரி அறவிடும் சேவைக் கட்டணம் மற்றும் மேற்பார்வை சேவைகள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காண்பிக்கப்படுகின்றது.

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் ஆகிய நான் CAASL இன் சகல பதவிகளை வகிக்கும் ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட அதிசிறந்த செயற்பாட்டுப் பணிகளுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆசிய பசுபிக் வலயத்தின் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் சம்மேளனத்தை வெற்றிகரமான நடாத்தி முடிக்க முடிந்தமைக்கு பிரதான காரணம் சகலரும் வழங்கிய அதிஉயரிய பங்களிப்புக்களைப் போன்று ஒத்துழைப்புக்களாகும். அனைவரினதும் அர்ப்பணிப்புக்கள் மற்றும் ஒத்துழைப்புக்களுக்கும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகளுக்கும் மனப்பூர்வமாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சகல சந்தர்ப்பங்களிலும் தமது பொறுப்புக்கள் தொடர்பில் எனக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கள் மற்றும் ஆலோசனைகளுக்காக CAASL இன் பணிப்பாளர் சபைக்கு எனது நன்றியை தெரிவிப்பதற்கும் இதனை சந்தர்ப்பமாகக் கொள்கிறேன். போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் தொடர்பான கௌரவ அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பணியாளர் சபைக்கும் வழங்கிய ஒத்துழைப்புக்கள் உட்பட வழிகாட்டல்களுக்காக எனது நேர்மையான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆனந்த விமலசேன**
தலைவர்
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து
அதிகார சபை



## சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் **மீளாய்வு**

**நாட்டின் பல்வேறுபட்ட இடங்களில் உயரிய மட்டத்தில் வான் பரப்பினைப் பயன்படுத்தும் போது சிவில் செயற்பாட்டாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கடுமையான தடைகளை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்விற்குட்படுத்தப்பட்டதுடன் விமானப் பரப்பின் வினைத்திறன் மற்றும் சிக்கனமான முறையில் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கக்கூடிய வகையில் இலங்கை விமானப் படையுடன் மிக நெருங்கிய உறவின் மூலம் அவ் மட்டுப்படுத்தல்கள் தளர்த்தப்பட்டன.**



### உலகளாவிய நிலைமைகள்

கூடுதலான பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை உட்பட வினைத்திறன், சூழலுக்கு உகந்ததாக உலகத் தரம்மிக்க விமான சேவைச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் கூடுதலான செயற்பாடுகளை உள்ளடக்கி விமானப் போக்குவரத்துக் கைத்தொழிற் துறை தொடர்ந்தும் உலக பொருளாதார செயற்பாட்டின் பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது. விமான சேவையினால் உலகளாவிய

பொருளாதாரத்திற்கு துரித பிரவேசத்தை வழங்கி அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்து செல்லும் இனங்களுக்கிடையில் எதுவித பயன்பாடுகளும் அற்ற நிலையில் உலகெங்கும் வர்த்தக, வாணிப மற்றும் சுற்றுலா வர்த்தகம் விருத்தி செய்யப்படுவதினாலும் அதேபோன்று பொருளாதார அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு உதவிகள் வழங்கப்படுவதினாலும் வர்த்தகச் செயற்பாடுகள் இலாபகரமான மாற்றியமைக்கப்பட்டுள்ளமையினாலும் இதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியினை ஊக்குவிக்க உதவி வழங்கப்படுவதினாலும் வர்த்தகம் இலாபகரமா மாற்றியமைக்கப்படுவதினாலும் வர்த்தகத்தை போன்று தனிநபர்களுக்காகவும் சொத்துக்கள் உட்பட தொழில்கள் உருவாக்கப்படுவதினாலும் கல்வி மற்றும் பல்வேறுபட்ட கலாசார இனங்கள் தொடர்பிலான விளக்கத்தைப் பெற்றுக் கொண்டு ஒத்துழைப்புக்கள் ஏற்படுத்தப்படுவதற்கும், அனேகமான இராட்சியங்கள் விமான சேவைக்கு உரிய இடத்தை வழங்கி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை மேற்பார்வை செய்ய முடிகின்றது.

2016 ஆம் ஆண்டு இறுதியில் விமானப் போக்குவரத்து கைத்தொழிலாளர்கள் 9.9 மில்லியனுக்கு நேரடி தொழில் வாய்ப்புக்களை வழங்கி உலகளாவிய ரீதியில் 62.7 மில்லியன் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடிந்துள்ளது. 2016 ஆம் ஆண்டு இறுதியில் விமான சேவையின் முழுமையான உலக பொருளாதாரப் பங்களிப்பு 2.7 திர்லியன் அ.டொலர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு நேரடியாக அழுத்தங்கள் மற்றும் ஈட்டப்பட்ட பிரயாணிகளும் சுற்றுலாக் கைத்தொழிலை ஊக்குவித்தலும் உதவியாக அமைந்தது. 2016 ஆம் ஆண்டில் விமானங்கள் மூலம் விமானப் பயணிகளின் எண்ணிக்கை 3.77 பில்லியனாகக் காணப்பட்டது. அதேபோன்று விமான சரக்குப் பொருட்கள் 53.92 மில்லியன் டொன் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள மொத்த வருமானம் 701 பில்லியன் அ.டொலர் ஆகும். (2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இது 2.4% குறைவினைக் காண்பிக்கின்றது)

நாளாந்தம் விமானக் கையாளுகைக்கு உட்படும் சரக்குப் பொருட்களின் அளவு 17.5 பில்லியன் அ.டொலர்களாகும். சர்வதேச சுற்றுலா பிரயாணிகள் 54% மானோர் விமானம் மூலம் பயணிப்பதாக சர்வதேவ விமானப் போக்குவரத்து சங்கம் (IATA) அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வான் பரப்பின் முதலீடு செய்யப்பட்ட சகல 100 மில்லியன் டொலர்களுக்கு மொத்த தேசிய உற்பத்திக்கு (GDP) ஆண்டுதோறும் 70 மில்லியன் அ.டொலருக்கு மேற்பட்ட அளவு சேருவதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளன.

2016 ஆம் ஆண்டு இறுதியளவில் 3883 விமான நிலையங்களில் மற்றும் அதற்கு வெளியே 26065 விமானங்களைப் பயன்படுத்தி வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொண்ட வர்த்தக விமான போக்குவரத்துச் சங்கங்கள் 1402 காணப்பட்டது. கொள்ளளவுப் பயன்பாட்டின் அளவில் சமநிலை அடையாளங்கள் (Break Even) 60% மாக இருந்தபோதிலும் 80% தை விட மேற்பட்ட கொள்ளளவு பயன்பாட்டு அளவினை அறிக்கைப்படுத்தி இவ்வாண்டுக்குள் உலகம் பூராகவும் வர்த்தக விமான சேவைகள் 36.6 மில்லியன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக் கொள்ளளவுப் பயன்பாடுகள் நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரதப் போக்குவரத்தில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள பயன்பாட்டு அளவை விடக் கூடுதலான அளவாகும். நவீன விமானங்கள் 3.5 லீட்டருக்கு 100 கிலோ

மீற்றர் அல்லது சுமார் 67 மைல் அளவு எரிபொருளின் வினைத்திறனை எட்டுவதற்கும் முடிந்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் உலகின் சகல வலயங்களிலும் விமானப் பயண எண்ணிக்கையில் 5.9% திருப்திகரமான முன்னேற்றத்தை எட்டியுள்ளது. இதில் 10.8% மிகவும் பலம்பொருந்திய வருடாந்த விமானப் பயண விருத்தி (Traffic Growth) அறிக்கைப்படுத்தப்பட்டிருப்பது மத்திய கிழக்கு விமானப் போக்குவரத்து கம்பனியின் மூலமாகும். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2016 ஆம் ஆண்டில் வர்த்தக விமானக் கம்பனிகளின் பிரயாணிகளின் எண்ணிக்கை மற்றும் சரக்குப் பொருள் கையாளுகை அளவு தொடராக 8% தினால் மற்றும் 12.5% குறைவு (குறை அபிவிருத்தி) இடம் பெற்றுள்ளது. உலகளாவிய விமானப் போக்குவரத்து கம்பனிகளின் செலவினம் (643 பில்லியன் அ.டொலர்) 2.5% வீழ்ச்சியைக் காண்பிக்கின்றது. 2016 ஆம் ஆண்டில் ஜெட் கரோசின் (Jet Kerosene) எரிபொருள் பீப்பாயின் சாதாரண விலை 52.1 அ.டொலராகக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டுக்குள் விமானப் போக்குவரத்துக் கம்பனியினால் வாயு மண்டலத்திற்கு வெளியிடப்பட்ட (புகை) காபன் டயொக்சைட் ($CO_2$) அளவு 814 மில்லியன் டொன் ஆகும். விமானப் போக்குவரத்து கம்பனிகளின் பொதுவான எரிபொருள் அல்லாத அலகு செலவின அளவுப் பயன்பாட்டு அடிப்படையில் காணப்படும் அளவில் ஒரு கிலோ மீற்றருக்கு 40.1 அ.டொலர் அளவு தேக்கி வைக்கப்படுகின்றது. விமானப் போக்குவரத்து கம்பனிகளின் தேறிய இலாபம் (35.6 பில்லியன் அ.டொலர் ஆகும்) 5.1% என்ற முதலீட்டு மூலதன புரழ்வு 9.4% என்றும், சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் (IATA) தொடர்ந்தும் அறிக்கைப்படுத்தியுள்ளது. 2016 ஆம் ஆண்டில் விமானப் போக்குவரத்துக் கம்பனி புறப்பட்டு செல்லும் ஒரு பயணியிடமிருந்து 9.4 அ.டொலர் வீதம் சாதாரண இலாபத்தைப் பெற்றுள்ளது.

பிரயாணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது விமான சரக்குப் பொருள் வர்த்தகத்தில் குறிப்படத்தக்களவு பின்னடைவுகள் காணப்பட்டன. இதன் வளர்ச்சி 2.5% என்ற நடுத்தர அளவில் காணப்பட்டது. இந் நிலைமைக்கு பிரதான காரணங்களாக அமைந்தது அபிவிருத்தி வேகம் மந்த நிலையில் காணப்பட்டமையும், முன்னேற்றகரமான பொருளாதாரத்தில் மூலம் அபிவிருத்தி நிலைமையினை எட்டும் செயற்பாடுகள் தாமதமாக இடம்பெற்றது.

2016 ஆம் ஆண்டில் விமானப் போக்குவரத்து கம்பனி கிலோ மீற்றர் (ASK) எண்ணிக்கைக்கமைய கணிப்பீடு செய்யப்பட்ட விமானப் போக்குவரத்து கம்பனியின் கொள்ளளவு (Airline Capacity) 6.2% வளர்ச்சியினைக் காண்பித்த போதிலும் விமானங்களின் பருமன் அதிகரிப்பதனால் AN6 சேவைக்காக கோரிக்கை விருத்தி மிகத் தாமதமான மட்டத்திலேயே இடம்பெற்றது.

2016 ஆம் ஆண்டில் போயிங் (Boeing) கம்பனி 748 வர்த்தக விமானங்களை கையளித்ததுடன் எயார் பைஸ் (Airbus) கம்பனி 688 விமானங்களைக் கையளித்துள்ளது. எயார் பஸ் கம்பனிக்கு 6874 கட்டளைகளும் போயிங் கம்பனிக்கு 5715 கட்டளைகளும் விமானத்திற்குப் பொறுப்பளிக்க எஞ்சியிருந்தது. இச் சகல கட்டளைகளுக்காகவும் விமானங்களைத் தயாரிப்பதற்காக அண்மித்த அளவு 05 வருடங்கள் கடக்கும்.

உலகளாவிய பொருளாதாரம் விரிவடைந்ததைத் தொடர்ந்து எதிர்வரும் 20 ஆண்டுகளுக்குள் விமானப் போக்குவரத்து கம்பனி புதிய வர்த்தக பேட்லைனர் (விமானம்) பல்லாயிரக் கணக்கில் பெற்றுக் கொள்ளும் போது இதனால் பாரிய விமான எண்ணிக்கையினைச் செலுத்தவதற்கு மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான அளணியினருக்கு முன் எப்போது இல்லாதவாறு கூடுதலான கேள்விகள் உருவாகும் என விமானப் போக்குவரத்துக் கைத்தொழில் எதிர்வு கூறியுள்ளது. இவ்வாறான பாரிய முன்னேற்றங்களுக்கு ஏற்றவகையில் தற்போது மற்றும் 2014 ஆம் ஆண்டுக்கு இணைப்பட்ட காலத்திற்குள் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட விமானத் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதாவது வர்த்தக விமானப் போக்குவரத்து விமானிகள் 538,000 மற்றும் விமானப் பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர்கள் 609,000 தை வழங்க வேண்டிய நிலை விமான சேவைக் கைத்தொழிலுக்கு காணப்படுவதாக 2016 போயிங் பிளைட் அன்ட் டெக்னிக்கல் அவுட்லுக் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமான சேவை தொழிலாளர்களுக்காக இதனால் காணப்படும் கூடுதலான கேள்வியினை நிவர்த்தி செய்வதற்காக புதிய பரம்பரையினருக்கு இது தொடர்பான கற்கையின் தேவைகளுக்கு ஏற்றவாறு புதிய டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கமைய நம்பிக்கை மிக்க நவீன தீர்வுகள் அவசியப்படுகின்றன. கூடுதலான பல்வகைப்பட்ட எதிர்கால விமான சேவை ஊழிய அணியினைத் தயார்படுத்துவதற்காகத் தேவையான கலாசாரங்களுக்கிடையிலான மற்றும் பாரம்பரிய தேர்ச்சி கொண்ட ஆலோசகர்களைப் பெற்றுக் கொள்வதும் சவாலாக மாற்றம் பெற்றுள்ளது.

விமான சேவை தற்காப்பு செயற்சாதனை மட்டத்தை கருத்திற் கொள்ளும் போது 2016 ஆம் ஆண்டில் மற்றுமொரு சமநிலையற்ற ஆண்டாகக் காணப்பட்டது. அது 179 மரணங்களை சம்பவித்த (06) விபத்துக்கள் மற்றும் வேறு வகையிலான 85 விபத்துக்கள் இவ்வாண்டுக்குள் இடம்பெற்றுள்ளன. 2016 ஆம் ஆண்டில் உலகளாவிய விபத்துக்களின் அளவு (Accident Rate) (ஒரு மில்லியன் விமான சேவைகள் இடம்பெறும் விமானங்களின் சேத எண்ணிக்கைக்கமைய கணிப்பீடு செய்யப்படுகின்றது) 2.46 ஆகும். இந்த அளவானது விமானப் புறப்படுகை 416,667 இற்கு பிரதானமாக ஒரு (01) விபத்து அளவிற்கு சமமாகின்றது.

விமான சேவையின் பாதுகாப்பிற்கு குறிப்பிடத்தக்களவு அச்சுறுத்தலை ஏற்படுத்தி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டுக்குள் ரோன்ஸ் (ஆளில்லா விமானம்) செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதினால் பொது மக்களுக்கிடையே அது பிரபல்யமைந்துள்ளது. 2016 ஏப்ரல் மாதத்தில் ஜெனிவாவில் இருந்துவந்த பிரிட்டன் ஏயார் வேஸ் (Birtish Aieways) கம்பனிக்குச் சொந்தமான எயார் பஸ் A320 விமானம் அதன் விமானத் தளமான பன்டன் கீத்றோ விமான நிலையத்தை வந்தடையும் வேளையில் அதன் ரோன்ஸ் மோதுண்டது. இது எவ்வாறாக இருப்பினும் ஜெட் வானூர்தியைப் பயன்படுத்தி அதிலிருந்த 132 பயணிகள் மற்றும் 5 பணியாளர்களையும் பாதுகாப்பாக தரையிறக்க முடிந்தது. பயங்கரவாதச் செயற்பாடுகள் உட்பட திட்டமிடப்பட்ட அநீதிகள் எதுவும் இதற்குக் காரணமாக அமைந்ததா என்பது தொடர்பில் கண்டறிவதற்காக இந்த சம்பவம் தொடர்பில் விசாரனைகள்.

மேற்கொள்ளப்பட்ட ஆண்டு பூராகவும் இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றதாக அறிக்கைப்படுத்தப்பட்டது.

## ஆசிய பசுபிக் பிராந்திய நிலைமைகள

சர்வதேச விமானப் போக்குவரத்து கம்பனிக்கு (IATA) இற்கமைய ஆசிய பசுபிக் வலயத்தில் முன் எப்போதும் இல்லாதவாறு பாரியளவில் விமான சேவை துரித வளர்ச்சியை எட்டி வருவதாக மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இவ் உயரிய வளர்ச்சியின் விகிதாசாரத்தை எதிர்வரும் தசாப்தத்திற்குள் தொடர்ச்சியாக குறைவின்றி நிலையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிராந்திய விமானக் கம்பனியினால் கட்டளை இடப்பட்ட எதிர்காலத்தில் கையளிக்கவுள்ள விமானங்களின் கூடுதலான எண்ணிக்கை மேலே குறிப்பிடப்பட்ட கணிப்பீடுகளுக்கு காரணமாக அமைந்துள்ளது. 2030 ஆம் ஆண்டளவில் ஆசியாவின் விமானப் போக்குவரத்து அளவு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவுடன் ஒப்பீடு செய்யும் போது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இவ் அதிகரிப்புக் காரணமாக விமான சேவை பாரியளவு பிராந்திய பொருளாதாரத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்துகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் பிராந்திய விமான சேவை உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கான கேள்வியின் அதிகரிப்புக்கு ஏற்றவாறு துரித கதியில் இவை தொடர்பான செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை என்ற கருத்துக்கள் எழுந்துள்ளன. இதனால் எதிர்காலத்தில் விமான சேவையில் உருவாகக்கூடிய பொருளாதார இயலுமைகள் மூலமான பிரதிலாபங்களில் பாதிப்புக்கள் ஏற்படக்கூடும்.

## உள்நாட்டு நிலைமைகள்

2016 ஆம் ஆண்டு இலங்கையில் விமான விபத்துக்கள் அற்ற ஆண்டாக பதிவாகியது. பிரயாணிகள் மரணம் அல்லது காயத்திற்குட்பட்டதற்குரிய எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லை. இதனால் இவ் ஆண்டு மிக முக்கிய ஆண்டாகக் கருதப்படுகின்றது. இவ்வாண்டுக்குள் இலங்கைக்குள் மற்றும் வெளியேயும் மேற்கொள்ளப்பட்ட விமான சேவைகளின் எண்ணிக்கையில் (9.25 மில்லியன்) 10% அதிகரிப்பு, சரக்குப் பொருள் கையாளுகையின் அளவு (254,000 மொ.தொன்) அதாவது 18% அதிகரிப்பு மற்றும் விமான சேவையின் எண்ணிக்கை (65,608) 12% அதிகரிப்பு கொண்டதாகவும் விமானப் போக்குவரத்தின் முழுமையான திருப்திகரமான முன்னேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. உள்நாட்டு விமானப் போக்குவரத்திற்கான கேள்வியில் பாரியளவில் அதிகரிப்பு ஏற்பட்டமையையும் காண முடிந்தது. உள்நாட்டு விமானப் பயணங்களின் அளவு 5974 (+72.6%) 30523 பயணிகள் (+97%) இவ்வாண்டுக்குள் உள்நாட்டு ரீதியில் விமானப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர். உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்காக கூடுதலான கேள்விகள் காணப்படுவதாகவும் செயற்சாதனை சுட்டிகளுக்கமைய தென்படுகின்றது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி ஐரோப்பிய நாடுகளுக்கான விமானத் தளங்களுக்காக ஒரு சில சேவைகளை இரத்து செய்ய நடவடிக்கை எடுத்ததுடன் இதனால் விமானப் போக்குவரத்து மார்க்கத்தின் கட்டமைப்பினை மீள வகுக்க வேண்டி ஏற்பட்டது. ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி வ/ப மிஹின் லங்கா கம்பனிக்குரியதாக இருந்த விமானங்கள் மற்றும் செயற்பாட்டு மார்க்கத்தையும் தம்மால் சுவிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து வ/ப. மிஹின் லங்கா கம்பனியின் போக்குவரத்துச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன.

இவ்வாண்டுக்குள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் அதிஉயரிய முன்னேற்றங்களைக் காண்பித்த அதேவேளையில் மத்தள மஹிந்த ராஜபக்‘ விமான நிலையத்திற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானப் போக்குவரத்துக் கம்பனிகளினால் கூடுதலான அளவு கவர்ச்சிகள் காண்பிக்கப்படவில்லை. 2016 ஆம் ஆண்டின் வரவு செலவு யோசனைகளுக்கமைய சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினால் புத்தளம் மற்றும் பதுளை மாவட்டங்களில் உள்நாட்டு விமானத் தளங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்பக் கற்கையினை மேற்கொண்டதன் பின்னர் அதன் அறிக்கை மேலதிக ஆலோசனைகளுக்காக அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை மற்றும் இந்திய அரசாங்கத்திற்கிடையில் கைச்சாத்திடப்பட்ட இரு தரப்பு உடன்படிக்கைக்கமைய இந்திய அரசாங்கத்தின் அனுசரனையின் கீழ் பலாலி-KKS விமானத் தளத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) இனால் விமானப் போக்குவரத்து தற்காப்பினை விருத்தி செய்வதைப் போன்று பல்வேறுபட்ட முறையிலான செலவினங்கள் மற்றும் சூழல் ரீதியிலான பயன்களை எட்டும் வகையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்காக செயற்சாதனையினை அடிப்படையாகக் கொண்ட விமானப் போக்குவரத்து (PBN) செயற்பாட்டு ஒழுங்குகளை அமுல்படுத்துவதன் பணிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்காக AASL கம்பனியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ADS-B அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அரசாங்கத்தின் விமானத் தேடலின் இயலுமை மட்டத்தை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன.

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் கௌரவ அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மட்டக்களப்பு விமானத் தளத்தை இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையினால் பொறுப்பேற்று உள்நாட்டு விமான சேவைகளை விருத்தி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் மிக முக்கிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ICAO இன் ஆசிய பசுபிக் விமானப் போக்குவரத்துத் திட்டத்தை அமுல்படுத்தும் பிராந்திய அமைப்பின் (APANPG) பரிந்துரைக்கு அமைய இலங்கை விமான வான் பரப்பினை பலப்படுத்தும் வகையில் முகாமைத்திற்குட்படுத்துவதனை இலக்காகக் கொண்டு விமானப் போக்குவரத்துத் துறையுடன் தொடர்புபட்ட உள்நாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அமுல்படுத்தல் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை நாளாந்தம் மீளாய்விற்குட்படுத்தல் உட்பட சமகாலப்படுத்துவதற்காக இலங்கை விமானப் போக்குவரத்துத் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தும் முகவர் அமைப்பு (SLANPIRG) என்ற பெயரில் தொழில்நுட்பக் குழுவும் தாபிக்கப்பட்டது.

நாட்டின் பல்வேறுபட்ட இடங்களில் உயரிய மட்டத்தில் வான் பரப்பினைப் பயன்படுத்தும் போது சிவில் செயற்பாட்டாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கடுமையான தடைகளை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்விற்குட்படுத்தப்பட்டதுடன் விமானப் பரப்பின் வினைத்திறன் மற்றும் சிக்கனமான முறையில் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கக்கூடிய வகையில் இலங்கை விமானப் படையுடன் மிக நெருங்கிய உறவின் மூலம் அவ் மட்டுப்படுத்தல்கள் தளர்த்தப்பட்டன.

ஆசிய பசுபிக் வலயத்தின் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகங்களின் 53 வது மாநாட்டின் பிரதம அதிதியாக அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக கௌரவ பிரதமர் மற்றும் போக்குவரத்து சிவில் விமான சேவைகள் அமைச்சர் கலந்து கொண்டதுடன் இந்த நிகழ்வு அதிவிமர்சையாக கொழும்பில் இடம்பெற்றது. சர்வதேச விமானப் போக்குவரத்தின் தலைவர் உட்பட பொதுச் செயலாளர் ஆகியோரின் பங்கேற்பின் மூலம் இந்த

மாநாடு மேலும் கவர்ச்சிக்குட்பட்டது. அத்துடன் இம்மாநாட்டில் 34 நாடுகள் மற்றும் 10 சர்வதேச அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 236 பிரதிநிதிகள் பங்கேற்றதுடன், வெளிநாட்டு அதிதிகளின் மொத்த எண்ணிக்கை 306 ஆகும். வெளிநாட்டு அதிதிகளினால் செலவிடப்பட்ட ஹோட்டல் கட்டணம், வெளிநாட்டு அனுசரனைகள் மற்றும் பெறுமதி மிக்க பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வெளிநாட்டுப் பிரதிநிதிகளினால் செலவிட்ட நிதி மூலம் இலங்கைக்கு கணிசமான அந்நிய நாட்டுச் செலவானியினை உழைக்க முடிந்தது. இது மொத்த தேறிய அடிப்படையில் 32.12 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது இலங்கைக்கு பல துறைகளில் பயன்களைப் பெற்றுத்தந்த வெற்றிகரமான மாநாடான அமைந்தமை விசேட அம்சமாகும்.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் CAASL விமான சேவை தற்காப்பு தொடர்பான உணர்வு பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் மற்றும் நபர்களை முதற்தடவையில் உறுதிப்படுத்துவதற்கும் பின்னர் தேடல் செயற்பாட்டின் அடிப்படைப் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. செயற்பாட்டாளர்கள், பயிற்சி அமைப்புக்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் அவர்களின் தற்காப்பு முகாமைத்துவச் செயற்பாடுகள் (SMS) இன் கீழ் எட்டப்படும் செயற்சாதனையினை மேற்பார்வை செய்யும் அரச தற்காப்பு வேலைத்திட்டம் (SSP) வலுவான முறையில் அமுல்படுத்துவதற்காக பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

2012 முதற் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் மீள் கட்டமைப்பு வேலைத்திட்டங்களுக்கு அமைவாக பல்வேறுபட்ட தொழிற் துறைகளுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும் பணிகள் பல தடவைகள் முன்னெடுக்கப்பட்டன.

உரிய கடமைகள் மற்றும் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் போது அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கைக்கு தேர்ச்சி மற்றும் அனுபவம் கொண்டதாக விமானப் போக்குவரத்து சேவை தொழிலாளர்களை சேர்த்துக் கொள்ளல் மற்றும் அவர்களை அப்பதவிகளில் நிலைப்படுத்தல் தொடர்பிலான பிரதான சவால்களுக்கு தொடர்ந்தும் முகம் கொடுக்க வேண்டிய நிலை இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு ஏற்பட்டது. போதியளவு தேர்ச்சி மற்றும் திறமை கொண்ட ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தாது சர்வதேச சிவில் விமான சேவை சாசனத்தின் கீழ் அங்கத்துவ இராட்சியம் என்ற ரீதியில் இலங்கை மீது வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களுக்கமைய சர்வதேச பொறுப்புக்கள் நிறைவேற்றக்கூடிய இயலுமையினை மதிப்பீடு செய்வதற்காக தொடச்சியான அடிப்படைக்கமைய ICAO இனால் நடாத்தப்படும் கிரமமான மற்றும் கட்டாயமாக உளகலாவிய ஆய்விற்குட்படுத்தப்படும் பிரபல பலம் பொருந்திய இராட்சயங்களின் தங்காப்பு மேற்பார்வை முறைகளை வெளியிடல் மற்றும் முன்னெடுப்பதற்காக CAASL சிரரமான பணியாக மாற்றம் பெற்றுள்ளது. ICAO ஆய்வின் போது உரிய தேர்ச்சி மட்டத்தை எட்டாமை உள்நாட்டு விமான சேவைக் கைத்தொழிலுக்கு மாற்றமன்றி அரசாங்கத்தின் முழுமையான பொருளாதாரத்திற்கும் பாரிய பாதிப்பு கொண்ட விளைவுகளை ஏற்படுத்தக் காரணமாக அமையக்கூடும். இவ்வாறு விமான சேவைத் தொழிலாளர்களின் பாற்றாக்குறைக்கான பல காரணிகள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

- பயிற்சி மற்றும் அனுபவங்களைப் பெற்ற பணியாளர் சபையினர் ஓய்வு பெறல்.
- தேவையான ஊழியர்களைத் தொடர்ந்தும் வழங்குவதற்காக கூட்டிணைந்த தேறிய செயற்பாட்டு முறைகள் இன்மை.
- கேள்விக்கு ஏற்றவாறு போதியளவு பயிற்சிகளை வழங்குவதற்கான இயலுமைகள் இன்மை.
- தேர்ச்சி கொண்ட ஊழியர்களுக்காக கைத்தொழில் துறையில் காணப்படும் கூடுதலான போட்டிகள்.
- தேர்ச்சி கொண்ட ஊழியர்களுக்காக வெளிநாட்டு நிறுவனங்களில் காணப்படும் போட்டி கரமான நிலைமைகள்.
- தாங்கிக் கொள்ளக்கூடிய அளவு குறைந்த விலையில் பயிற்சிகளை வழங்குவதில் காணப்படும் பற்றாக்குறைகள்.

பலம்பொருந்திய தற்காப்பு மேற்பார்வையினை உள்ளடக்கிய 08 பிரிவுகளைக் கொண்ட ஊழியர் சபைக்கு மற்றும் பயிற்சிக்குரியதாக ஒரு பிரிவைத் தவிர ஏனைய கட்டங்கள் 07 க்குரியதாக இலங்கையினால் ICAO தரத்தினை அமுல்படுத்தும் அளவினை 80% தினால் அதிகரித்திருப்பதாகவும் இவ் அளவு உளகலாவிய சாதாரண அளவை விடக் கூடுதலான பெறுமதியினைக் காண்பிப்பதனால் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ICAO கணக்காய்வின் மூலம் இது தொடர்பான விடயங்கள் இனங்காணப்பட்டன. இது எவ்வாறாக இருப்பினும் ஊழியர் சபை மற்றும் பயிற்சிகள் தொடர்பில் கட்டங்களுக்குரியதாக இலங்கையினால் ICAO தரத்தினை அமுல்படுத்தும் அளவு சுமார் 50% மாகவும் இது உலகளாவிய சாதாரண அளவைவிடக் குறைந்த அளவு என்றும் தெரிவிக்கப்பட்டது. எனவே CAASL பணிப்பாளர் சபை இப்பிரச்சினைகள் தொடர்பில கூடுதலாக கவனம் செலுத்தி போதியளவு மற்றும் நிலையான தீர்வுகளை இனங்காண வேண்டியுள்ளது.

சிவில் விமான சேவைப் போக்குவரத்து அதிகார சபையினால் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான சுருக்கம் இதன் எதிர்கால வாசகத்தில் உள்ளடக்கப்படும். 2016 வருடாந்தம் அமுல்படுத்தும் வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு அவர்களினால் வழங்கப்பட்ட பெறுமதி மிக்க திருப்திகரமான பங்களிப்புக்காக CAASL மொத்த ஊழியர் சபைக்கு நன்றி தெரிவிக்க நான் இதனை சந்தர்ப்பமாகக் கொள்கிறேன்.

அத்துடன் CAASL இன் பணிக்கூற்றினை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்ட ஒத்துழைப்பு, வலுவான செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களுக்காக சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவருக்கும், உப தலைவருக்கும், பணிப்பாளர் சபையின் CAASL இன் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிதி உத்தியோகத்தர் என்ற வகையில் வழங்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களை மேற்கொள்வதற்காக எனக்கு வழங்கிய உதவி மற்றும் ஒத்துழைப்புக்களுக்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் தொடர்பான கௌரவ அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளருக்கும், மொத்த உழியர்களுக்கும் என நேர்மையான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**எச்.எம்.சி. நிமல்சிறி**
சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை



# CAASL பக்கத் தோற்றம்

## அறிமுகம்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் கீழ் 2002 டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை தாபிக்கப்பட்டது. இது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154 வது வாசகத்தின் கீழ் உரிய கணக்குகள் கணக்காய்வுப் பணிகளுக்கான அரச தொழில் முயற்சி நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பிரதான பணிகளாக அமைவது 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தினால் 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தில் உள்ளடங்கும் பிரதானக் குறிப்பு ஏற்பாடுகளின் கீழ் செயற்பட்ட சர்வதேச சிவில் விமான சேவை அமைச்சு (ICAO) இனால் அங்கீகரிக்கப்பட்ட உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைவாக சிவில் விமான சேவையின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை, வினைத்திறன் மற்றும் கிரமமான செயற்பாடுகள், சிவில் விமான சேவையினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை மேற்பார்வைக்குட்படுத்தல் மற்றும் இலங்கை பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி இலங்கை விமான சேவைத் துறையினை தேசிய பொருளாதார வளர்ச்சியின் பிரதான பங்காளியாக மாற்றியமைத்து முன்னோக்கி செல்வதே நோக்கமாகும்.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை 08 அங்கத்தவர்களைக் கொண்டமைந்துள்ளதுடன் இதில் 05 பேர் சிவில் விமான சேவை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுவர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் பிரதிநிதி மற்றும் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் CAASL இன் அங்கத்தவர்களாக ஏனைய 03 பேர் சிவில் விமான சேவை விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படுவர். அமைச்சரவையினால் நியமிக்கப்படும் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் உரிய பிரமானக் குறிப்புகளுக்கமைய CAASL இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராவார். நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களின் உத்தியோக பூர்வக் காலம் நியமனத் திகதி தொடக்கம் மூன்று (03) வருடங்களாகும்.

அதிகார சபையின் சிவில் விமான சேவை விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் பொதுவான செயற்பாடுகள் மற்றும் நிருவாகத்திற்குட்படும். தற்போது அமைச்சராகப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா செயற்படுகின்றார்.

## CAASL இன் அங்கத்தவர்கள்

கீழ் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்கள் 2016 ஆம் ஆண்டில் அமைச்சரினால் இணைக்கப்பட்ட அங்கத்தவர்களாக பதவிகளை வகித்தனர்.

**10 வது பணிப்பாளர் சபை (2015.10.12 தொடக்கம்)**

- திரு. ஆனந்த விமலசேன (தலைவர்)
- ஜனாதிபதி சட்டத்தரணி குசான் டி. அல்விஸ் (உபதலைவர்)
- போரசிரியர் டப்.எல்.பி. பெரேரா (அங்கத்தவர்)
- பொறியியலாளர் சுதர்ம அலகந்த (அங்கத்தவர்)
- கலாநிதி அமிந்த மொத்சிசிர பெரேரா (அங்கத்தவர்)

**உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்**

- பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி (பாதுகாப்புச் செயலாளர்)
- திருமதி. அனுலா கரஸ்கம (திறைசேரியின் பிரதிநிதி)
- திரு. எச்.எம்.சி நிமல்சிறி (சி.வி.சே ப /நா மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்)



## பணிப்பாளர் சபை

# உறுப்பினர்கள்

# 10 வது பணிப்பாளர் சபையின் (அமுலில் உள்ள) அங்கத்தவர்களின் தகவல்கள்



**திரு. ஆனந்த விமலசேன**
**தலைவர்**

திரு. ஆனந்த விமலசேன 2015 ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவராக கடமைகளைப் பொறுப்பேற்றார். இந்த நியமனத்திற்கு முன்னர் திரு. விமலசேன வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தலைவராக கடமையாற்றினார். இவர் வ/ப ஆசிரி வைத்தியசாலை கம்பனியின் ஆரம்ப முகாமைத்துவப் பணிப்பாளர், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பல பதவிகளை வகித்துள்ளார்.

விஞ்ஞானப் பட்டதாரியான இவர் கணக்காளராவார். தனியார் மற்றும் அரச துறையைப் போன்று நிதித்துறையிலும் விரிவான அனுபவம் இவருக்கு காணப்படுகின்றது. கொழும்பு ஆனந்த கல்லூரியில் கல்வி பயின்ற இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார்.



**திரு. குசான் டி. அல்விஸ்**
**உப தலைவர்**

ஜனாதிபதி சட்டத்தரனியான குசான் டி. அல்விஸ் கல்கிசை புனித தோமஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். இலங்கை சட்டக் கல்லூரியூடாக சட்டப் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் இவர் 1985/10/21 ஆம் திகதி சட்டத்தரனியாக சத்தியப்பிரமானம் செய்து கொண்டார். சட்டக்கல்லூரியில் இருக்கும்போது இவர் 1982 ஆம் ஆண்டில் ஹெக்டர் ஜயவர்தன தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளதுடன் 1984 ஆம் ஆண்டுக்காக சட்ட மாணவர் சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்

இவர் மறைந்த ஜனாதிபதி சட்டத்தரணி ஜே.இ.பி தரனியகல மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி தயாபெரேரா ஆகியோரின் கீழ் பயிற்சி பெற்றுள்ளார். 30 வருடத்திற்கு மேற்பட்ட கால சட்டத் தரனியாக ஈடுபட்டுள்ள இவர் ஆரம்ப நீதிமன்றத்தைப் போன்று மேன்முறையீட்டு நீதி மன்றங்களிலும் கடமையாற்றியுள்ளதுடன் இவர் சிவில் மற்றும் கூட்டுத்தாபன, வர்த்தகம் உட்பட நிருவாகம் சட்டம் தொடர்பில் நிபுனத்துவ அறிவினைப் பெற்றுள்ளார்.

மேலும் இவர் பிணக்குகளைத் தீர்த்தல், கூட்டுத்தாபன சட்டம் உட்பட மேற்பர்வைக் கேட்பாடுகளும் இதனுடன் இணைந்த சேவைகள் தொடர்பில் ஆலோசனைக் வழங்குதல் உட்பட பிணக்குகளைத் தீர்க்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளார்.

2012 நவம்பர் மாதத்தில் இவர் ஜனாதிபதி சட்டத்தரணியாக சத்தியப்பிரமானம் செய்து கொண்டார். 2011-2015 ஆம் ஆண்டு வரை இவர் சட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் சட்ட ஆலோசனை சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.
ஆசிய பசுபிக் வலயத்தின் பிரதான சட்டத்தரணிகள் தொடர்பில் விசேட கட்டுரைகளை வெளியிடும் லண்டன் வெளியீட்டு நிறுவனமான வேம்பர்ஸ் அன்ட் பார்ட்னஸ் இதனால் வெளியிடப்பட்ட “சேம்பர்ஸ் ஏசியா சஞ்சிகையும்” (CHAMBERS ASIA) வெளியிடப்பட்ட போட்டித் தொடரில் திரு. டி. அல்விஸ் பெற்ற பாரிய கௌரமாகும்.



**திரு. எச்.எம்.சி. நிமல்சிறி**
**சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம்பெற்ற அங்கத்தவர்)**

திரு. எச்.எம்.சி நிமல்சிறி அவர்கள் 2002 டிசம்பர் மாதத்தில் தாபிக்கப்பட்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் ஆரம்பம் தொடக்கம் அவர் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் உட்பட பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக கடமையாற்றியுள்ளார். 2002 ஜூலை மாதத்தில் பதில் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படும் வரை அவர் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் சிவில் விமான சேவைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (செயற்பாடுகள்) பதவி வகித்துள்ளார்.

திரு. நிமல்சிறி அவர்கள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையைத் தாபிக்க வழிவகுத்த புதிய சட்டக் கோட்பாட்டினை வரைவதைப் போன்று 1950 இலக்கம் 50 கொண்ட விமானப் போக்குவரத்து சட்டமும் மறுசீரமைக்கப்பட்ட 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தை சட்டமாக்குவதற்கும், முன்னோடியாக செயற்பட்ட உத்தியோகத்தர் சிலரில் இவரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின தரங்கள் மற்றும் பரிந்துரை ஒப்பளவுகளுக்கமைய இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் சிவில் விமான சேவை மேற்பார்வை தொகுதியினை மறுசீரமைத்து சமகாலப்படுத்துவதற்கும் அவரது தலைமையில் நடடிவடிக்கை எடுக்கப்பட்டது.

தமது தொழில்சார் செயற்பாடுகளின் போது தனிநபர் அனுமதிப்பத்திரங்களை வெளியிடல், விமானப் போக்குவரத்து, விமான சேவைப் பாதுகாப்பு மற்றும் விமான சேவைகள் பாதுகாப்பு ஆய்வுகள், பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள், விமான விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பில் ஆய்விற்குட்படுத்துவதும் உரிய விடயங்கள் தொடர்பன பல பாடநெறிகளையும் தொடர்ந்துள்ள திரு. நிமல்சிறி அவர்கள் சிவில் விமான சேவைத் துறையில் விரிவான அறிவு உட்பட அனுபவத்தையும் பெற்றுள்ளார். அவர் ICAO இல் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வுப் பாடநெறியையும் பாதுகாப்பு முகாமைத்துவ முறை மற்றும் அரச பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் பயிற்சிப் பாடநெறியை தொடர்ந்துளளார்.

சிவில் விமான சேவை தொடர்பில் பல்வேறுபட்ட வலய மற்றும் சர்வதேச சம்மேளனங்களில் பங்கேற்றுள்ள திரு. நிமல்சிறி வெளிநாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட இருதரப்பு விமான சேவைகளினதும் உடன்படிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் பல கலந்துரையாடல்களிலும் அப்போது காணப்பட்ட சிவில் விமான சேவைத்திணைக்களம் மற்றும் அதற்குப் பின்னர் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையையும் பிரதிநித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளார். 2007 ஆம் ஆண்டில் இவர் பிராந்திய ஒத்துழைப்புக்கள் ஊடாக உரிய இராட்சியங்களின் பாதுகாப்பு மேற்பார்வை இயலுமையினை விருத்தி செய்யும் நோக்குடன் தெற்காசியாவின் 07 இராட்சியங்களினால் ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய வேலைத்திட்டத்தின் இணைப்பாளராகவும் செயற்பட இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஐந்து வருட கால விடுமுறையின் கீழ் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் இரண்டாம் தர நியமனத்தினையும் பெற்றிருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமானி (BSC) பட்டத்தைப் பெற்றுள்ள நிமல்சிறி அவர்கள் அப்பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானம் தொடர்பிலும் விஞ்ஞானமானி (MSC) பட்டத்தையும் பெற்றுள்ளார். ர்‘யா யுலினோவிக்ஸ் இல் நடாத்தப்பட்ட தகைமைபெறும் பயிற்சி பாடநெறியைத் தொடர்ந்ததன் பின்னர் இவர் விமான பறப்புச் செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுள்ளார். இவர் தொடர்ந்தும் 2004 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா வெசிங்டன் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு முகாமைத்துவச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்தினையும் தொடர்ந்திருந்ததுடன் 2006 ஆம் ஆண்டில் அப்பல்கலைக்கழத்தினால் நடாத்தப்பட்ட விமான போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் தற்காப்பு தொடர்பான சர்வதேச உயர்மட்ட மாநாட்டிலிலும் கலந்து கொண்டிருந்தார்.

2014 ஆம் ஆண்டில் திரு. நிமல்சிறி அவர்கள் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விமான சேவை பாதுகாப்பு அமைப்பின் (RASG - APAC) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அவர் அப்பதவியை வகிக்கின்றார். தொடர்ந்தும் அவர் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விமான சேவைப் பாதுகாப்பு அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அப்பதவியில் சேவையாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக ஆசிய பசுபிக் வலயத்தின் விமானப் போக்குவரத்து செயற்பாட்டுப் பணிகளைத் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துவதற்காக ஐஊயுழ இனால் முன்னெடுக்கப்படும் ஆசிய பசுபிக் விமானப் போக்குவரத்து திட்டமிடல் உட்பட அமுல்படுத்தும் அமைப்பின் (APANPRIG) தலைராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2015 ஆம் ஆண்டில் மொன்றியலில் நடாத்தப்பட்ட இரண்டாவது உயர்மட்ட பாதுகாப்பு சங்கத்தின் உப தலைவராகவும் கடமையாற்றுகின்றார். இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச மட்டம் பிராந்திய கூட்டங்கள்/பல சம்மேளனங்களிலும் இவர் பங்கேற்றுள்ளார்.



**பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி (செயலாளர் - பாதுகாப்பு அமைச்சு) அங்கத்தவர்**

திரு. ஹெட்டிஆரச்சி 1977 ஆம் ஆண்டில் இலங்கையில் பெற்றுக் கொண்ட விஞ்ஞானமாணி - கௌரவ பொறியியல் (Bsc Hons - Engineering) பட்டத்தையும், 1986 ஆம் ஆண்டில் பெல்ஜியத்தில் பெற்ற விஞ்ஞானமானி (பொறியியல் விஞ்ஞானம்) (Bsc Hons - Engineering) பட்டத்தையும் கொண்டுள்ளார். 1977 ஆம் ஆண்டில் சிவில் பொறியியலாளராக வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சில் தமது தொழில் வாழ்வை ஆரம்பித்தார். அன்று தொடக்கம் இவர் உள்நாட்டு மற்றும் சர்வதேச பல அமைப்புக்களில் சிவில் பொறியியலாளர், தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளையும் வகித்துள்ளார். மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம், நீர்ப்பாசனத் திணைக்களம், பெல்ஜியம் கத்தோலிய யுனிவர்சிட்டி ஒப் நிறுவனம் (Katholike Universitate of Leuven Institution), சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவனம், வ/ப நிபன் கொய் ஆலோசனை கம்பனி (Nippon Koei Consultants Ltd), வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, பெற்றோலிய வள அமைச்சு, தொழிலாளர் உறவுகள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சு, சர்வதேச ஒத்துழைப்புக்களான ஜப்பான் வங்கி, மத்திய சுற்றாடல் அதிகார சபை (தனியார்) கம்பனி மற்றும் நகர அபிவிருத்தி நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, வ/ப. சியேறா பொறியியல் மற்றும் கட்டடம் (தனியார்) கம்பனியிலும் சேவையாற்றியுள்ளாா

இவர் தொடர்ந்தும் F.I.E (SRI LANKA) பட்டயப் பொறியியலாளர் - ஐக்கிய இராட்சியம் MIP மற்றும் FIM இன் தொழில்சார் அமைப்பு உட்பட கம்பனி அங்கத்துவத்தையும் வகித்துள்ளார்.



**திருமதி. டி.எம். அனுலா கரஸ்கம (நிதி அமைச்சின் பிரதிநிதி) அங்கத்தவர்**

திருமதி. அனுலா கரஸ்கம நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு. பொதுத்திறைசேரியின் பணிப்பாளர் நாயகமாக திறைசேரியின் செயற்பாட்டு பதவி வகித்துள்ளார்.

இவர் பொதுத்திறைசேரியின் தகவல் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் (2014) மற்றும் அரச தொழில்முயற்சி திணைக்களம் (2012 -2013) போன்ற பல்வேறுபட்ட திணைக்களங்களில் பணிப்பாள்ர் நாயகமாக சேவையாற்றியுள்ளார்.

மேலும் இவர் அரச நிதித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (2011-2012) பணிப்பாளர் அரச நிதித் திணைக்களம், கொழும்பு UNDP ஆசிய பசுபிக் வலய மத்திய நிலையத்தின் நிதி ஆய்வாளர், இலங்கை அரச தொழில் முயற்சி மீள் கட்டமைப்பு ஆணைக்குழுவின் நிதி மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளாார். இதற்கு மேலதிகமாக இவர் பல்வேறுபட்ட அரச அமைச்சுக்கள் மற்றும் வெளிநாட்டு நிதிச் செயற்திட்ட நிறுவனங்களின் பிரதம கணக்காய்வு - கணக்காய்வு பதவிகளை வகித்துள்ளார்.

இவர் அவுஸ்திரேலியா நியு சவுத்வெல்ஸ் பல்கலைக்கழகம் (UNSW), நிதியை பிரதான பாடமாகத் தொடர்ந்து பெற்றுக் கொண்ட வர்த்தகமானி (Master of Commerce) பட்டத்தையும் கொண்டுள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்ட நிறுவனத்தில் (PIM) முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா உட்பட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கலைமானி பட்டத்தையும் (BA) பெற்றுள்ளார்.

இதற்கு மேலதிகமாக திருமதி. கரஸ்கம அவுஸ்திரேலியா வங்கியில் மற்றும் நிதி நிறுவனம் உட்பட இலங்கை அரச நிதி மற்றும் அபிவிருத்திக் கணக்கீட்டு நிறுவனத்தின் அங்கத்தவராகவும்



கடமையாற்றியுள்ளார்.

**கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா அங்கத்தவர்**

கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா இலங்கையின் வடமேல் பல்கலைக் கழகத்தின் கணக்கியல் நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் தொடர்பான சிரேʻட விரிவுரையாளராவார். மாத்தறை புனித தோமஸ் கல்லூரியில் கல்வி கற்றுள்ள இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைப் பீடத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்து அரச நிருவாகம் தொடர்பான விஞ்ஞான மானி - விசேட (Bsc - Special) பட்டத்தைப் பெற்றுள்ளார்.

கலாநிதி அமிந்த மெத்சில சர்வதேச நிதித்துறையில் அவரது முதலாவது வர்த்தக நிருவாக கலைமானி (Masters Degrees) பட்டம் இந்தியாவில் IGNOU பல்கலைக்கழகத்திலும், இரண்டாவது கலைமானி பட்டத்தையும் சந்தைப்படுத்தல் துறையில் வர்த்தக நிருவாக கலைமானி பட்டத்தையும் இலங்கை வடமேல் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். இப் பல்கலைக்கழகத்தில் இவர் நுகர்வோர் செயற்பாடுகள் தொடர்பிலான முதுமானி (Ph.D) பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ஜேர்மன் கஸ்நொப் கற்கை பீடத்தில் (Kasnoff Academy) இனால் நடாத்தப்பட்ட அரச சார்பற்ற நிகழ்வின் (NGO) பணியாளர் சபை முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறியையும் தொடர்ந்துள்ளார்.

கலாநிதி பெரேரா இவரது தொழில்சார் முன்னேற்றங்களை மேற்கொள்ளும் அதேவேளையில் தனியார் மற்றும் பல அரச அமைப்புக்களில் பதவி வகித்துள்ளார். தற்போது இவர் மக்களின் வங்கி, தேசிய நூலக மற்றும் சுவடிக்கூட சபையிலும், வ.ஃ.ப பிரட்ஒப் சிலோன் தனியார் கம்பனியிலும் பணிப்பாளராக பதவி விகிக்கிறார் 2015.10.16 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் கலாநிதி பெரேரா இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு



நியமிக்கப்பட்டுள்ளார்.

**பொறியியலாளர் சுதர்ம அலகந்த அங்கத்தவர்**

பொறியியலாளர் சுதர்ம அலகந்த தற்போது நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ அமைச்சின் செயற்படும் (IDK World Bank) உலக வங்கியினால் நிதியுதவி வழங்கப்படும் காலநிலை மாற்றம் செயற்திட்ட பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். இந் நியமனத்திற்கு முன்னர் இவர் IDA/World டீயமெ உலக வங்கியினால் நிதியுதவி வழங்கப்பட்ட ஆணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வழகங்ல் திட்டமிடல் செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளராக கடமையாற்றினார். இதன்போது இவர் உலக வங்கியின் திருப்திகரமான தரப்படுத்தலுக்கு உட்பட்டதுடன் அச் செயற்திட்டத்தினால் இதுவரை இலங்கையில் வெற்றிகரமாக பூரணப்படுத்திய சிறந்த செயற்திட்டமாகவும் சாதனை நிலை நாட்டப்பட்டது.

இவர் மிக முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வலையமைப்பின் பல நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டுள்ளதுடன் சர்வதேச செயலமர்வுகள் உட்பட கருத்தரங்குகளில் தொழில்நுட்ப ஒப்படைகளையும் சமர்ப்பித்துள்ளார். 1979 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபையில் இணைந்து கொண்டதுடன் இலங்கையில் இதுவரையில் அமுல்படுத்தப்பட்ட மிகப் பாரிய பல்நோக்கு அபிவிருத்தி வேலைத்திட்டமாக இனங்காணப்பட்டுள்ள மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பல்வேறுபட்ட பதவிகளை வகித்து 35 வருடங்களுக்கு மேற்பட்ட கால அனுபவத்தையும் கொண்டுள்ளார். 2014 ஆம் ஆண்டில் இவர் இலங்கை மகாவலி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் நியமிக்கப்பட்டார். மகாவலி அதிகார சபையில் நிரந்தர ஊழியர் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிஉயரிய பதவி இதுவாகும்.

திரு. அலகந்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் வர்த்தக நிருவாகம் தொடர்பான (MBA) பட்டத்தையும், மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் அகழ்வு முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பாக இரு டிப்ளோமா பாடநெறிகளையும் தொடர்ந்துள்ளார். இவர் 1982 ஆம் ஆண்டு தொடக்கம் லண்டன் சிவில் பொறியியலாளர்களின் நிறுவனத்தின் இணைந்து அங்கத்தவராக செயற்படுவதுடன் இலங்கை பொறியியலாளர்களின் நிறுவனத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். இவர்


வருடாந்த அறிக்கை 2016

ஆரம்பப் பட்டத்தை இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து (BSc- Civil Engineering) (சிவில் பொறியியல்) பட்டத்தையும் பெற்றுள்ளார்.



### போராசியர் டப்.எல்.பி. பெரேரா அங்கத்தவர்

பேராசிரியர் டப்.எல்.பி பெரேரா பேராதனைப் பல்கலைக்கழத்தினால் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான கலைமானிப் பட்டம் (கௌரவ - முதற் பட்டம்) (BA-Honours - 1st Class) போன்று பொருளியல் தொடர்பான கலைமானி (MA) மற்றும் கலாநிதிப் பட்டத்தையும் (Ph.D) பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக சுமார் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கற்பித்தலில் அனுபவத்தை கொண்டுள்ள இவர் தற்போது பொறியியல் பேராசிரியராகவும் செயற்படுகின்றார்.

இவரது ஆராய்ச்சித் துறைகளுக்குரியதான சர்வதேச நிதி, நிதி சார்ந்த பொருளாதரம், அரசியல் பொருளாதாரம், பொருளியல் சார்ந்த எதிர்வுகூறல்கள் போன்றன உள்ளடங்கியுள்ளன. இவை சர்வதேச நிதி, வர்த்தகம் மற்றும் அது சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சி ஆக்கங்கள் மற்றும் பெரும் எண்ணிக்கையான நூல்களையும் வெளியிட்டுள்ளார். E-views, Minitab மற்றும் R-Studio Packages போன்றனவும் இவரது வெளியீடுகளாகும்.

பேராசியர் பிரசந்த பெரேரா பொதுநலவாய சபையின் கலாநிதிப் பட்டப் புலமைப்பரிசில், கொடிகார விருது, வாசலமுதலி ஏ.பி. திலகரட்னஆரச்சி புலமைப்பரிசில் மற்றும் இமாய் ஞாபகார்த்த புலமைப்பரிசில் உட்பட பரிசில்கள் மற்றும் பல விருதுகளையும் பெற்றுள்ள இவர் தேசிய கல்வி நிறுவகத்தின் பொருளியல் கற்கை பிரிவின் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார்.

இவர் சமீபத்தில் வெளியிட்ட சஞ்சிகையில் இலங்கையின் சிறுதோட்ட உரிமையாளர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களின் பிரச்சினைகள் மற்றும் சவால்கள், இலங்கையில் நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) தொடர்பான நூல், சார்க் இராட்சியங்களுக்காக நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பான மாதிரியினை வகுக்கும் ஆய்வு நூல், இலங்கை சுற்றுலாப் பொருளாதார விஞ்ஞானம், நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பான பொருளாதார ஆய்வு, இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் போன்ற விரிவான ஆய்வுகள் தொடர்பான பல கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இவர் சர்வதேச பொருளாதரம் தொடர்பான பல்வேறுபட்ட நூல்களையும் வெளியிட்டுள்ளார். இலங்கையின் வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்கள், அது தொடர்பான கோட்பாடுகள் உட்பட தெற்காசிய இராட்சியத்தின் பின்னணி, பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பின் இலங்கை மற்றும் தெற்காசியாவின் பொருளாதாரம் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள சவால்கள் மற்றும் நிலைமைகள் போன்றன இவரினால் வெளியிடப்பட்ட நூல்கள் ஆகும்.
தற்போது பேராசிரியர் பிரசன்ன பெரேரா இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக பதவி வகிக்கின்றார். தொடர்ந்தும் இவர் சிவில் விமான சேவை அதிகார சபையின் ஏனைய கம்பனிகளிலும் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார் 2015. ஒக்டோபர் மாதத்தில் இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக கடமைகளை பொறுப்பேற்பதற்கு முன்னர் இவர் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் உப தலைவராக மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் பிரஸ்பீரியஸ் கபிட்டல் அன்ட் அசூரன்ஸ் தனியார் கம்பனியின் தலைவராகவும் கௌரவ பதவியினை இவர் வகித்துள்ளார்.







# இலங்கை
# சிவில் விமான சேவை அதிகார சபை

## தூரநோக்கு

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையானதொரு இயைபியக்க உருவாக்கியாக இருத்தல்.

## குறிக்கோள்

தந்திரோபாயத் திட்டமிடல், பயனுறுதிமிக்க ஒழுங்கு விதிகள், இடரற்ற பாதுகாப்பானதொரு செயற்பாடு, சர்வதேச நியமங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை உறுதி செய்து கொள்ளும் திறன்மிக்க தேசிய சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் என்பவற்றினூடாக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

## குறிக்கோள் வாசகம்

“அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்”

## தத்துவம்

“இலங்கையின் வான்பரப்பு, இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஒரு பொதுச் சொத்தாக முகாமை செய்யப்படல் வேண்டும்”

## இலக்குகள்

- பாதுகாப்பு மற்றும் தற்காப்பு பெறுபேறு இலக்கினை எட்டுதல் அல்லது அதற்கு அப்பால் செல்லல்.
- தேவையான வழங்கலை பெற்றுக் கொள்ளல்.
- தொழில்சார் தரங்கள் மற்றும் தேர்ச்சி நிலையை எட்டுதல்.
- நம்பிக்கை மற்றும் வரவேற்புக்களை வெற்றிகொள்ளல்.
- அடைவு மட்டங்களை பேணல் மற்றும் முன்னேற்றங்களை எட்டுதல்.
- முன்னெடுக்கும் சகல செயற்பாடுகளிலும் உயரிய மட்ட உற்பத்தித் திறனை எட்டுதல்.
- சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கு அமைவான மட்டத்தில் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- சிவில் விமான சேவைத் திட்டமிடலை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை விருத்தி செய்யும் பணிகளுக்காக பலம்மிக்க அனுசரனையாளராகச் செயற்படல்.

## தந்திரோபாயங்கள்

- நியதிச் சட்டத் தொழிற்பாடுகளின் அமுலாக்கலை முன்னேற்றுதல் மற்றும் அதனுடன் நிலைப்படுத்தல் அத்துடன் சமூகக் கடப்பாடுகளை நிவர்த்தி செய்தல்.
- மிக முக்கியமான விமானப் போக்குவரத்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வினை அடையாளங்கண்டு அமுலாக்கல்.
- குறிப்பிட்ட கலாச்சார மாற்றத் தூண்டல்களை அறிமுகப்படுத்தல்.
- விமானப் போக்குவரத்து கைத்தொழிலுடன் கூட்டிணைவுடனும் பங்குபற்றுதலுடனும் தொழில்புரிதல்.
- ஒரு தெளிவான நோக்குடன் தொழிற்படலும் உள்ளார்ந்த மற்றும் வெளித்தரப்பினருடனும் வினைத்திறனான வகையில் தொடர்பாடலை மேற்கொள்ளல்.
- அனைத்து ஆவணங்கள், மூலங்கள் மற்றும் உள்ளக செய்முறைகளை பயனுறுதிமிக்க வகையிலும் மாறாத தன்மை கொண்டதாகவும் பேணுதல்.

## மதிப்பீடுகள்

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை மற்றும் அதன் ஊழியர்கள்**

- விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் அளித்து பாதுகாப்புக் கலாசாரத்தினை மேம்படுத்த ஈடுபடல்.
- இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கலைத் துரிதப்படுத்தல்.
- முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு விடயத்திலும் “முடியும்” என்ற நடத்தையினைக் கொண்டிருத்தல்.
- நம்பகத்தன்மை மற்றும் யதார்த்தத் தன்மை கொண்டிருப்பதனை இலக்காகக் கொள்ளல்.
- தொடர்ச்சியான முன்னேற்ற பணியில் விருப்பம் கொண்டோராகவும் மாற்றத்திற்கு உட்படக்கூடியவராகவும் இரத்தல்.
- வெற்றியை அடைவதற்கு ஒன்றாகப் பணியாற்றல்.
- திறந்த, நேர்மையுள்ள வெளிப்படைத்

தன்மையுள்ளோராக இருத்தல்.
- செய்யப்படும் ஒவ்வொன்றிலும் வினைத்திறனையும் நியதித் தன்மையையும் மேம்படுத்தல்.
- குழுவாக வேலை செய்வதன் மூலம் தனியொருவரை நம்புதல் மற்றும் மதிப்பளித்தல்.
- ஒவ்வொருவரின் பங்களிப்புக்கும் வெகுமதி சேர்த்தல்.
- சமூக பொறுப்புடமை மற்றும் கடமையுணர்வு என்பவற்றை அடையாளம் காணல்.
- மேற்கொள்ளும் பணிகள் தொடர்பில் மகிழ்ச்சிடைதல்.
- தொழில்சார் அணுகுமுறையில் பங்குகொள்ளல்.
- தொழில் சூழல் மற்றும் வீட்டுச் சூழலுக்கிடையில் சமநிலையொன்றைப் பேணல

## இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் முதன்மை இலக்குகள்

- வர்த்தக விமானப் போக்குவரத்து துறையில் பாரிய விபத்துக்களைத் தவிர்த்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்திற்கு செயற்பாடுகளில் கடத்தல் மற்றும் சட்டத்திற்கு முரனான தலையீடுகளைத் தவிர்த்தல்.
- பொதுவான விமானப் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்த்தல்.
- விமான நிலையத் தளத்தில் ஏற்படக்கூடிய இறப்பு, நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்.
- பொறியியல் மற்றும் பராமரிப்பு வேலைத்தளங்களின் விபத்துக்களை குறைத்தல்.
- விமான சேவையில் இடம்பெறக்கூடிய சம்பவங்களைக் கட்டுப்படுத்தல்.
- உரிய நேரத்திற்குப் புறப்படல் (On Time)
- சாதாரண வருமானம் பெறும் மக்களுக்கு வான்வழிப் பயணம் கிடைக்கக்கூடிய வகையில் வழிவகைகளை மேற்கொள்ளல்
- வான்வழிப் பயணத்தின் சேவைத் தரத்தினை விருத்தி செய்தல் மற்றும் ஆர்வம் ஊட்டுதல்.
- பாதுகாப்பு தேவைகளை கருத்திற்கொண்டு விமானத் தளத்தில் நெரிசலான வரையான பயணிகள் செய்முறையைக் குறைத்தல்.
- விமான போக்குவரத்தில் செயற்பாட்டுச் செலவீனத்தைக் குறைத்து வீண்விரயத்தைத் தவிர்த்தல்.
- விமான நெசவையினால் சூழலுக்க ஏறந்படக்கூடிய பதாக விளைவுகளை கட்டுப்படுத்த உதவுதல்.
- சிவில் விமான செவையின் பயன்மிக்க பெறுபேறுகள் தொடர்பில் பாடசாலை மாணவர்கஞ்கது அறிவுறுத்தல்.
- அடுத்த விமான சேவை தொழிலாளர் பரம்பரையினருபக்க பயளிற்சிகளை வழங்கதல்.

## எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள்

- அரசாங்கத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சிவில் விமானப் போக்குவரத்து துறைக்குரிய சர்வதேச கடப்பாடுகளை நிவர்த்தி செய்வதுடன் சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழிவுகளின் அமுலாக்கல் மற்றும் செயலாக்கத்தை நிலைநிறுத்துதல்.
- தடைகள் வரையறைகளிலிருந்து விடுதலை பெற்ற இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து துறையை சர்வதேச அங்கீகாரத்திற்குட்படுத்தல் மற்றும் அரசாங்கத்தின் விமான சேவை முறைக்கு எதிராக ICAO வினால் பாரிய தற்காப்பு தொடர்பான திருப்தியற்ற நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்த்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பு, தற்காப்பு, வினைத்திறன் மற்றும் ஒழுங்குமுறையொன்றினையும், வான் போக்குவரத்து முறைமையில் தொடர்ச்சியான பொதுமக்கள் நம்பிக்கைத் தன்மையையும் கட்டியெழுப்புதல்.
- இலங்கை வான் பரப்பில் இலங்கைப் பிரஜைகளின் நலனுக்காக உயர்ந்தபட்ச பயன்பாட்டினை பெற்றுக் கொள்ளல்.
- நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியை உருவாக்குதல்.
- காரணமற்ற போட்டித் தன்மையால் எழும் பொருளாதார விரயங்களிலிருந்து பாதுகாத்தல்.
- வான் மூலம் பயணிக்கும் மக்களினதும் மற்றும் விமான சரக்குப் பொருட்களின் கிடைப்பனவு மற்றும் நகர்வுகளை மேம்படுத்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் நம்பிக்கை மிக்க செயற்பாட்டு சேவைகளை வழங்குதல்.
- பாடசாலை மாணவர்களுக்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறை சார்ந்த கல்வியினை வழங்குதல்.
- சிவில் வானியல்சார் அனைத்துப் பிரிவுகளையும் மேம்படுத்தல்.
- வான் போக்குவரத்தின் போது மக்களின் சுகாதாரம் தொடர்பில் ஏற்படக்கூடிய அவதானங்களைக் குறைத்தல்.
- விமானப் போக்குவரத்தில் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்தல்



# வெளியீடுகள்

| வெளியீட்டு வகைகள் | வெளியீடுகள |
|---|---|
| **கொள்கை ஆலோசனை** | ✈ அரசாங்கத்திற்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்குதல்<br>✈ சட்ட மறுசீரமைப்பு<br>✈ விதிகளின் உருவாக்கம்<br>✈ அமுலாக்க நியமங்களின் உருவாக்கமும் பிரசுரித்தலும்<br>✈ விமானப் போக்குவரத்து கொள்கை உருவாக்கம்<br>✈ செயற்பாட்டு ஒழுங்குவிதிமுறைக் கையேடுகளின் உருவாக்கம்<br>✈ விமானப் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான திட்டங்களை வகுத்தல் |
| **பாதுகாப்பு மதிப்பீடு மற்றும்** | ✈ கீழ் குறிப்பிடப்பட்ட பணிகள் தொடர்பில் அவதான சான்றுப்படுத்துகை முகாமைத்துவம<br>✈ விமான நிலையம்/வான்துறையின் பாதுகாப்பு<br>✈ விமான சேவைத் துறையினரின் பாதுகாப்பு<br>✈ பொது விமானப் போக்குவரத்துத் துறையினரின் பாதுகாப்பு<br>✈ தனிநபர் அனுமதிப் பத்திரதாரரின் பாதுகாப்பு<br>✈ விமானப் பறப்புப் பயிற்சி பாதுகாப்பு<br>✈ வானூர்தி பராமரிப்புப் பாதுகாப்பு<br>✈ விமானப் போக்குவரத்து வழங்கல் சேவைப் பிரிவின் பாதுகாப்பு |
| **பாதுகாப்பு ஆய்வுத் தகவல்கள் மற்றும் மேம்படுத்தல்கள** | ✈ பாதுகாப்பு விசாரனை<br>✈ பாதுகாப்பு ஆய்வு<br>✈ பாதுகாப்புத் தகவல், கல்வி மற்றும் மேம்படுத்தல்<br>✈ வானூர்தி விபத்துக்கள் மற்றும் சம்பவ விசாரனை பாதுகாப்பு பரிந்துரைகளின் அமுலாக்கங்கள் |
| **அதிகாரமளித்தல்** | ✈ விமான சேவை அட்டவணை அங்கீகாரம்<br>✈ விமானப் போக்குவரத்துக் கட்டணங்களின் அங்கீகாரம்<br>✈ பயண முகவர்களை சான்றுப்படுத்தல்<br>✈ வானூர்திகளை பதிவு செய்தல்<br>✈ வானூர்தி உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கான அங்கீகாரம்<br>✈ உயர் கட்டட நிர்மானங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்<br>✈ பொது விற்பனை முகவர்களுக்கு அதிகாரம் வழங்குதல்<br>✈ சர்வதேச செயற்பாடுகளுக்கான உள்நாட்டு விமான போக்குவரத்து கம்பனிகளை பெயரிடல் |
| **பாதுகாப்பு மதிப்பீடு** | ✈ சிவில் விமானப் போக்குவரத்துத் துறை பாதுகாப்பு இடர் முகாமைத்துவம |
| **நடைமுறைப்படுத்தல்** | ✈ சட்ட ஒழுங்குமுறைகளை மீறல் மீதான விளைவுகள்<br>✈ பொதுச் சுகாதார மற்றும் சுத்திகரிப்புத் தேவைகளை அமுலாக்கல் |
| **அரசாங்கத்திற்கு உதவுதல்** | ✈ விமான போக்குவரத்து நிறுவனங்களிடமிருந்து சரக்குப் பொருள் ஏற்றி இறக்கும் கட்டணத்தை அறவிடல் |

## ஒழுங்கு முறை விடயத் துறைகள்

**2016 ஆம் ஆண்டில் சிவில் விமான சேவை அதிகார சபையின் மேற்பார்வை விடயப்பரப்பு கீழ்க் குறிப்பிட்டவாறு அமைந்துள்ளது.**

| ஒழுங்கு முறைத் துறைகள் | 2016 | 2015 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **விமான நிலையங்கள்** | | | |
| உள்நாட்டுத் தரை விமான நிலையங்கள் | 14 | 14 | 00 |
| உள்நாட்டு நீர் விமான நிலையங்கள் | 16 | 15 | 07 |
| சர்வதேச விமானத் தளங்கள் (RMA உடன்) | 03 | 03 | 00 |
| **விமான போக்குவரத்துக் கம்பனிகள்** | | | |
| உள்நாட்டு வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகள் | 08 | 08 | 00 |
| சர்வதேச வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகள் | 03 | 03 | 00 |
| சர்வதேச வெளிநாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகள் | 33 | 27 | 22 |
| **பயிற்சியளிக்கும் நிறுவனங்கள்** | | | |
| பறத்தல் பயிற்சிப் பாடசாலைகள | 08 | 09 | -11 |
| பொறியியல்/பராமரிப்புப் பாடசாலைகள | 06 | 05 | 20 |
| சிவில் விமான சேவை பயிற்சி மத்திய நிலையம் | 01 | 01 | 00 |
| **வானியல் சேவைகள் வழங்குனர்கள** | | | |
| வான் போக்குவரத்து சேவைகள் | 01 | 01 | 00 |
| வானியல் சார் தள உதவிச் சேவைகள் | 01 | 01 | 00 |
| வானியல் சார் தொலைத் தொடர்பு சேவைகள | 01 | 01 | 00 |
| வான் போக்குவரத்து பாதுகாப்பு சேவைகள் | 01 | 01 | 00 |
| தளம் சார்ந்த பணிகள் | 01 | 01 | 00 |
| உபசரணைச் சேவைகள | 01 | 01 | 00 |
| வானூர்தி- எரிபொருள் மீள்நிரப்பல் மற்றும் உராய்வு எண்ணெய் விநியோகம் | 01 | 01 | 00 |
| **விமானங்களைப் பதிவு செய்தல் மற்றும் விமானத் தகைமைகள்** | | | |
| கூடுதலான நிறைகொண்ட விமான வகைகளின் கிலோகிராம் 136,000 (ரூபா 300,000) அல்லது அதனை விட மேற்பட்ட நிறை (Heavy) | 14 | 16 | -13 |
| நடுத்தர நிறை கொண்ட விமான வகைகள் கிலோகிராம் 136,000 (ரூபா. 300,000) குறைந்த கி.கி 7000 (ரூபா. 15,500) விட மேற்பட்ட நிறை | 12 | 22 | -45 |
| இலகுரக விமானங்கள் கி.கி 7000 (ரூபா 15இ500) அல்லது அதனை விடக் குறைந்த (Light) | 49 | 39 | 26 |
| **செயற்கை பயிற்சி சாதனங்கள் - பறத்தற் பயிற்சி உபகரணங்கள்** | | | |
| உள்நாட்டு முழு அளவான பறப்பு மாதிரிகள் - Smiulators A 320 | 03 | 03 | 00 |
| வெளிநாட்டைத் தளமாக கொண்ட முழு அளவான பறத்தல் மாதிரிகள | 03 | 03 | 00 |
| விமானப் பயணக்கட்டுப்பாட்டு (ATC) இற்கமைவான செயற்பாடுகள் - ATC ஞஅரைடயவழசஎ | 01 | 01 | 00 |
| **தனிநபர் அனுமதிப் பத்திரம** | | | |
| பயிலுநர் விமானி அனுமதிப்பத்திரதாரர்கள | 247 | 154 | 60 |
| தனிநபர் விமானி அனுமதிப்பத்திரதாரர்கள் | 148 | 120 | 23 |
| வர்த்தக விமானி அனுமதிப்பத்திரதாரா | 381 | 292 | 30 |
| வான் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரதாரா | 394 | 352 | 12 |
| வான் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரதாரர்கள | 89 | 81 | 10 |
| வானூர்தி பராமரிப்புப் பொறியியலாளர் அனுமதிப்பத்திரதாரா | 03 | 03 | 00 |
| வானூர்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திரதாரர் | 483 | 472 | 02 |
| விமானங்கள் புறப்படுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும் அனுமதிப்பத்திரதாரர் | 204 | 199 | 03 |
| வானியல் தள செயற்பாட்டாளர் அனுமதிப்பத்திரதாரர் | 04 | 04 | 00 |
| விமான சிற்றறை உறுப்பினர் சான்றிதழ்தரார் | 1452 | 1240 | 17 |
| வானியல் ஆலோசகர்கள | 19 | 15 | 27 |
| உதவி வானியல் ஆலோசகர்கள் | 18 | 14 | 29 |
| தள ஆலோசகர்கள் | 18 | 16 | 13 |
| விமானப் புறப்படுகை பரிசோதகர்கள் | 07 | 07 | 00 |
| பெயரிடப்பட்ட ஒப்பீட்டு விமானிகள் | 39 | 41 | -05 |
| பெயரிடப்பட்ட வானியல் வைத்தியப் பரிசோதகர்கள | 05 | 05 | 00 |
| சான்றிதழ் பெற்ற விமான சேவைப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் | 703 | 626 | 12 |
| சான்றிதழ் பெற்ற விமான சேவை பாதுகாப்பு ஆலோசகர்கள் | 14 | 14 | 00 |
| **விமான போக்குவரத்து சேவை வழங்குனர்கள்** | | | |
| உலகளாவிய விநியோக சேவை வழங்குனர்கள் | 04 | 04 | 00 |
| வான் போக்குவரத்து சேவை வழங்குனர் அனுமதிப் பத்திரதாரர்கள் - வகை A | 538 | 533 | 01 |
| வான் போக்குவரத்து சேவை வழங்குனர் அனுமதிப் பத்திரதாரர்கள் - வகை B | 92 | 56 | 64 |
| பொது விற்பனை முகவர்கள் | 19 | 18 | 06 |
| **உயர்ந்த நிர்மாணங்கள** | | | |
| தொலைத் தொடர்புக் கோபுரங்கள் - உயர் கட்டடங்கள | 6619 | 6204 | 07 |
| **வானியல் அனுமதிப் பத்திரம்** | | | |
| இலங்கை வான் பரப்புக்கு மேலால் பறத்தல | 1007 | 921 | 09 |
| இலங்கையில் தரையிறக்குதல். | 1022 | 891 | 15 |




# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் நிருவாகம் மற்றும் பொறுப்புக்கள்

## அதிகார சபையின் செயற்பாடுகள்

அதிகார சபையின் பிரதான பொறுப்புக்குரிய பணிகளுக்கு இடையே கீழ்க் குறிப்பிடப்பட்டவைகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினை திட்டமிடுதலில் கௌரவ அமைச்சர் மற்றும் ஏனைய அரசாங்கப் பங்காளர்களின் கருத்துக்கள் பிரதிபலித்துக் காட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக உரிய தரப்பினருடன் கருத்து பரிமாறிக் கொள்ளல்.

சிவில் விமான போக்குவரத்துத் துறையின் கொள்கை மற்றும் இலக்குகளைத் தாபித்தல். சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் நோக்கங்களை எட்டுவதற்காக திட்டமிடப்பட்ட செயற்சாதனை மேற்பார்வைகளை மேற்கொள்ளல் மற்றும் உரியவாறு சிவில் விமான சேவைத்துறையில் அரசாங்கத்தின் நோக்கங்களை சித்தரித்து காட்டக்கூடிய வகையில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கூட்டாண்மை திட்டங்களை சமகாலப்படுத்தல்.

உத்தியோக பூர்வ அதிகாரத்தின் மூலம் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தேவையான பொறுப்புக்களை வழங்குதல்.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் தகைமைகள் மற்றும் தேர்ச்சிகொண்ட ஊழியர்களை பணிக்கு சேர்த்துக் கொள்ளல் மற்றும் அவர்களின் சம்பளம் உட்பட சேவை நிபந்தனைகளைத் தீர்மானித்தல்.

திட்டமிடல் மற்றும் ஊயுயு கூட்டாண்மை திட்டங்களை அமுல்படுத்தும் முன்னேற்றங்கள் தொடர்பாக கௌரவ அமைச்சருக்குப் பொறுப்புக் கூறல்.

## பணிப்பாளர் சபை

அதிகார சபையின் பணிப்பாளர் சபையானது கொள்கை விடயங்களில் பரந்தளவிலான எண்ணங்களை வெளிக்கொண்டுவரும் பொருட்டு வியாபாரம், சட்டம், விமானப் போக்குவரத்துத் துறையில் பரந்தளவிலான ஆற்றல் மற்றும் அனுபவத்தினைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கி உருவாக்கப்படுகின்றது.

பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் அதன் அனைத்து உறுப்பினர்களும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் மீது அதிகூடிய விருப்பத்தினை வெளிப்படுத்தக்கூடிய வகையில் அதன் நலனுக்கான செயற்பாடுகளில் ஈடுபட எதிர்பார்ப்பதுடன் அதிகார சபையினால் எடுக்கப்படும் சகல தீர்மானங்களுக்கும் இணங்கி செயற்பட வேண்டும் என்றும் தனித்தனியாக உறுப்பினர்களுக்கு அதிகார சபையின் செயற்பாடுகளுக்கு அப்பால் வேறுபட்ட நிருவாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
அதிகார சபையானது கொள்கைகளை உருவாக்குவதன் ஊடாக CAASL இன் இலக்குகளை அடைவதற்காக அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் பகிர்ந்தளிப்பதனூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களை வழிநடத்துகின்றது. அதிகார சபையின் முன்னோக்கிய திட்டங்கள் அதன் முழுமையான கூட்டாண்மைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றதுடன், ஒவ்வோர் ஆண்டின் ஆரம்பத்திலும் அதிகாரசபையால் அனுமதியளிக்கப்படும் வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டம், பயிற்சியளித்தல் திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்ட பாதீடு என்பன மூலம் வினைத்திறனான முறையில் கண்காணிக்கப்படுகின்றது. மேலும் அதிகார சபையானது குறிப்பிட்ட ஏற்பாடுகளை தற்போது கொண்டிராத அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு சபையினூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு வழிகாட்டலை வழங்குவதுடன், அவ்வாறான தீர்வுகளை நடைமுறைப்படுத்திக் கொள்வது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரது கடமையாகவும் காணப்படுகின்றது.

## அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரம்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் யாப்பிற்கமைய சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயற்படுவதற்கு சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்படுவார்.

அவர் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஊழியர் ஒழுங்கு விதிகள், நிபந்தனைகளுக்குப் உட்பட்டு செயற்பட வேண்டியதுடன், இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்தினால் அல்லது அச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டத்திற்கமைய அவருக்குப் பொறுப்பளிக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் சகலவற்றையும் மேற்கொள்ள வேண்டும். இதற்கு மேலதிகமாக அதிகார சபையின் பணிகள் தொடர்பில் பொது நிருவாகப் பணிகளும் அவருக்குப் பொறுப்பளிக்கப்படுகின்றன. சட்டத்தினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையியற் சபைப் பணிகள் தொடர்பில் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் சுயாதீனமாகச் செயற்படுவார் என்பது அதிகார சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் இவ்வாறான கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கு மற்றும் ஒப்பளவுகளுக்குட்பட்டு ஊயுயுளுடு இன் வளத்தைப் பயன்படுத்துவதற்கு சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு முடியும்.

## அதிகார சபையின் குழுக்கள்

குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கூடுதலாக கவனம் செலுத்தி அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக அதிகார சபையினால் பணியாளர் சபைக்குழு நிதிக் குழு மற்றும் கணக்காய்வுக் குழு என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மூன்று (03) நிலையான குழுக்கள் தாபிக்கப்படும். அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் ஒழுங்கு செய்யப்படும் முன்னேற்றங்களை உறுதிப்படுத்த மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் அதன் மூலம் உரிய இலக்குகள் மற்றும் நோக்கங்களை எட்டுவதற்கும் தேவையான அதிகாரங்கள் ஒவ்வொரு குழுக்களுக்கும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

மற்றும் பணிகள் தொடர்பில் தேவை எனக் கருதப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உரிய விடயங்கள் தொடர்பில் அல்லது அவ்வாறான சகல செயற்பாடுகள் தொடர்பிலும் பணிப்பாளர் சபைக் குழுவின் அதிகாரங்களைத் தொடர்ச்சியாக அமுல்படுத்த முடியும்.

## பணியாளர் சபைக் குழு

ஊழியர் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகார சபைக்கு பொறுப்புக் கூறுக் கட்டுப்பட்டுள்ளது.

- ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினை அங்கீகரித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அதனை மறுசீரமைத்தல்.
- ஊழியர்களது பணிநிலைப் பிரிவு மற்றும் சம்பள அளவுத் திட்டங்களைத் தீர்மானித்தல்.
- தெரிவு செய்தல்,ஆட்சேர்த்தல், நியமனம் வழங்குதல், பதவியுயர்த்துதல், பதவியிறக்குதல்,ஓய்வுறுத்துல் மற்றும் சேவை முடிவுறுத்தல் போன்றன தொடர்பான விடயங்களை கையாளல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகளை வெளியிடல் அல்லது மறுசீமைத்தல்.
- CAASL இற்காக அலுவலக ஒழுங்கு விதிமுறைக் கோவைகளை வெளியிடல்.
- ஊழியர்களுக்குரியதான ஒழுக்காற்றுப் பணிகள்
- தேவையான முறைக்கு மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் CAASL ஒருங்கிணைந்த திட்டங்களை மறுசீரமைத்தல் அல்லது சமகாலப்படுத்தல்.
- ஊயுயுளுடு இன் வருடாந்தம் அமுல்படுத்தும் வேலைத்திட்டங்கள், பயிற்சிக் கொள்கைகள், செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் CAASL வேலைத்திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- ஊழியர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்காக அங்கீகாரத்தை வழங்குதல் மற்றும் ஊயுயுளுடு இன் ஊழியர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குதல்.
- அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் கொள்வனவிற்கான அனுமதியினை வழங்குதல் மற்றும் அச் சொத்துக்களைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தவதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்கள ஊழியர்களுக்கான முன்கூட்டிய ஓய்வுறுத்தலுக்கான ந்'டாஈட்டுத் திட்டத்தை விருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை ஊழியர்களின் சமூக மற்றும் நலன்புரித் திட்டத்தை மேம்படுத்தல்.

இவ் ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. திரு. ஆனந்த விமலசேன (தலைவர்)
2. திரு. குசான் டி. அல்வி' (அங்கத்தவர்)
3. திரு. எச்.எம்.சி. நிமல்சிறி (அங்கத்தவர்)

## நிதிக் குழு

நிதிக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகார சபைக்கு பொறுப்புக் கூறக் கட்டுப்பட்டுள்ளது.

- வருடாந்த பாதீட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கான நிதிச் சட்டதிட்டங்கள் மற்றும் செய்முறைகளை உருவாக்குதல்.
- சொத்துக்கள், உபகரணங்களின் கொள்வனவு வசதிகள் மற்றும் சேவைகளின் கொள்வனவுகளை மேற்பார்வை செய்தல்
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கான வருமான வழிவகைகளை மேற்பார்வை செய்தல்.
- பெறுகைக்குரிய ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்குகளை வெளியிடல் மற்றும் அவ்வாறான பணிகளை மேற்பார்வை செய்தல்.
- ரூபா 10,000,000 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளை அங்கீகரித்தல்.
- ஏதாவது விடயங்களை பதிவளிப்பதற்கான அனுமதியினை வழங்குதல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையில் சிக்கன முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தல்.

நிதிக் குழுவானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. திரு. ஆனந்த விமலசேன (தலைவர்)
2. திரு. எச்.எம்.சி. நிமல்சிறி (அங்கத்தவர்)
3. கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா (அங்கத்தவர்)

## கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகார சபைக்கு பொறுப்புக் கூறக் கட்டுப்பட்டுள்ளது.

- உள்ளகக் கணக்காய்வு அலகு மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் என்பவற்றிற்கு பொறுப்புடமையினைத் தீர்மானித்தல்.
- நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீட்டு மேற்பார்வை செய்தல்.
- சீரான கால இடைவெளியில் செலவுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் வீணான செலவுகளைத் தவிர்த்தல் என்பதான செயற்திறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்
- வெளியகக் கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளை பேணுவதுடன் கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவ ஆவணங்களைப் பின்பற்றல்.
- நியாயாதிக்க நியதிச் சட்ட விதிமுறைகள் மற்றும் சுற்று நிருபங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.
- கணக்கியல் நியமங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுக்களை மீளாய்விற்குட்படுத்தல்.
- பரிகார நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, வெளியகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் முகாமைத்துவ ஆவணங்களை போன்றவற்றை மீளாய்வு செய்தல்.
- அரச தொழில் முயற்சிக் குழுவின் பரிந்துரைகளின் வழிகாட்டல்களின் அமுலாக்கலை மீளாய்வு செய்தல்.
- ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு குழுவின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பான அறிக்கையினை மீளாய்வு செய்தல்.
- தேவைக்கேற்ப அதிகார சபையினால் கேட்கப்படும் போது அனைத்துக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடல்.

கணக்காய்வுக் குழுவானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. திருமதி. அனுலா கரஸ்கம (அங்கத்தவர்)
2. பொறியியலாளர் சுதர்ம எலகந்த (அங்கத்தவர்)
3. கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா

## சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC)

சிவில் விமான சேவை போக்குவரத்து சேவைப் பணிகள் தொடர்பான பொதுமக்களின் அறிவினை விருத்தி செய்வதனை இலக்காகக் கொண்ட விசேட வேலைத்திட்டங்களை திட்டமிட்டு வெளியிடல் மற்றும் அமுல்படுத்துவதற்காக 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு தாபிக்கப்பட்டது. DGCA மற்றும் CEO இக்குழுவின் தலைமைத்துவத்தை வகிப்பதுடன் சிரே'ட பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் (கூட்டிணைந்த) அவருக்கு உகந்த நடவடிக்கை எடுக்கப்படும் DGCA இனால் பெயரிடப்பட்ட பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் CAASL பணியாளர் சபையினை உள்ளடக்கி நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்டதாக இது அமைகின்றது.

## பங்காளர் தரப்பினருடனான உறவினைப் பேணல

விசேடமாக இலங்கை சிவில் விமான சேவை போக்குவரத்து கௌரவ அமைச்சரின் எதிர்பார்ப்புக்களை முன்னிலைப்படுத்துவதற்கு நிறுவனத்தின் அக்கறை கொண்டோர் தொடர்பில் கொண்டுள்ள அதனது பதில் கூறும் பொறுப்பினை அதிகார சபையானது ஏற்றுக் கொள்கின்றது.

## அதிகார சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளிட்ட சிரே'ட முகாமையாளர்களின் செயற்பாடுகளை தெளிவுபடுத்தி வேறுபடுத்துவது சிவில் விமான சேவை அதிகார சபையின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளுக்கு காரணமாக அமையக்கூடிய பிரதான அம்சங்களாக அமைகின்றன.

அதிகார சபையானது உயர்மட்டக் கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களைத் தாபிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதுடன் அதன் பின்னரான மற்றும் இலக்குகள் அடையப்படுத்தலை நோக்காகக் கொண்டதாக செய்முறையை மேற்பார்வை செய்கின்றது. அதனைத் தொடர்ந்தும் அமுலில் உள்ள கொள்கைகள், செயற்பாட்டு ஒழுங்கு விதிகள் அல்லது விதிமுறைகளை உரியவாறு கட்டளைகள் வழங்கப்படாதுள்ள விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இதன் உயர் மட்டக் கொள்கைகள் மற்றும் உபாயச் செயற்பாடுகளின் பொறுப்புக்கள் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளிட்ட சிரே'ட முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம், வான் செலவுச் சட்டத்தில் அல்லது அதனால் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டங்களின் பிரகாரம் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள உரிய மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பிலான பொறுப்புக்கள் அதிகார சபைக்கு இல்லை என்பதுடன் அதிகார சபை அதிலிருந்து விலக்கிச் செயற்படுகின்றது.

இது எவ்வாறாக இருப்பினும் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் அரசாங்கத்திற்குள்ள அவ்வாறான மேற்பார்வை பொறுப்புக்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்குத் தேவையான பணியாளர் சபை, உபகரண வசதிகள் மற்றும் சேவைகள் உள்ளிட்ட இருப்பினும் அதற்கு வரையறையற்ற சகல வழங்கல் மற்றும் உதவிகள் அதிகார சபையினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதச நிறைவேற்று உத்தியோகத்தருக்கு சுருக்கமாக மற்றும் முழுமையாக அதிகாரங்கள் உட்பட பணிகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தும் வகையில் அதிகார சபை தமது பணிகளை தெளிவாக முன்னெடுக்கின்றது.

## பொறுப்புக் கூறும் செயற்பாடுகள்

அதிகார சபையின் தந்திரோபாயத் திட்டங்களை இலக்காகக் கொண்டு முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்காகவும் சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிகள், அதிகார சபையின் கொள்கைகள், மூல உபாய வழிகாட்டல்கள் உட்பட அதன் கூட்டிணைந்த திட்டத்தின் அபிலாசைகளுக்கமைவாக முகாமைத்துவத்திற்கு உட்படுத்தப்படுவதாகவும் செயற்படுத்தப் படுவதாகவும் அப் பணிகள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதாகவும் மேற்பார்வை செய்வதாகவும் உறுதிப்படுத்தும் வகையில் அதிகார சபையின் கூட்டங்கள் மற்றும் அதன் குழு நாளாந்தம் நடாத்தப்படுகின்றது.

## ஆர்வ ரீதியிலான முறன்பாடுகள் உள்ளகக் கணக்காய்வு

அதிகார சபை தொடர்பில் ஆவணம் பேணப்பட்டு அதன் அங்கத்தவர்கள் தமது பல்வேறுபட்ட வெளித் தொடர்புகளை வெளிப்பாட்டு ரீதியில் அறிக்கைப்படுத்துவதற்குள்ள பொறுப்புக்கள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு மாத்திரமின்றி CAASL இன் சகல ஊழியர்களுக்காகவும் அவ்வாறு தொடர்புபட்ட ஆவணங்களை முன்னெடுத்து செல்வதன் மூலமும் இப்பிரவேசம் சித்தரித்துக் காட்டப்படுகின்றது.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அதிகார சபையின் பணிகள் மற்றும் கடமைகளில் அனேகமானவை பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன் உற்பத்தித்திறன் மிக்க ஒழுங்கமைப்பு நிருவாகத்தை முன்னெடுத்தல் மற்றும் மேற்பார்வைகளை மேற்கொள்ளும் பொறுப்பு அதிகார சபையின் கீழ் தங்கியுள்ளது.

உள்ளக நிருவாக முறைக்கமைய அதிகார சபையின் உரிய நோக்கங்களை முன்னெடுப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் மற்றும் ஒழுங்கு விதிகள் உள்ளடங்கியுள்ளன. அதிகார சபை மற்றும் முகாமைத்துவம் இவ் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள பொறுப்பு வெளிப்பாட்டில் ஒப்பமிடுவதன் மூலம் அவர்களின் பொறுப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

CAASL இன் சகல ஒவ்வொரு பிரிவுகளினதும் உள்ளக நிருவாக விபரங்கள் நுணுக்கமாக பரிசோதனை செய்வதும் மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்புக்கள் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. CASSL இன் முழுமையான கட்டளைகள், பணிகள் மற்றும் அதன் மூலம் வழங்கப்படும் அனைத்து சேவைகளினதும் நிலைமைகளை முன்னெடுப்பதன் மூலம் அதிகார சபையின் தலைவருக்குமஈ கணக்காய்வுக் குழுவிற்கும் அங்கீகரிக்கப்பட்ட முறைகள் ஊடாக நேரடியாக அறிக்கைப்படுத்தப்படும் நிதி மற்றும் ஏனைய தகவல்களின் நம்பகத்தன்மை தொடர்பிலான பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருப்பது உள்ளகக் கணக்காய்வின் கருத்துக்கமையவாகும்.

## நிலையியற் சபை தேவைகளுக்கு அமைவான செயற்பாடுகள்

நிறுவனம் அனைத்து சட்டப் பிரமானங்களையும் பின்பற்றுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதன் பொறுப்புடமையினை அதிகார சபை வெளிப்படுத்துகின்றது. அதிகார சபையானது உடன்பாட்டு விடயங்களை முறை ரீதியாக அடையாளம் கண்டு கொள்ள நிகழ்ச்சித் திட்டச் செய்முறையொன்றின் மேம்பாடு மற்றும் செயற்படுத்துகை போன்றனவற்றிக்காக சிரேʻட முகாமைக்குப் பொறுப்புடமையினைப் பகிர்ந்தளித்துள்ளதுடன் அனைத்து ஊழியர்களும் அவர்களுடன குறிப்பாகத் தொடர்புடைய சட்டத் தேவைப்பாடுகள் பற்றிய அறிவினைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் உறுதி செய்கின்றது.

அரசாங்க அமைப்புக்கள்/திணைக்களங்களினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் அல்லது உத்தரவுகள் அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பில் உரியதாக்கிக் கொள்வது ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக கருத்திற் கொள்ளும் அடிப்படைக்கமைவானது என்று அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அதிகார சபையின் அவ்வாறான சுற்றறிக்கைகளின் உள்ளடக்கங்கள் மூலம் அதிகார சபையின் சட்ட ரீதியிலான அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளை அமுல்படுத்துவதில் ஏற்படக்கூடிய அழுத்தங்களை ஆராய்ந்து அவ்வாறான சுற்றறிக்கைளுக்குரியதாக கொள்ள வேண்டிய நிலைமைகள் மற்றும் அளவுகள் தொடர்பில் தீர்மானிக்கும் வரை அரசாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் ஒவ்வொரு சுற்றறிக்கைகளும் CASSL இன் முகாமைத்துவத்திற்கு உரியதாக்கிக் கொள்ளப்படமாட்டாது.

அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளையும் அதிகார சபை உரியதாக்கிக் கொள்வது தொடர்பில் சமகாலப்படுத்தப்பட்ட ஒப்பீட்டுப் பட்டியலை பேணும் பொறுப்பு CAASL இன் ஒருங்கிணைந்த பணிகள் மற்றும் பொருளாதார மேற்பார்வைப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளன.

## விழுமியச் செயற்பாடுகள்

உருவாக்கப்பட்ட ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில் அதிகார சபையானது சிறந்த கூட்டுத்தாபன ஆளுமைத் தத்துவத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுக்க விழுமிய நடத்தைகளின் உயரிய நியமங்களை அனைத்து ஊழிர்களும் பின்பற்றுகின்றார்களா என்பதை ஒழுக்குமுறையில் கண்காணித்து வருகின்றது. ஒழுக்க விழுமிய சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள தத்துவங்களுடன் இணங்காதிருப்பவற்றை வெளிக்காட்டக்கூடியதான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பின்பற்றல் போக்கை கண்காணித்தல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் அல்லது வேறு ஏதாவது அறிக்கைகள் அல்லது, அறிகுறிகள் போன்றவற்றினூடாக ஒழுக்க விழுமிய நியமங்களுடன் உடன்பாடுகளைக் கண்காணித்தலானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிறந்த கூட்டிணைவான பிரஜைகள் அதிகார சபையில் ஈடுபாடு கொண்டுள்ளனர். அதாவது பல்வேறுபட்ட சமூகங்களிலுமுள்ள அனைத்து பிரஜைகளின் நெறிமுறைகள், ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் போன்றவற்றுடன் இசைவாக்கமடைந்த மனநிலை ஒன்றுடன் செயற்படும் வகையிலான அற்பணிப்பு ஒன்றினை மேற்கொள்ளல் மற்றும் அதிகார முன்னெடுக்கும் கைத்தொழில் மற்றும் அதற்கு அப்பால் அனைத்து சமூகங்களின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் என்னும் அறிவுடன்கூடிய அதன் ஊழியர்களை உள்ளடக்கியதாக அதிகாரசபை காணப்படுகின்றது.





Safe and Efficient Skies for all

# இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

## சிரேஷ்ட முகாமைத்துவக் கட்டமைப்பு

2013 நவம்பர் 22 ஆம் திகதி இலங்கை விமான சேவை அதிகார சபையினால் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினை மறுசீரமைத்து அங்கீகரிக்கப்பட்ட நிறுவன முகாமைத்துவ உத்தியோகத்தர்கள். விமான சேவை அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ கட்டமைப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு இதில் உள்ளடங்கியுள்ளன.



# செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம்

## அதிகார சபை மற்றும் அதன் குழுக்கள்

### பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்

கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு ஆனந்த விமலசேன மற்றும் குசான் டி. அல்வீஸ் ஆகியோர் தொடராக தலைவர் மற்றும் உப தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

### CAASL இன் கூட்டங்கள்

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை CAASL இன் மற்றும் அதன் மூலம் மேற்பார்வை செய்யப்படும் சிவில் விமான சேவை கைத்தொழிலின் முன்னேற்றங்கள் உட்பட நலனுக்காக அதிகார சபையினால் 14 கூட்டங்கள் நடாத்தி யோசனைகள் அங்கீகரிக்கப்பட்டன. CAASL இன் பணியாளர் சபையின் ஒரு குழு ஒரு தடவை கூடியதுடன் கணக்காய்வுக் குழு 05 தடவைகள் கூடியது.

## விபத்துப் பகுப்பாய்வுப் பிரிவு

விபத்து விசாரனைப் பிரிவின் பிரதான கடமைகள் மற்றும் பணிகளாக அமைவது இலங்கைக்குள் இடம்பெறும் விமான விபத்துக்கள் மற்றும் பாரிய சம்பங்கள் தொடர்பாக விசாரனைகள் நடாத்துவதற்காக தேவையான சொத்துக்கள் மற்றும் பணி ஒழுங்கு விதிகளைக் கொண்டு ஊயுயுளூடு ஐ தயார்படுத்தல் மற்றும் அதன் மூலம் அதிகார சபைக்கு அதற்காகத் தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் இலங்கைத் தேசத்திற்குள் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானங்களின் கையாளுகை மூலம் விமான அனர்த்தங்கள், பாரிய சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. இது இலங்கை விமான விபத்து பாரிய சம்பவங்கள் இடம்பெறாத 10 வது தொடர் ஆண்டாகும்.

2016 ஆம் ஆண்டில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்ட இரு வகையான விமானங்களின் செயற்பாடுகள் ஊடாக 294 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த சம்பவங்கள் 282 இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானங்களுடன் தொடர்புபட்டதுடன் எஞ்சிய 12 வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் தொடர்பில் இலங்கைக்குள் இடம்பெற்ற சம்பவங்களாகும்.

இதன் சிறிய சம்பவத்திற்கிடையில் ஒரு வகை மூலம் பதிவாகிய அதிகூடுதலான சம்பவங்களின் எண்ணிக்கையான 84 பறவைகள் மோதுண்ட விபத்துக்களாகும். இவ்வாறு பதிவாகிய பறவைகள் மோதுண்ட விபத்துக்களில் 28 பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலும், 06 இரத்மலானை-கொழும்பு விமான நிலையத்திலும், 05 மத்தள ராஜபக்' சர்வதேச விமான நிலையத்திலும் இடம்பெற்றுள்ளது. ஏனைய பறவைகள் மோதிய விபத்துக்கள் இலங்கைக்கு வெளியே இடம்பெற்றுள்ளது. 78 சிறிய சம்பவங்களில் ATM/COM சார்ந்த சம்பவங்களுக்கிடையே 58 முறைமை/உள்ளீட்டுச் செயற்பாடுகள் அற்றதாக அல்லது பின்னடைந்த செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட நிகழ்வுகளாகும். ATM/COM சம்பவங்கள் 78 இல் 75 ATS அலகுடன் தொடர்புபட்ட வீழ்ச்சியடைந்தவைகளாகும். இதன் இணைப்புக்கள் வீழ்ச்சியடைவதில் கூடுதலான எண்ணிக்கை மும்பாய் வானியல் தகவல் வலயத்தின் (FIR) இன் பதிவாகியது.

ஶ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் A320-200 மற்றும் மிஹின் லங்கா A321 விமானங்கள் தொடர்பில் பறக்கும் போது (inflight) இடம்பெற்ற இரண்டு சம்பவங்கள் தொடர்பாக மாத்திரம் விசாரனைகள் பூர்த்தி செய்யப்பட்டன. தேவையான முறையில் திருத்தியமைக்கும் செயற்பாடுகளுக்காக இவ்விரு விசாரனைகளினதும் இறுதி அறிக்கை அமைப்பிற்கிடையே விநியோகிக்கப்பட்டது.

விமான விபத்துக்களை ஆய்விற்குட்படுத்தக்கூடியதாக சர்வதேச தரங்களுக்கமைய சுயாதீன விமான விபத்து ஆய்வுப் பணியகத்தை தாபிக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இப்பணியகத்தை தாபிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் விமான விபத்து விசாரனைப் பணியகத்தின் சட்டத்தில் முதலாவது வரைபு ஏற்கனவே சட்ட வரைஞர்களின் மீளாய்விற்காக கிடைக்கப்பெற்றுள்ளது.

தொண்டர் மற்றும் இரகசிய விமான சேவைச் சம்பவங்களை அறிக்கைப்படுத்துவது தொடர்பில் புதியதாக அமுல்படுத்தும் தரங்கள் (IS-052) வெளியிடப்பட்டது. விமான சேவைச் சம்பவங்களை அறிக்கைப்படுத்துவதற்கு உரியதாக அமுல்படுத்தும் தரம் (IS-006) மறுசீரமைக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் நடாத்தவுள்ள ICAO - USAP இற்காக தயார்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இது தொடர்பில் உரிய அரச விமான சேவைக் கணக்காய்வு கேள்விக் கொத்து மற்றும் விபத்து விசாரனைக் கணக்காய்வு (AIG) துறைக்குரியதான ஒப்பீட்டுப் பட்டியல் சமகாலப்படுத்தப்பட்டது. AIG கணக்காய்வு துறைக்குரிய கூட்டிணைந்த வினாக்கள் (Protocal Questions) தொடர்பில் சுய மதிப்பீடுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| ABC | அசாதாரண ஓடுபாதையின் தொடர்புகள |
| ATM/CNS | விமான முகாமைத்துவம் (ATM) அல்லது தொடர்பாடல்கள் அல்லது தேடல்கள் |
| BIRD | பறவைகள் மோதுதல |
| CABIN | மண்டப அறை பாதுகாப்புச் செயற்பாடுகள |
| F-NI | தீ/புகைத்தல் (அளுத்தங்கள் அற்ற) |
| FUEL | எரிபொருள் சார்ந்த |

2016 ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்ட அனைத்து விமானங்கள் இலங்கை மற்றும் வெளிநாடு உட்பட




| | |
|---|---|
| GCOL | தள மோதல்கள |
| MAC | வானத்தை அண்மித்த/ACS விபத்து எச்சரிக்கை/விரிசலைக் குறைத்தல் (அண்மித்த மேல் வானில் மோதல்) |
| MED | மருத்துவம் |
| OTHER | ஏனையவை |
| RAMP | தளக் கையாளுகைகள் |
| RI | ஓடுபாதை செயலிழத்தல்/ வாகனங்கள், விமானங்கள் அல்லது நபர்கள் |
| SCF-NP | ளுமுறைமை/உள்ளீடுகள் செயலிழத்தல் அல்லது கோளாறு கொண்ட செயற்பாடுகள் (சக்தி வளம் அல்லாத) |
| SCP-PP | சக்தி வளம் செயலிழத்தல் அல்லது கோளாறு கொண்ட செயற்பாடுகள |
| SEC | பாதுகாப்பு சார்ந்த |
| TURB | கொந்தளிப்புக்கள் |
| WILD | மோதல் - வன ஜீவராசிகள |
| WSTRW | காற்றுத் திசை மாறல் அல்லது இடி மின்னல் தாக்கல |

## தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

தர மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான நோக்கமான அமைவது சிவில் விமான சேவை அதிகார சபையின் தர முகாமைத்துவத்தை விருத்தி செய்தல் மற்றும் வலுவான பரிசோதனைகள் மற்றும் சமநிலையினைப் பயன்படுத்துவதாகவும் தேவையான நிருவாக மற்றும் மேற்பார்வையினைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதாகவும் உறுதிப்படுத்துவதாகும். உரிய யாப்பு ரீதியிலான தேவைகளுக்கமைவான செயற்பாடுகளை பேணுவதற்கான அளவினை மீளாய்விற்கு உட்படுத்தல் மற்றும் மதிப்பீடுகள் மூலம் அமைப்பின் அவதான முகாமைத்துவம், உள்ளக நிருவாக சூழல் மற்றும் நிருவாக முறைகள் தொடர்பாக உறுதிப்படுத்துவதும் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் மூலம் இடம்பெறுகின்றது. தர மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அடிப்படைக்கமைய மீளாய்வுகளை மேறகொள்ளல் மற்றம் மேற்பார்வைகளை மேற்கொண்டு CAASL இன் கணக்கீடு மற்றும் நிதியினை அறிக்கைப்படுத்தலின் போது நம்பகத்தன்மை மற்றும் உள்ளக நிருவாகங்களின் வலுவான நிலைமையினை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் 10 தொழில்நுட்ப ஆய்வுகள் மற்றும் 12 நிதிக் கணக்காய்வுகள் உள்ளிட்ட 14 ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

**முதலாவது அட்டவணை**
**2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| மானிட வளம் | 33% |
| தொழில்நுட்பம் | 25% |
| தரம் | 12% |
| நிதி | 30% |




**2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை**

## ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டப் பிரிவு

செயற்பாடு மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள CAASL இன் ஆராய்ச்சி அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் விசேட வேலைத்திட்டப் பிரிவின் பிரதான பொறுப்பாக அமைவது சிவில் விமான சேவைத் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் பரவலாக்கலுக்காக ஆராய்ச்சிகளை நடாத்தல், இனங்காணப்பட்ட துறைக்காக அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல் மற்றும் CAASL இனால் ஆரம்பிக்க வேண்டிய எந்தவொரு வேலைத்திட்டங்களையும் பொறுப்பேற்று அமுல்படுத்துவதாகும். இது 2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பு மீள் கட்டமைப்புக்களின் பயனாக

CAASL இல் தாபிக்கப்பட்ட புதிய பிரிவாகும். மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் விசேட வேலைத்திட்டப் பிரிவில் பணிப்பாளர் பதவிக்கு போதியளவு தகைமை கொண்ட அனுபவம் கொண்ட ஒருவர் நியமிக்கப்பட்டார். 2016 ஆம் ஆண்டில் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### CAASL இற்காக தலைமையகக் கட்டடத்தை நிர்மானித்தல்

கட்டுநாயக்கா CAASL தலைமையகக் கட்டடத்தை நிர்மானிக்கும் ஒப்பந்தம் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (SEC) இற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டு இறுதியில் நிர்மானப் பணிகள் இடம்பெற்றதுடன் அதுவரையில் அதன் நிர்மானப் பணிகளின் பௌதீக முன்னேற்றம் 37% மாகும். SEC உடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய இக் கட்டடம் 2017 நடுப்பகுதியில் நிர்மானப் பணிகளைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப் படுகின்றது.

### 53 வது DGCA சம்மேளனத்தின் ஒழுங்கமைப்புப் பணிகள்

ஆசிய பசுபிக் வலயத்தின் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகங்களின் 53 வது மாநாடு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1-5 காலப்பகுதிக்குள் மிகவும் வெற்றிகரமான முறையில் இலங்கையில் நடாத்தப்பட்டது. மாநாடு பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி ஆகியோர் தலைமையில் அங்குராட்பண நிகழ்வு இடம்பெற்றது. சிவில் விமான சேவைகள் அமைச்சர் உட்பட மேலும் பல அமைச்சர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். DGCA மாநாடு ஆசிய பசுபிக் வலயத்தில் ICAO அனுசரனையின் கீழ் வருடாந்தம் நடைபெறும் அதிஉயர் மாநாடு ஆகும். இம் மாநாட்டுக்கு அனுசரனையினை வழங்குவதற்காக பல இராட்சியங்கள் குறிப்பிட்ட காலம் காத்திருக்கும் பட்டியலில் இருக்க வேண்டியுள்ளது. ICAO வினால் இந்த சந்தர்ப்பத்தை வழங்குவற்கு முன்னர் மாநாட்டு அனுசரனை வழங்குவதற்காக உரிய இராட்சியத்தில் காணப்படும் இயலுமைகள் தொடர்பில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1990 ஆம் ஆண்டு இம் மாநாடு முதற் தடவையாக இலங்கையில் நடாத்தப்பட்டதன் மூலம் 26 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் இதற்கு அனுசரனையினை வழங்கும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்தமை பெரும் கௌரவமாகும். இராட்சியங்களினால் உலகளாவிய சமூகத்திற்கு முன்னால் தத்தமது உள்நாட்டு விமான சேவைகளின் பக்கத்தோற்றத்தை காட்சிப்படுத்த இது வாய்ப்பாக கொள்ளப்படுகின்றது. இது விமான சேவை அபிவிருத்திக்கு அத்தியாவசிய காரணியாகும். சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் 76 வருட கால வரலாற்றில் முதற் தடவையாக ICAO மத்திய சபையின் தலைவர் மற்றும் அதன் பொதுச் செயலாளர் ஆகிய இருவரும் இம் மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு வருகை தந்தனர். ஆரம்பக் கூட்டத்தில் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி, கௌரவ பிரதமர், கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் ஆகியோரின் பங்கேற்புக்கு விசால ஊக்குவிப்பு வழங்கப்பட்டதுடன் இதன் மூலம் விமான சேவையின் பாதுகாப்பினை உயரிய மட்டத்திற்கு மேம்படுத்தி விமான சேவை அபிவிருத்தி தொடர்பில் இராட்சியங்கள் காண்பிக்கும் அற்பணிப்பு அதிஉயரிய மட்டத்தில் ஐஊயுழு உத்தியோகத்தர்களைப் போன்று உலகளாவிய விமான சேவை சமூகத்திற்கும் சிறந்த முறையில் விளங்கிக் கொள்ள முடிந்தது.

34 வெளிநாட்டு இராட்சியங்கள் மற்றும் 10 சர்வதேச அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி 236 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இம் மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டு அதிதிகளின் மொத்த எண்ணிக்கை 306 ஆகும். (RASG/6 கூட்டம்-187) (RASCF - 04 கூட்டம் - 78) (DGCA சம்மேளனம் 230) மற்றும் (அழைத்து வரப்பட்ட நபர்கள் - 50) வெளிநாட்டு அதிதிகளுக்காக தங்குமிடக் கட்டணம் (வெளிநாட்டு பிரதிநிதிகளின் தங்குமிடக் கட்டணம் CAASL இனால் அன்று அவர்களினால் செலுத்தப்பட்டது) உரிய அனுசரனைகள் மற்றும் பெறுமதிமிக்க பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டில் செலவிட்ட நிதி அளவு மூலம் நாட்டுக்கு கிடைக்கப் பெற்ற அந்நிய நாட்டுச் செலாவனியின் அளவு 32.12 மில்லியன் ரூபா (மொத்த அடிப்படையில்) அது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக CAASL இற்கு அறியக் கிடைக்காத மற்றுமொரு செலவினத்தை காண முடிந்தது. இம் மாநாடு எமது சிவில் விமான சேவைகள் மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கும் பெரும் வாய்ப்பாக அமைந்தது. இதன் மூலம் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு நீண்ட கால அடிப்படையில் எட்டப்படும் பிரதிலாபம் மிகப் பெரியதாகும் கணிப்பீடு செய்ய முடியாது. உலகளாவிய விமான சேவை வரைபில் இலங்கைக்குக் கிடைக்கப் பெற்றிருந்த இடத்தினை மேம்படுத்துவதற்கு இம் மாநாட்டின் மூலம் பெரும் உதவிகள் கிடைக்கப்பெற்றன. தொடர்ந்தும் இம்மாநாட்டின் மூலம் முன்னணி உலகாளவிய மற்றும் பிராந்திய விமான சேவைத் தொழிலாளர்களுக்கிடையிலான தொடர்பினைப் பேணுவதற்கு உள்நாட்டு பிரதிநிதிகளுக்கு விரிவான வாய்ப்புக்கள் வழங்கப்பட்ட இந்த மாநாடு இலங்கையின் புதிய பரம்பரையினருக்கு விமான சேவைத் தொழிலாளர்களாக மாற்றம் பெறுவதற்கான வேலைத்திட்டங்கள் (NGAP) தொடர்பாக பங்கேற்போருக்கு இடையே கூடுதலான உணர்வுகள் மற்றும் ஆர்வங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ் வேலைத்திட்டத்தை ஒழுங்கு செய்தமை தொடர்பில் ICAO எந்தளவு மகிழ்ச்சி அடைந்தது என்பது தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கிடையே வானியல் சேவை ஊக்குவிப்பு கூடியதாக இலங்கை எட்டியுள்ள வெற்றிகளைக் காட்சிப்படுத்துவதற்காக 39 வது ICAO மாநாட்டின் போது ICAO தலைமையகத்திற்குள் அறவீடுகள் இன்றி இலங்கையின் கண்காட்சிக் கூடங்களை காட்டிப்படுத்த பொதுச் செயலாளர் இணக்கம் தெரிவித்தார்.

### சிவில் விமானப் போக்குவரத்து சேவையினை அறிவுறுத்துவற்கான வேலைத்திட்டங்கள்

விமான சேவையின் எதிர்கால மனித வலுத் தேவையினை நிவர்த்தி செய்வதற்காக அடுத்த பரம்பரையின் விமான சேவைத் தொழிலாளர்களை தயார்படுத்துவதற்கான செயற்திட்டமும் (NGAP)



இலங்கையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான எதிர்கால நடவடிக்கையாக விமான சேவை தொடர்பாக பாடசாலை மாணவர்களின் அறிவினை விருத்தி செய்வதற்காக விசேட வேலைத்திட்டப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) தாபிக்கப்பட்டது. பாடசாலைகளில் சிவில் விமான சேவை தொடர்பில் அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல், பாடசாலைகளில் வானியல் சேவை கழகங்களைத் தாபிப்பதற்கு ஆர்வமூட்டல் மற்றும் சிவில் விமான சேவைத்துறை தொடர்பாக பாடசாலை மாணவர்களின் அறிவினை விருத்தி செய்யும் நோக்குடன் "குவன் சர" என்ற பெயரில் 03 மாதத்திற்கு ஒருமுறை விமான சேவை கல்வி தொடர்பான சஞ்சிகையினை வெளியிட CADEC இனால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் 02 பாடசாலை வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டு இறுதியளவில் பாடசாலைகளில் 584 வானியில் சேவைக் கழகங்களைத் தாபிக்க அனுசரனைகள் வழங்கப்பட்டன. 03 குவன் சர சஞ்சிகைகள் வெளியிடப்பட்டதுடன் இச் சஞ்சிகை 3100 பாடசாலைகளுக்கிடையே இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

### செயலமர்வு/கூட்டங்களுக்காக உதவி சேவைகளை வழங்குதல்

2016 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட கூட்டங்கள்/பயிற்சி அமர்வுகளுக்காகத் தேவையான துணை நிலை சேவைகளை வழங்க பங்களிப்புக்கள் செய்யப்பட்டன.

#### ➢ *தெற்காசிய வலயத்தின் விமான சேவைப் பாதுகாப்புக் குழுக்களின் 18 வது கூட்டம் (SARAST)*

SARAST கூட்டம் COSCAP-SA நிபுனர்களின் உதவியுடன் 2016 பெப்ரவரி 17 - 18 ஆகிய இரு தினங்களில் இலங்கையில் நடாத்தப்பட்டது இதில் பங்களாதேஂ', பூட்டான், நேபாளம், பாக்கிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகிய 05 இராட்சியங்களிலிருந்து வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் செயற்பாட்டுப் பணிகளாக அமைந்தது அங்கத்துவ இராட்சியங்களினால் APRAST காப்பு ஒழுங்கு விதிமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பில் தர அறிக்கையினை வழங்குவதாகும். ஏதேனும் ஒரு அங்கத்துவ இராட்சியத்திற்கு இதற்காக உதவி அவசியமாயின் அது தொடர்பில் குறிப்பிட்டு அவர்களின் தேசிய பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பில் குறிப்பிட்டு சமகாலப்படுத்தப்பட்ட தர அறிக்கையினை கூட்டத்தின் போது சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.

#### ➢ *நீரியல் சார்ந்த விமானத் தளங்களில் சிறிய அமுல்படுத்தல் குழுவின் 2 வது கூட்டம்*

CAASL நீரியல் சார்ந்த விமானத் தளங்களின் சிறிய அமுல்படுத்தும் குழுவின் (WASWG) இரண்டாவது கூட்டம் 2016 பெப்ரவரி 29 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 02 ஆம் திகதி வரை கொழும்பு, களதாரி ஹோட்டலில் நடாத்தப்பட்டது. கூட்டத்தின் நோக்கமாக அமைந்தது. APAC வலயத்தின் நீரியல் சார் விமானத் தளங்களுக்காக தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகள் தாபிக்கப்படுவதாகும். இந்தோனேசியா, மாலைதீவு, ஐக்கிய இராட்சியம், ICAO வலய அலுவலகங்கள் மற்றும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 26 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

#### ➢ *பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள் (SMS) 1 - கட்டம்*

ICAO தேவைகளுக்கமைய இராட்சியங்களினால் பாதுகாப்பு முகாமைத்துவம் (SMS) அமுல்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி வேலைத்திட்டத்தின் CAASL இன் தொழில்நுட்ப பணியாளர் சபை முழுமையாக SMS தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டனர். CAASL இனால் இப்பயிற்சி வேலைத்திட்டம் 2016 பெப்ரவரி 23 - 26 காலப்பகுதிகளில் நடாத்தப்பட்டது.

### வெளியீடுகள்/அறிக்கை

கூட்டிணைந்த திட்டங்களை வெளியிடல், சிவில் விமான சேவை அதிகார சபையின் வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல், அவ் அறிக்கைகளை வெளியிடல் மற்றும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் போன்றவைகள் உட்பட உரிய அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய கைத்தொழில் சேவையாளர்களுக்கிடையில் இது விநியோகிக்கப்படுகின்றது.

கௌரவ அமைச்சருக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கக்கூடிய வகையில் 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்திற்கமைய 2015 வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

பௌதீக மற்றும் முன்னேற்ற அறிக்கை, குழுநிலை விவாத வரவு செலவு அறிக்கை, பரவலாக்கல் அபிவிருத்தி அறிக்கை போன்றன கோரப்படும் சந்தர்ப்பங்களில் நிரல் அமைச்சிற்கும் மத்திய வங்கிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

### சிவில் விமான சேவைப் புள்ளிவிபர வேலைத்திட்டங்கள்

CAASL இன் எதிர்கால தேவைகளை மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்காக நிரல் அமைச்சின் மற்றும் ஏனைய அமைப்புக்களினால் கிடைக்கும் கோரிக்கையை நிவர்த்தி செய்வற்காகவும் CAASL இன் செயற்சாதனை புள்ளிவிபரங்கள் தொடர்பான புள்ளிவிபர ஆவணங்கள் மாதாந்தக் கூட்டம் இப்பிரிவினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.

### CAASL இன் ஊடகச் செயற்பாடுகள் மற்றும் ஊக்குவிப்புக்கள்

ஊடகச் செயற்பாடுகள் மற்றும் விமான சேவை ஊக்குவிப்புக்கள் தொடர்பாகத் தேவையான கல்வி மற்றும் அறிவுறுத்தல் செயற்பாடுகளை ஒழுங்கு செய்து RDPASP பிரிவு ஊடகச் செயற்பாடுகள் மற்றும் விமான சேவை உக்குவிப்புக்களை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டுக்குள் 26 விசேட சஞ்சிகைகள் பிரசுரிக்கப்பட்டதுடன் செய்தியாளர் மாநாடு மற்றும் பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

# வான்பரப்பு மற்றும் பாதுகாப்பு மேற்பார்வைக் கிளை

## விமானப் பாதுகாப்புப் பிரிவு

விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவின் அடிப்படைப் பணிகளாக அமைவது சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய ஒழுங்குக் கோவைகள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிகளை வெளியிடுவதன் மூலம் சிவில் விமான சேவைக்கு எதிராக சட்ட விரோத தலையீடுகளை குறைக்கும் அடிப்படை நோக்கத்துடன் இலங்கை சிவில் விமான சேவைப் பாதுகாப்பினை மேற்பார்வை செய்தல் மற்றும் விமான சேவைப் பாதுகாப்பினை வழங்குவதற்கு தலையீடு செய்துள்ள சகல அமைப்புக்கள் மற்றும் நபர்களுக்கு முதற் தடவையில் சான்றுப்படுத்தல் மற்றும் தொடர்ச்சியாக தேடுதல்களை மேற்கொள்வதாகும்.

2016 ஆம் ஆண்டில் விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவு இலங்கை பாதுகாப்புத் துறையிலுள்ள சகல முறையிலான முன்னோடிப் பணிகளுக்கும் தலையீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டன. இப்பிரிவின் பரிசோதகர்களினால் 2016 விமான சேவைப் பாதுகாப்பு தொடர்பான தேடல்கள் மற்றும் Av.Sce. நபர்களை உறுதிப்படுத்துவதற்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதற்கமைய தர நிருவாக மற்றும் தர உறுதிப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

### Av.Sce. ஊழியர்களை உறுதிப்படுத்தல் மற்றும் மீளச் சான்றுப்படுத்தல

2016 ஆம் ஆண்டில் விமான நிலைய/விமானச் செயற்பாட்டாளர்களில் கீழ்க் குறிப்பிடப்பட்ட Av.Sce. நபர்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கையினை உறுதிப்படுத்தல் மற்றும் மீளச் சான்றுப் படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- ✈Av. Sec. முகாமையாளர்களை மீளச் சான்றுப்படுத்தல் - 07
- ✈Av. Sec. பரிசோதகர்களை மீளச் சான்றுப்படுத்தல - 07
- ✈Av. Sec. காப்பு (ளுஉசநநநெசள) சான்றுப்படுத்தல் - 62
- ✈Av. Sec. காப்பு (ளுஉசநநநெசள) மீளச் சான்றுப்படுத்தல - 357

மேற்கூறப்பட்ட தர நிருவாக மற்றும் தர உறுதிப்பாட்டுப் பணிகளுக்கு மேலதிகமாக பிரிவினால் கீழ்க் குறிப்பிட்ட முக்கியத்துவம் மிக்க பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன

### BIA இன் விமான சேவைப் பாதுகாப்பு சேவை வழங்குனர்களை உறுதிப்படுத்தல்

விமான சேவைப் பாதுகாப்பு சேவை வழங்குனர் அமைப்புக்களை உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் 2016 ஆம் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன.

### தேசிய சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்புக் குழுவை முன்னெடுத்தல்

NCASC இன் பல்வேறுபட்ட பிரிவுகளை அமுல்படுத்துவதற்காக பொறுப்பு வாய்ந்த திணைக்களம், முகவர் நிறுவனம் மற்றும் ஏனைய அமைப்புக்கள் உட்பட விமான நிலையம் மற்றும் விமானக் கையாளுனர்களுக்கிடையே பாதுகாப்புப் பணிகளை இணைப்புச் செய்யும் நோக்குடன் NCASC கூட்டங்கள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டன. 2016 மார்ச் மற்றும் டிசம்பர் மாதங்களில் NCASC இன் செயலாளரின் தலைமையில் பாதுகாப்பு அமைச்சில் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. NCASC இன் தலைவரின் ஆலோசனைகளுக்கமைய முப்படைகள், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்காக விமான சேவைப் பாதுகாப்பு தொடர்பான 03 வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

### கோவைகளை வெளியிடல்

AV.SEC பிரிவு விமான சேவைப் பாதுகாப்பு ஒழுங்குக் கோவைகளின் இறுதி வரைபினை மீளாய்விற்குட்படுத்தும் பணிகளைப் பூர்த்தி செய்தது. தேசிய விமான சேவைப் பாதுகாப்பு அவசர சந்தர்ப்பத் திட்டமிடலின் வரைபினைத் தயாரித்து பூர்த்தி செய்ததுடன் NCASC இன் ஆலோசனைகளுக்கமைய குழு அங்கத்தவர்களுக்கிடையே விநியோகிக்கப்பட்டன.

### பாதுகாப்பு வேலைத்திட்டங்களை மதிப்பீட்டுக்குட்படுத்தல்

தேசிய சிவில் விமான சேவைப் பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கமைய வெளிநாட்டு விமான சேவைப் பாதுகாப்பிற்கான வேலைத்திட்டங்கள் 20 மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகளின் பாதுகாப்புப் பயிற்சி வேலைத்திட்டங்கள் 02 மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்குத் தேவையான அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன

### விமானத்தின் ஊடாக ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்கு அங்கீகரித்தல்

இலங்கையின் வான்பரப்பிற்குள் மற்றும் இலங்கைக்குள் அமைந்துள்ள விமான நிலையங்களுக்குள் அல்லது அதற்கு வெளியே ஆயுதங்களை விமானம் மூலம் கொண்டு செல்வதற்காக அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்காகும். விமானங்களில் சரக்குப் பொருட்களில் ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் 164 இன் போது VIP, VVIP சர்வதேச பயணங்களுக்காக விமானப் பயணிகளின் அறைக்குள் ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்காக 32 சந்தர்ப்பங்களில் 2016 ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

### ICAO தூதுப் பணிகளில் பங்கேற்றல

விமான சேவைப் பாதுகாப்புப் பணிப்பாளர் திரு. பி.ஏ. ஜயகாந்த ICAO வின் அழைப்பிற்கமைய, UAE இல் நடாத்தப்பட்ட ICAO - USAP ஆய்வின் போது ICAO கணக்காய்வுப் பிரிவின் அங்கத்தவராக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### விமான நிலையங்களை மீள உறுதிப்படுத்துவதற்காக MRIA பரிசோதனைகளை மேற்கொள்ளல்

NCASP யின் மேற்பார்வை தேவைகளுக்கமைய விமான சேவைப் பாதுகாப்பு நிருவாகத்திற்கான நடவடிக்கைகள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக MIRA இனால் விரிவான பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. இது விமான நிலையங்களை மீள உறுதிப்படுத்தும் செயற்பாடுகளின் பகுதியாக முன்னெடுக்கப்பட்டது.

### TSA பின்னூட்டல் சுற்றுலா

கதே பசுபிக் விமானப் போக்குவரத்து கம்பனியின் கோரிக்கைகளுக்கமைய ஐக்கிய இராட்சியத்தின் விமான நிலையத்திற்காக சரக்குப் பொருட்களைக் கொண்டு செல்லும் விமானப் போக்குவரத்துக் கம்பனிகளுக்கு விசேட வசதியாக "Upstream Facility" வழங்குவதற்காகத் தேவையான விமான சேவை பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளை அமுல்படுத்துவது தொடர்பில் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரிசோதனைகள் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகளை திருத்தியமைக்க நடவடிக்கைகள் திட்டமிடல் மேற்பார்வைக்காக போக்குவரத்துப் பாதுகாப்பு நிருவாகத்தின் (TSA) பரிசோதனைக் குழுவினால் பின்னூட்டல் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

### விமான சேவைப் பாதுகாப்பு கூட்டங்கள்/ கருத்தரங்குகள்

Av. Sec பிரிவுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் விடயம் சார்ந்த அறிவினை விரிவுபடுத்துவதற்காக வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறி/கூட்டங்கள்/ கருத்தரங்குகுகள் போன்றவற்றில் பங்கேற்பதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டது.

## விமானத் தளப் பிரிவு

விமானத் தளப் பிரிவின் பிரதான நோக்கமான அமைவது உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய உள்நாடு மற்றும் சர்வதேச விமானத் தளங்களை பராமரிப்பதற்குரியதான சட்டங்கள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை வெளியிடல் மற்றும் சிவில் விமானப் பிராயணிகள் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் விமானத் தளங்களை அடிப்படையாகக் கொண்டு உறுதிப்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான தேடல்களை மேற்கொள்வதற்கு பொறுப்பாகச் செயற்படுவதாகும். இப்பிரிவு விமான நிலையங்களில் வசதிகளை வழங்கவதற்குரியதான சர்வதேச தரத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பொறுப்புடன் செயற்படுகின்றது.

### நீர் சார்ந்த விமானத் தளங்களின் ஒழுங்குக் கோவைகள்

நீர் சார்ந்த விமானத் தளங்களை உறுதிப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிகள் உட்பட தரங்களை வெளியிடுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்ட ICAO வின் நீர் சார்ந்த விமானத் தளங்களின் செயற்பாட்டு ஒழுங்கமைப்புக் கூட்டத்திற்கு CAASL இனால் அனுசரனை வழங்கப்பட்டது. இலங்கைக்கு நீர் சார்ந்த விமானத் தளங்களை உறுதிப்படுத்தும் ஒழுங்குக் கோவையினைத் தயாரித்து அங்கீகரிப்பதற்காக கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சருக்கு சமர்ப்பிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ளது.

### பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான மேற்பார்வை செயற்பாட்டு ஒழுங்கு முறைகள்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையின் பாதுகாப்பு, BIA இன் தொகுதி (Apron) நிர்மானிப்பு கட்டம் 2-11 கட்டம், BIA ஓடுபாதையின் மேற்பரப்பினை மீள அமைக்கும் பாதுகாப்பு செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் RMA ஓடுபாதையினை புணரமைக்கும் திட்டத்திற்காக தொழில்நுட் வழிகாட்டல்களை வழங்கும் செயற்பாடுகள் விமானத் தளப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டன. BIA விமானத் தளத்தை உறுதிப்படுத்துவதை புதுப்பிப்பதற்காக விமானத் தளத்தின் ஆய்வினை நடாத்தி 2018 மார்ச் மாதம் சான்றுப்படுத்தல்கள் புதுப்பிக்கப்பட்டன.

BIA இன் இரண்டாவது ஓடுபாதையினை நிர்மானிப்பதற்குத் தேவையான உள்ளீடுகள் மற்றும் ஏறோட்றோ பொலிஸ் (Aerotropolis) யோசனைத் திட்டம் மாநகர அதிகாரத்திற்கு (Megapolis Authority) வழங்கப்பட்டது.

MRIA விமானத் தளத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் 2017 ஜனவரி 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

இரத்மலானை விமான நிலையத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் 2016 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

செப்ரோன் எயார் கம்பனிக்கு நீர் சார்ந்த விமானத் தளங்கள் 11 செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தற்காலிக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. இக் கம்பனிக்கு தியவன்ன ஓயாவில் நீர் சார்ந்த

விமானத் தளச் செயற்பாடுகளுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

IWS நிறுவனத்திற்கு மற்றும் இராணுவ வைத்தியசாலைக்கு ஹெலிகப்டரை தரையிறக்கும் இடத்தினைத் தாபிப்பதற்காக தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

### உள்நாட்டு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்தல்

### பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல்

பலாலி விமான நிலயைத்தை சர்வதேச செயற்பாடுகளுக்காக விருத்தி செய்வது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் இந்திய விமான நிலைய அதிகாரப் பிரிவு (AAI) உடன் கூட்டம் நடாத்தப்பட்டது. பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக இந்தியா மற்றும் இலங்கைக்கிடையே இருதரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இப்பணிகளுக்காக இந்தியாவின் உதவி கிடைக்கவுள்ளது. இடம் சார்ந்த பரிசோதனைகளுக்குப் பின்னர் பலாலி விமான நிலையத்தை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்வதற்காக கட்டத் திட்டங்களும் செலவின மதிப்பீடுகளுடனும் பாரிய திட்டத்தைச் சமர்ப்பிக்க இந்திய விமான நிலையம் இணக்கம் தெரிவித்தது. ஆண்டு இறுதியை எட்டியுள்ள போதிலும் அதன் அறிக்கை கிடைக்கவில்லை.

### புத்தளம் விமான நிலையம்

2016 வரவு செலவு யோசனைகளைத் தொடர்ந்து கௌரவ அமைச்சர்களின் ஆலோசனைகளுக்கமைய CAASL பாலாவியில் அமைந்துள்ள விமான நிலையத்தை நடுத்தரளவு (ஆசன வாகன விமானங்களுக்காக) செயற்படுத்துவதற்காக அபிவிருத்தி செய்ய ஆரம்பக் கற்கை அறிக்கை தயாரிக்கப்பட்டது. இருப்பினும் கட்டுநாயக்க விமான நிலையம் இருப்பதனால் புத்தளம் விமான நிலையத்தினை நிர்மானிப்பதை இடைநிறுத்த பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அமைச்சரவைக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இந்த செயற்திட்டம் கைவிடப்பட்டது.

### பதுளை மாவட்டத்திற்காக விமான நிலையம்

2016 வரவு செலவு யோசனைகளைத் தொடர்ந்து மற்றும் கௌரவ அமைச்சர்களின் ஆலோசனைகளுக்கமைய பதுளை மாவட்டத்தின் விமான நிலையத்தைத் தாபிப்பதற்காக பொருத்தமான வளாகத்தை இனங்காணுவதற்காக ஆய்வுகள் நடாத்தப்பட்டன. ஆரம்பக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் நடுத்தரளவிலான விமானங்களினை கையாளக்கூடிய வகையிலான விமான நிலையம் ஒன்றை நிர்மானிப்பதற்குப் பொருத்தமான நிலப்பரப்பு பண்டாரவெல மஹஉள்பத்த தோட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. விமான நிலையத்தை நிர்மானிப்பதற்காகத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய அரச அமைப்புடன் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சமூகக் கற்கை ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நிர்மானப் பணிகளை மேற்கொள்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் கிடைக்க வேண்டியுள்ளது.

### மட்டக்களப்பு விமான நிலையம்

அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய கௌரவ அமைச்சர் 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் ஒழுங்னு விதிமுறைகளுக்கமைய மட்டக்களப்பு விமான நிலையத்தின் உரிமையினை இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை பொறுப்பேற்கும் வகையில் அரச வர்த்தமாணி அறிவித்தல் வெளியிடப்பட்டது. கௌரவ அமைச்சர் தொடர்ந்தும் நியதிச்சட்ட சேவை வழங்குனர் மட்டக்களப்பு விமான நிலைய சேவை வழங்குனராக நியமிக்கப்பட்டது. இதற்கமைய மட்டக்களப்பு விமான நிலையத்தின் உரிமையினைப் பொறுப்பேற்றதன் பின்னர் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை அவ் விமான நிலையத்தை சிவில் விமான சேவை விமானப் போக்குவரத்து விமான நிலையமாகச் செயற்படுத்துவதற்காக தேவையான காணி வ/ப விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) கம்பனிக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### நீர் சார்ந்தவிமானத் தளங்கள்

2016 ஆம் ஆண்டு இறுதியளவில் இலங்கையில் அமைந்துள்ள உறுதிப்படுத்தப்பட்ட விமானத் தளங்கள் 11 ஆகும். விமானத் தளங்களுக்குரிய கட்டடங்களின் நிர்மானிப்புகளை நிர்வகிப்பதற்காக வலயங்களாக வகுக்கும் கோவை இன்மையினால் விமான நிலையங்களை சூழ தடைஎல்லைகளை மேற்கொள்வற்கு நீர் சார்ந்த விமானத் தளங்களுக்கு எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள பிரதான சவாலாகும்.

### சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்றல்

பெங்கொக் நகரில் இடம்பெற்ற விமானத் தளக் கோவையினை அமுல்படுத்தும் செயலமர்வில் (PANS) இப்பிரிவின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சிங்கப்பூர் அவியேசன் அக்கடமியினால் நடத்தப்பட்ட ரம் செயற்பாடு மற்றும் பாதுகாப்பு மேற்பார்வை பரிசோதனை பாடநெறிக்கு AE பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## காற்று வழிசெலுத்தல் பிரிவு

விமானப் போக்குவரத்துப் பிரிவின் அடிப்படைச் செயற்பாடுகளாக அமைவது ICAO வினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை ஒப்பளவுகளுக்கமைய வான் பரப்பினை திட்டமிடல், ஒழுங்கமைப்பு மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளை வகுப்பதும் விமானப் போக்குவரத்து சேவை வழங்கனர்களை முதற் தடவை உறுதிப்படுத்தல் மற்றும் அவர்கள் தொடர்பிலான தொடர்ச்சியான தேட்டல்களை மேற்கொள்வதாகும்.

### பரிசோதனைப் பணிகள்

DGCA இனால் அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்காக ANS இன் பரிசோதனை திட்டங்களுக்கமைய BIA இல் RMA இன் மற்றும் MRIA இல் ATS மத்திய நிலையம் மற்றும் BIA இன் மற்றும் RMA இல் AIS மத்திய நிலையம் முன்னெடுக்கவிருந்த சகல பரிசோதனைகளும் கீழ்க் குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டன.

ATS அலகு - 30 மற்றும் ATS அலகு - 16

### ATC அளவு மதிப்பீடுகள்

விமானப் பயண நிர்வாகிகளுக்கு ATC அளவு வெளியிடுவதற்காக ANS பிரிவு மதிப்பீடுகளை மேற்கொள்ளும் செயற்பாடுகள் 48 நடாத்தப்பட்டது.

### மொழித் தேர்ச்சி மற்றும் வானொலித் தொலைத் தொடர்பு ஒழுங்கு விதிமுறைப் பரிசோதனைகள்

ANS பிரிவு தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவுடன் (PEL) ஒத்துழைப்புடன் செயற்பட்டு மொழித் தேர்ச்சி பரீட்சை நடாத்தப்பட்டது. வர்த்தக வானொலி முன்னோடி அனுமதிப் பத்திரம் (CPL) மற்றும் தனியார் வானொலி அனுமதிப்பத்திரம் (PPL) இற்காக தனியார் விமான பயிற்சி பாடசாலைகளின் விமானிகள் தொடர்பில் நடாத்தப்படும் வானொலி, தொலைபேசி (RT) பரீட்சைகளின் போதும் ANS பிரிவினால் பரீட்சை பரிசோதனை சபை பிரதிநித்துவப்படுத்தப்பட்டது. இதற்கமைய RT 50 பரீட்சைகள் மற்றும் ELPC 24 பரீட்சைகள் இவ்வாண்டில் நடாத்தப்பட்டன.

### ஆய்வு

இப் பிரிவினால் மும்பாய் வானியல் தகவல் வலயத்தில் இடம்பெற்றதாக விமானப் போக்குவரத்துக் கம்பனியிலிருந்து கிடைக்கப் பெற்ற கூடுதலான செய்தித் தகவல்கள் தடைப்பட்டமை தொடர்பில் கட்டாய சம்பவ அறிக்கை தொடர்பில் விசாரனைகள் நடாத்தி அவ்வாறான சம்பங்கள் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்க முன்னெடுக்க வேண்டிய திருத்தியமைக்கும் செயற்பாடுகள் இந்தியாவின் சமமான பொறுப்பாளர்களுடனான செயற்பாடுகளை இணைப்புச் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### வானியல் அனுமதிப் பத்திரங்கள்/ தறையிறக்கும் உரிமை

திடீர் என்று ஏற்படக்கூடிய தொழில்நுட்ப ரீதியிலான நிறுத்தல்கள்/வர்த்தகமல்லாத தரையிறக்கல்/மேலே பறப்பதற்காக அங்கீகாரம் வழங்கல் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளும் இடங்களுக்கமைய பாதுகாப்பு அமைச்சு/இலங்கை விமான படை, தொல்பொருளியில் திணைக்களம் போன்ற ஏனைய உரிய அமைப்புக்களுக்கு மேலதிகமாக அங்கீகாரத்திற்குட்பட்ட விமானச் செயற்பாடுகளுக்கான பணிகளுக்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டிற்குள் யுளேு பிரிவு பட்டியல்படுத்தப்படாத மேலே பறப்பதற்காக 976 க்கு பட்டியல்படுத்தப்படாத தரையிறக்கல்கள் 988 க்கும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டதுடன் இராஜதந்திர வானியல் செயற்பாடுகளுக்காக எதிர்ப்புகள் இல்லை என குறிப்பிடக்கூடிய குறிப்பு 141 இற்காக எதிர்ப்புக்கள் இல்லை என வெளிப்படுத்தப்பட்ட குறிப்புக்கள் மற்றும் விமானம் ஏற்றப்பட்ட புகைப்படங்களும் 74 விமான சேவைக்காகவும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நாட்டில் துரிதமாக பிரபல்யம் அடைந்து செல்லும் டிரோன் செயற்பாடுகள் 131 இற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### ANS பயிற்சிகள்

ICAO வினால் பணிக்கப்பட்ட KOICA / SCPP அனுசரனையுடன் வெளிநாட்டில் இரண்டு புலமைப் பரிசில்கள் ANS பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டதுடன் யுளேு பணியாளர் சபை ஏனைய உள்நாட்டுக் கருத்தரங்கு/21 செயலமர்வுகளில் பங்கேற்றனர்.

### ICAO கூட்டம்

ANS உத்தியோகத்தர்கள் ATM துணைக்குழுக்கள், ADS-B அமுல்படுத்தல் மற்றும் யுஐளு தொடக்கம் AIM வரை குடிவரவு தொடர்பான AAITF தொடர்பான ICAO வலயக் கூட்டங்களுக்கு CAASL ஐ பிரதிநிநித்துவப்படுத்தி ANS பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

### AIP மறுசீரமைப்பு, AIP மேலதிக விமானத்தளத் தகவல்கள் மற்றும் நோட்டம் (NOTAMS)

AIP மறுசீரமைப்புப் பிரிவு 01, AIP மேலதிகமாக 07 மற்றும் யுளேு சார்ந்த AIC 04 வெளியிடப்பட்டதுடன் ANS செயற்பாட்டுப் பணிகளுக்காக NOTAMS 407 பரிசோதனைகளை வெளியீடுவதற்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

### கொழும்பு வானியல் தகவல் வலயத்திற்குள் தேடல்கள் மற்றும் மீட்புப் பணிகள்

அவுஸ்திரேலியா சமுத்திரப் பாதுகாப்பு அதிகாரப் பிரிவு (AMSA) உடன் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள 03 ஆண்டு கால தேடல்கள் மற்றும் மீட்புகள் (SAR) இயலுமைகள் பங்குடமை வேலைத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பு மூலம் இலங்கையின் தேசிய SAR அமைப்பினைத் தாபிக்க மேற்கொள்ளப்பட்ட யோசனைகள் உட்பட இலங்கையின் தேடல்கள் மற்றும் மீட்பு இயலுமைகளை விருத்தி செய்வதற்காகத் தேவையான முதலீட்டுப் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. AMSA கீழ் குறிப்பிடப்பட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

- ✈ அவுஸ்திரேலியா SAR வேலைத்திட்டம் தொடர்பாக அறிவுறுத்தும் வகையில் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.
- ✈ SAR பயிற்சி இணைப்பாளர்களான (05) உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- ✈ SAR நிருவாகிகளான இரண்டு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- ✈ 15 உத்தியோகத்தர்களுக்காக SAR உத்தியோகத்தர் பாடநெறி இலங்கையில் நடாத்தப்பட்டது.
- ✈ இலங்கையில் TABLE-TOPSAR வானியல் அப்பியாசங்கள் நடாத்தப்பட்டன.

### PBN அமுல்படுத்தல்

CAAAL இன் ANS பிரிவினால் 2016 ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதியளவில் BIA இற்காக PBN வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு யுயுளுடு முன்னெடுக்கப்பட்டது. திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட PBN பணி ஒழுங்கு விதிமுறைகள் தளத்தில் செல்லுபடியாக்குவதற்காக ஐஊயுமு வின் வானியல் பணி ஒழுங்கு விதிமுறை வேலைத்திட்டங்கள் (FPP) உதவியும் தாய்லாந்து ஏறோ தாய் மூலம் வானியல் மூலம் செல்லுபடியாகும் நிலைமைக்கு மாற்றியமைக்கும் சேவைகளை பெற்றுக் கொள்ள இணைப்புப் பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. PBN அமுல்படுத்தும் ஆரம்பத் தேவையாக BIA மேற்பார்வை தற்காப்பு மதிப்பீடுகள் நடாத்தப்பட்டன.

PBN அறிமுகப்படுத்தப்பட்டமையினால்

விமானிகளுக்கு, விமானக் கையாளுனர்களுக்கு மற்றும் விமானப் பயணக் கட்டுப்பாட்டாளர்கள், சமீபத்தில் பாரியளவு முன்னேற்றம் அடைந்துள்ள விமான போக்குவரத்துத் தொழில்நுட்பத்தை உயர்ந்தபட்சம் பயன்படுத்தி பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை விருத்தி செய்வதற்கும் சூழல் ரீதியிலான பிரதிலாபங்களைப் பெற்றுக் கொள்ளவும் முடிந்துள்ளது. அத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரதிலாபங்களும் இதில் அடங்குக்கின்றன.

- விரிசல்களின் அளவு குறைவடைதல் - விமானம் பறக்கும் போது சகல கட்டங்களுக்காகவும் PBN ஒழுங்கு விதிமுறைகளைப் பயன்படுத்தி வான்பரப்பின் வேலைப்பழு, உரியவாறு முகாமைத்துவத்திற்கு உட்படுத்தப்பட்ட விரிசல் அளவினைக் குறைத்தல் மற்றும் விமானம் பறக்கும் போது பயணத் தளத்தை எட்டுதல் மற்றும் தரையிறக்கல் போன்ற கட்டங்களில் பறக்க வேண்டி ஏற்படக்கூடிய தூர மைல்களின் எண்ணிக்கையினை குறைப்பதன் மூலம் பயன்பாட்டு ரீதியில் காணப்படும் வான் பரப்பினை மிகுந்த வினைத்திறனுடன் பயன்படுத்த முடிகின்றது.

- தரையிறக்குவதற்காக மேற்கொள்ளப்படும் உரிய இடத்தை எட்டும் போது அதன் தூர மைல்களின் எண்ணிக்கை/எரிபொருள் விரயம்/ காபன் டயொக்சைட் வெளியேற்றம் குறைவடைவு, பயனற்ற வானியல் நேரம், தேவையற்ற தாமதங்கள் மற்றும் எரிபொருள் பயன்பாட்டினைக் குறைத்தல் போன்ற விஞ்ஞான ரீதியிலான செயற்பாடுகள் ”டீேC தொழில்நுட்பத்திலும் காணப்படுகின்றது. இதன் மூலம் விமானச் செயற்பாட்டளர்களுக்கு தெளிவான பொருளாதாரப் பிரதிலாபங்கள் கிடைப்பதுடன் சூழலுக்கு சாதகமான நிலைமைகளும் ஏற்படுகின்றன.

- அனேகமான ஓடுபாதைகளுக்காக நேராக வந்தடைவதற்காக திட்டமிடுவதற்கு PBN மற்றும் GNSS தொழில்நுட்பங்கள் காரணமாக முடிகின்றது. நேராக வருகை தந்து உரிய இடத்தை எட்டும் சுற்று வட்டத்தில் பயணித்து தளத்தை எட்டுவதற்காக இடம்பெறக்கூடிய செயற்படுகளை விட 25 மடங்கு பாதுகாப்புக் கொண்டது என்று ICAO வின் புள்ளிவிபரங்களுக்கமைய இனங்காணப்பட்டுள்ளது. வந்தடவைதற்கு நேரான வழிகாட்டல்களை வழங்குவது பாதுகாப்பினைத் தொடர்ந்தும் விருத்தி செய்வதற்குக் காரணமாக அமைகின்றது.

- விமானத்திற்கு செங்குத்தான மற்றும் பக்க அடிப்படையில் அதாவது இரண்டு முறைகளில் போக்குவரத்து இயலுமைகள் காணப்படக்கூடிய சந்தர்ப்பத்தில் செங்குத்தான வழிகாட்டல்கள் கொண்டதான அடைவுகள், செங்குத்தான வழிகாட்டல்கள் கொண்ட அடைவுகளை விட 08 மடங்கு பாதுகாப்பானது. PBN மூலம் பாதுகாப்புக்கள் விருத்தி செய்யப்படுகின்றன. தற்போது இலங்கையிலுள்ள செங்குத்து வழிகாட்டல்கள் கொண்ட ஒரேயொரு அடைவு எல்லை முறைகள் ILS ஆகும். இதற்கு விமானங்கள் உரிய செங்குத்து மார்க்கங்களை நிருவகிப்பதற்காக விமானத்தின் வழி அழுத்தத்தின் அளவின் மட்டம் பயன்படுத்தப் படுகின்றது. BARO VNAV தொழில்நுட்பத்தின் உதவியும் பெற்றுக் கொள்ள முடியும். இதன் போது உரிய தளத்தை எட்டுவதற்கு வழி அழுத்தங்களை அளவீடு செய்யும் முறைமை கொண்ட விமானங்களுக்காக மற்றும் வழி அழுத்தங்களின் அளவு மற்றும் வெளிப்பாட்டு தொகுதி விமான நிலையங்களுக்கான எல்லையாகும்.

- GNSS இயலுமைகள் கொண்ட PBN பயன்பாட்டினை விரிவாக்கும் பட்சத்தில் தரையிறக்க வானொலி செயற்பாட்டு உதவித் தொகுதியின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கமைய தங்கியிருப்பது குறைவாகுவதினால் தளத்தின் செயற்பாட்டு உதவிகள் கூடுதலாக குறைவடையக்கூடும். விமானச் செயற்பாடுகளுக்காக விமான உதவிகளைக் கொண்ட இலங்கையின் அனேகமான விமானத் தளங்களை எட்டுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது NDB, VHF மற்றும் VOR வானொலி அசைவின் உறுதியினை பயன்படுத்துவதன் மூலம் உரிய பக்கங்களின் வழிகாட்டல்களுடன் மாத்திரமாகும். இங்கு போக்குவரத்து செயற்பாட்டு உதவிகள் தற்போது 70 வருடங்களை விடப் பழமை வாய்ந்தது என்பதுடன் அவற்றைத் தாபிப்பதற்கு மற்றும் பராமரிப்பதற்கு கனிசமான செலவினங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

- உலகாளவிய ஒத்திசைவுகள் - ICAN இன் PBN செயற்பாட்டு அளவுகள் தற்போது எந்தவொரு ICAO அங்கத்துவ இராட்சியங்களுக்கும் எந்தவொரு அதிகாரம் கொண்ட செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் உலகம் பூராகவும் உபயோகிக்கப்படுகின்றது. இதனால் விமானங்களைப் போன்று விமான செயற்பாட்டாளர்களையும் சான்றுப்படுத்துவதற்கு மிகவும் இலகுவாக அமைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் பொதுவான உலகளாவிய தரங்களுக்கமைய விமானங்களின் தயாரிப்புக்களும் இடம்பெறும்.

- PBN வானியல் செயற்பாட்டு MRIA ஒழுங்கு விதிமுறைகள் அறிமுகப்படுத்தும் செயற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் ஆசுஐயு இன் 23 ஓடுபாதைகள் மற்றும் 05 இற்காக RNP எட்டுவதற்கான திட்டமிடல் வளாகத்தை செல்லுபடியாக்குதல் மற்றும் விமானப் பரப்பினை செல்லுபடியாக்குவதற்காக AASL செயற்படுத்தப்படுகின்றது. முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும்.

## இலங்கையில் ADS-B அமுல்படுத்தல்கள்

இலங்கையில் வான் பரப்பிற்குள் ADS-B அமுல்படுத்துவதற்காகத் தேவையான முன்னோடி உதவிகள்/வழிகாட்டல்கள் AASL இற்கு வழங்க ANS பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2017 ஏப்ரல் இறுதியளவில் ADS-B அமுல்படுத்தல்களை பூரணப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

ADS-Bout உபகரணங்கள் கொண்ட செயற்பாட்டளர்களுக்கு வேலைப்பழு அதிகமான வான்பரப்பு மலைப் பிரதேசம் மற்றும் தாழ் நிலப் பிரதேசங்கள் உட்பட ரேடார் அமுல்படுத்தப்படாத சூழலில் மிகவும் வினைத்திறனுடனான பரம்பல் மற்றும் உயர்ந்தபட்ச பயன்மிக்க விமான மார்க்கத்தை அனுபவிக்க முடிந்துள்ளது. ADS-Bout உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ள வானூர்திகளுக்கு வான்பரப்பில் அவ் வானூர்தி காணப்படும் இடம் தொடர்பாக விமானக் கட்டுப்பாட்டாளர்களின் விளக்கத்தை அதிகரிக்க முடிகின்றது. தற்போது பயன்படுத்தப்பட்ட ரேடார் உபகரணங்களுக்கு விமானம் நிலைப்படுத்தப்படும் இடத்தை சமகாலப்படுத்துவதற்கு 5 - 10 நிமிடங்கள் கடக்க முடியும். ADS-Bout உபகரணங்களுக்கு சகல செக்கன்களிலும் விமானம் தொடர்பான தகவல்கள் விமான பயணக் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு வழங்க முடியும். இதன் மூலம் விமானப் பயணக் கட்டுப்பாட்டாளர்களுக்கான இயலுமைகள் அபாயகர நிலைமைகளை துரிதகதியில் மற்றும் பயன்மிக்கதான முறையில் இனங்காண்பதற்கும் அது தொடர்பான தீர்மானங்களை எட்டவும் முடிகின்றது. இலங்கையில் அனேகமான பிரதேசங்களில் ADS-B சேவைகளை அமுல்படுத்தும் தேவை இலங்கைக்கு இருப்பதனால் தற்போது காணப்படும் ATC ரேடார் மூலம் தழுவப்படாத தாழ் நிலங்களைக் கொண்ட பிரதேசங்களுக்காகவும் இச்சேவையினை துரிதகதியில் வழங்க முடியும்.





## ICAO இன் APANPRIG தீர்மானங்களை அமுல்படுத்தல்

APANPRIG தீர்மானங்களை உரிய நேரத்திற்கு அமுல்படுத்துவதற்காக CAASL மற்றும் AASL இற்கு இடையிலான வேலைத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இலங்கை APANPRIG தீர்மானங்களை உரிய நேரத்திற்குள் அமுல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக DGCA இன் தலைமையில் 2015 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இலங்கை விமான போக்குவரத்துத் திட்டங்கள் மற்றும் அமுல்படுத்தல் மீளாய்வுக் குழு (SLANPRIG) தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு ANA இனால் பொறுப்பேற்கப்பட்டன. ATS/AIS செயற்பாட்டு மத்திய நிலையங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நாளாந்த பரிசோதனைகளிலும் APANPRIG தீர்மானங்கள் பயன்மிக்கதாக அமுல்படுத்த மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன.

## ANS மேற்பார்வைப் பணிகள்

AASL இன் ANS கிளையுடன் விமான சேவைக் கைத்தொழிலின் ஏனைய உரிய பங்குடமையாளர்களுடன் நாளாந்தம் இணைப்புக்களை மேற்கொண்டு ICAO இராட்சியத்தின் ஆவணங்கள் மற்றும் ANS உட்பட அதனுடன் தொடர்புபட்ட ஏனைய சகல தேவைகளும் உரியவாறு அமுல்படுத்தப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சுடனான ஒத்துழைப்பு மற்றும் ICAO வினால் நடாத்தப்பட்ட டிரோன் செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வில் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவினையும் உள்ளடக்கி இலங்கையில் டிரோன் செயற்பாடுகள் தொடர்பாக IS-053 முதற் தடவையாக மறுசீரமைப்புக்களை வகுக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

## இலங்கைக்கு மேல் வான்பரப்பில் படையினரை வறையறுக்கப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக சிவில் இராணுவ இணைப்புக்கள் (விமானப் பரப்பினை நெகிழ்வுத் தன்மையுடன் பயன்படுத்தல்) - FUA

இலங்கை விமானப் படையினர் (SLAF) உடன் பல கூட்டங்களை நடாத்துவதன் மூலம் வான் பரப்பினை பயன்படுத்துவது தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த படையினரின் வரையறுத்தல்களை கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு குறைக்க முடிந்தது.

- RMA இல் சிவில் விமான செயற்பாடுகளுக்குரியதாக விதிக்கப்பட்டிருந்த பல வரையறைகள்
- நகரில் வரையறுக்கப்பட்ட மற்றும் தடைப் பிரதேசங்களில் செங்குத்தாக மற்றும் பக்கவாட்டுப் பரிமானங்களின் அளவினைக் குறைத்தல்
- கொலன்னாவை மற்றும் சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மேலே தடை செய்யப்பட்ட பிரதேசத்தை அகற்றுதல்.
- வடக்கு நோக்கி பறப்பதற்குரிய உள்நாட்டு விமானங்களுக்காக கொழும்பு எல்லை பிரதேசங்களுக்காக நேரடி விமான மருங்குகளைத் தாபித்தல்.

## விமானப் போக்குவரத்துக் கம்பனியினால் ANS கட்டணங்களை அறவிடுவதற்காக உதவுதல்

ஒரு சில விமானப் போக்குவரத்து கம்பனிகளினால் மேலே பறத்தல்கள்/தரையிறக்கலுல்களுக்காக AASL இற்கு செலுத்த வேண்டியிருந்த நீண்டகாலம் கடந்த யுளேு கட்டணத்தை அறவிட்டு வழங்குமாறு கோரி ANS பிரிவு குறித்த இராட்சியங்களின் சிவில் விமான சேவைப் பொறுப்பாளர்களுக்கு விசேட கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டது. இதன் பயனாக ஒரு சில விமானப் போக்குவரத்துக் கம்பனிகள் அதன் நிலுவையான யுளேு கட்டணத்தைச் செலுத்தி அதனைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## சேவை உடன்படிக்கை

அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இரு வகையிலும் விமானப் போக்குவரத்து தள வரைபடங்கள் மற்றும் வரைபுகளை இலவசமாக வழங்குவதற்காக ஜெபசேன் (Jeppessen) நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டிருந்த சேவை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது.

## அபிவிருத்திகளை மேற்கொள்ளல்/ ஒழுங்கிணைந்த பணிகள் உட்பட அலுவலக முகாமைத்துவத்திற்கான பங்களிப்பு

தொடர்ச்சியாக ஈடுபடுத்துவதற்காக மற்றும் மீளாய்வுகள் மூலம் காணப்படும் சஞ்சிகைகள் /ஒப்பீட்டுப் பட்டியல்கள்/வழிகாட்டல் ஆவணங்கள் சமகாலப்படுத்தப்பட்டன. இவ்வாறு சமகாலப்படுத்தப்பட்ட ஆவணங்களில் ANS பரிசோதனைக் கையேடுகள் மற்றும் CAASL இன் அலுவலக் கோவையின் ANS தொடர்பான வாசகமும் காணப்பட்டது.

## TEC கூட்டம்

MRIA சந்தைப்படுத்தலை ஊக்குவிப்பது தொடர்பிலான செயற்திட்ட குழுவிற்கு (PC) BIA இற்காக விமானப் பயணக் கட்டுப்பாட்டுத் தொகுதி (ATM) பெறுகைக் செயற்பாடுகளை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் (TEC) பங்கேற்றது.

# விமானப் பாதுகாப்பு மேற்பார்வைக் கிளை

## பயிற்சி அமைப்புக்கள் மற்றும் தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவு

சிவில் விமான சேவை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பாதுகாப்புச் செயற்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ள பயிற்சி பெற்ற அமைப்புக்கள் மற்றும் நபர்களுக்குரியதான சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய சான்றுப்படுத்தல்கள் மற்றும் தேடல் பணிகளுக்குரியதான ஒழுங்கு விதிகள் உட்பட செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை வெளியிடுவதற்கான பொறுப்பு பயிற்சி பெற்ற அமைப்பு மற்றும் தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.
சிவில் விமான சேவை அதிகார சபையின் பயிற்சி பெற்ற அமைப்பு மற்றும் தனிநபர் அனுமதி பத்திரப் பிரிவு 2016 ஆம் ஆண்டில் அனுசரணையாளர்களை திருப்திப்படுத்தி விமான சேவை ஊடாக சமூகத் தேவையினை நிறைவேற்றுவற்காக அதன் செயற்சாதனையினைத் தொடர்ந்தும் விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### கணணியினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சை முறையினை வெளியிடல்

தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவினால் வழங்கப்படும் சேவையின் தரத்தினை விருத்தி செய்வதற்காக CAASL தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்டமிடலை உள்ளீர்ப்பு செய்வதற்காக கணணியினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சை முறையினை வெளிப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டு பூராகவும் இப்பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.

### PPL மற்றும் CPL விண்ணப்பதாரர்களுக்காக RT பரீட்சை நடாத்துவதனை விருத்தி செய்தல்

தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவினால் ஆளணியினருக்காக RT பரீட்சையினை நடாத்தும் தரம் மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக புதிய பரீட்சைகளும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பணிகள் CAASL இன் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்டமிடலில் உள்ளடக்கப்பட்டது.

### புதிய வானியல் பயிற்சியளிக்கும் பாடசாலைகளை உறுதிப்படுத்தல்

PPL/CPL மற்றும் IR இற்காக வானியல் பயிற்சியளிக்கும் பாடசாலை வழங்குவதற்கு பேயார் வேஸ் அவியேசன் அக்கடமி மற்றும் பிளை சதன் தனியார் கம்பனி என்ற பெயர் கொண்ட இரு நிறுவனங்களினால் வானியல் பணி சார்ந்த இரு அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. பிட்ஸ் எயார் பிளைட் அக்கடமி நிறுவனத்திற்கு தளப் பாடசாலை (Ground School) ஆரம்பிக்க வழங்கப்பட்ட அங்கீகாரம் அவர்களின் கோரிக்கைக்கமைய ஒத்திவைக்கப்பட்டது.

### வானியல் பாடசாலை/விமான சேவைப் பயிற்சி அமைப்புக்கள்/பெயரிடப்பட்ட வைத்தியசாலைகளில் தேடல் பணிகள்

தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவு விமான சேவைப் பயிற்சி மத்திய நிலையம் மற்றும் பெயரிடப்பட்ட பயிற்சிப் பாடசாலை தொடர்பாக கீழ்க் குறிப்பிட்ட ஆய்வு பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

1. பெயார் வேர்ஸ் அவியேசன் அக்கடமி
2. வ/ப ஸ்கைலோக் அவியேசன் தனியார் கம்பனி
3. மிலேனியம் பிளைட் அக்கடமி
4. ஏசியன் அவியேசன் சென்ரர்
5. வ/ப ஓப்பன் ஸ்கை பிளைட் பயிற்சி தனியார் கம்பனி
6. வ/ப பிளை சதேன் தனியார் கம்பனி
7. இன்டர் நேசனல் அவியேசன் அக்கடமி (வானியல் செயற்பாட்டு உத்தியோகத்தர் பயற்சி)
8. பெயரிடப்பட்ட வைத்தியசாலைகள்

### சர்வதேச கூட்டம்/செயலமர்வுகளில் பங்கேற்றல்

சிரேʻட சிவில் விமான சேவைப் பரிசோதகர் (விமான சேவை வைத்திய விஞ்ஞானம்) (SCAI-AM), CAPSCA/AP-8 வது கூட்டத்திற்கு மற்றும் 2016 நவம்பர் மாதத்தில் தாய்லாந்தில் APAC அலுவலகத்தில் இடம்பெற்ற 6 வது உலகளாவிய இணைப்புக் கூட்டத்திற்கு அதன் தலைவர் என்ற அடிப்படையில் பங்கேற்றார். மேலும் இவர் உலக சுகாதார அமைப்பின் (WHO) ஒத்துழைப்புடன் சுகாதார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கையில் பிரவேசிக்கும் திசைகளில் ஏற்படக்கூடிய சர்வதேச ரீதியிலான நிலைமைகள் கொண்ட பொதுச் சுகாதாரம் தொடர்பான அவசர சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பது தொடர்பிலான கூட்டத்தின் போது வளவாளராக CAASL பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் விமான நிலையங்களுக்கான தேசிய அவரச நிலைமைகளை எதிர்கொள்வதற்கான திட்டங்களை வகுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வேலைத்திட்டங்களின் பிரதான பங்காளர்களாக (WHO) CAASL ஐ பிரதிநிதித்துவப்படுத்தி SCAI-AM இவ் ஆவணத்தில் இணைவளவாளாராக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவின் சிரேʻட சிவில் விமான சேவைப் பரிசோதகர் பாக்கிஸ்தான் கராச்சி நகரில் இடம்பெற்ற SARI-Part 66 – 08 வது கூட்டத்தில் அதன் செயற்பாட்டுக் குழு அங்கத்தவராக பங்கேற்றார். தொடர்ந்தும் அவர் மாலைதீவு சிவில் விமான சேவை அதிகார நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட SARI இனால் நடாத்தப்பட்ட EASA- Part FCL கூட்டத்திலும் பங்கேற்றார்.

### புதிய அனுமதிப் பத்திரங்கள் மற்றும் அளவையில் மதிப்பீட்டு வெளியீடுகள்

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவு விமான சேவைத் தொழிலாளர்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட அனுமதிப் பத்திரங்களை வெளியிட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | விமானி அனுமதிப் பத்திரம் | 253 |
| 2. | விமானிக்காக விமான வகை அளவையியல்கள் | 85 |
| 3. | வானியல் ஆலோசனை மதிப்பீடுகள் (FI மற்றும் AFI) | 08 |
| 4. | விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் | 08 |
| 5. | விமானப் பயணக் கட்டுப்பாட்டு அளவு | 25 |
| 6. | விமானப் பராமரிப்பு அனுமதிப்பத்திரம் (AML) | 11 |
| 7. | வகைகள்/அளவுகள் | 41 |
| 8. | வானியல் செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப் பத்திரம் | 05 |
| 9. | விமான ஆளனி அங்கத்தவர்களை உறுதிப்படுத்தல் | 212 |
| 10. | தள ஆலோசனை அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிப் பத்திரம் | 51 |
| 11. | விமானிகளுக்காக வெளிநாட்டு அனுமதிப் பத்திரங்களை செல்லுபடியாக்கும் சான்றிதழ் | 30 |
| 12. | AML இற்காக வெளிநாட்டு அனுமதிப் பத்திரங்களை செல்லுபடியாக்கும் சான்றிதழ் | 03 |

### வைத்தியப் பரிசோதனை/வைத்தியப் பரிசோதனை சபைக் கூட்டம்

தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவின் விமான வைத்திய மத்திய நிலைய விமானிகள் மற்றும் விமானப் பயணக் கட்டுப்பாட்டாளர்களுக்கு தனிநபர் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு வைத்திய பரிசோதனைகள் நடாத்தப்பட்டுள்ளன.

1.முதற் தடவை வைத்திய பரிசோதனை - 131
2.புதுப்பித்தல் வைத்திய பரிசோதனை - 780

சகல வைத்திய சான்றிதழ்கள் தொடர்பாகவும் தீர்வுகளை வழங்குவதற்காக வானியல் வைத்திய மத்திய நிலையம் இவ்வாண்டுக்குள் 03 வைத்திய பரிசோதனை சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

### பெயரிடப்பட்ட வைத்தியசாலைகள்/உடன்படிக்கைகளைப் புதுப்பித்தல்

விமானிகள் மற்றும் விமானப் பயணங்கள் தொடர்பில் வைத்திய பரிசோதனைகளை நடாத்துவதற்காக பெயரிடப்பட்ட வைத்தியசாலையான ஆசிரி சத்திர சிகிச்சை வைத்தியசாலை, டோடன்ட் வைத்தியசாலை, சென்ரல் வைத்தியசாலை மற்றும் ஹேமாஸ் ஆகிய வைத்தியசாலைகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டன. உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு முன்னர் அவ் வைத்தியசாலைகள் மூலம் வழங்கப்படும் சேவைகள் மற்றும் சேவைகளின் தரங்களையும் மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்காக வைத்தியசாலை தொடர்பில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

### தொழில்நுட்ப உதவிப் பணிகள்

தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவின் சிரேʻட சிவில் விமான சேவை இரு பரிசோதகர்கள் காம்போஜ் சிவில் விமான சேவை நிறுவனத்தின் உதவியுடன் இரு வார காலங்கள் அங்கு தங்கி தொழில்நுட்ப உதவி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தினர்.

## விமானச் செயற்பாட்டுப் பிரிவு

விமானச் செயற்பாட்டளர்களை வலுவாக முறையில் மேற்பார்வை செய்வதற்காக ICAO வினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய உள்நாட்டு ரீதியில் ஒழுங்குகள் விதிமுறைகள் மற்றும் செயற்பாடுகளை வெளியிடுவதற்கும் விமானச் செயற்பாட்டாளர் சான்றிதழ்களைக் கோரும் விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக அவர்களைத் தேடுதலும் வானியல் செயற்பாட்டுப் பிரிவின் பிரதான பொறுப்புக்களாக அமைகின்றன. அபாயகரப் பொருட்களை விமானம் மூலம் கொண்டு செல்வதனை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பும் இப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

### ஒழுங்குக் கோவைகளை வெளியிடல்

2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டம், விசேடமாக அதன் 120 வது பிரிவிற்கமைய புதிய மேற்பார்வைக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்துவது அவசியம் என்பதினால் 2016 ஆம் ஆண்டில் CAASL "இன் அமுல்படுத்தும் தரங்கள் (IS)" என்ற பெயரில் புதிய மேற்பார்வைக் கருவி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பயனாக நடாத்தப்பட்ட விமான சேவைப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை மறுசீரமைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்ட புதிய செயற்பாடுகளை அமுல்படுத்தும் தரங்கள் (ஐஎு) வெளியிடுவதற்கு வானியல் செயற்பாட்டுப் பிரிவிற்கு முடிந்தது.

- ✈ IS.18 - வானியல் போக்குவரத்து செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள விமானங்கள் மற்றும் வானியல் உள்ளீடுகள்
- ✈ IS.13 - வரைவிலக்கணம்
- ✈ IS.46 - தளச் செயற்பாடுகள்
- ✈ IS.FRMS தொடர்புபட்ட/இது தற்போது தயாரிக்கப்படுகின்றது.
- ✈ சுகாதாரம் தொடர்பான அவசர நிலைமைகள் IS வரைபு
- ✈ லித்தியம் மின்கலங்களை விமானம் மூலம் கொண்டு செல்வது தொடர்பான IS வரைபு
- ✈ தளச் செயற்பாடுகள் தொடர்பாக IS 046 - பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
- ✈ IS.023 மறுசீரமைப்பு - இணைப்பு 06 பகுதி 02 - மறுசீரமைப்பு 32A,32B மற்றும் 33
- ✈ IS.018 மறுசீரமைப்பு - இணைப்பு 06 பகுதி 01 - மறுசீரமைப்பு 39 மற்றும் 40 தொடர்ந்தும் 2010 இலக்கம் 34 கொண்ட

### சட்டத்தின் 121 வது வாசகத்திற்கமைய

- "பொது மற்றும் விசேட கட்டளை (GD) & (SD)" என்ற பெயர் கொண்ட மேலும் மேற்பார்வைச் செயற்பாட்டு முறைமைகளை வெளியிடப் பொருத்தமானது என இனங்காணப்பட்டது. இதற்கமைய 2016 ஆம் ஆண்டிக்குள் வானியல் செயற்பாட்டுப் பிரிவினால் கீழ் குறிப்பிடப்பட்ட பொதுக் கட்டளை (GD) வெளியிடப்பட்டது.
- GD04 - ALAR/CFIT தொடர்பில் - தயாரிக்கப்படுகின்றது.
- GD03 - வானியல் பாதுகாப்பு ஆவணத் தொகுதி
- GD02 - தன்னியக்க மற்றும் சக்தி - தர முகாமைத்துவம் - பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
- GD 05 - தொடர்ச்சியான தரையிறக்கி இறுதி அடைவு மட்டம்
- FRMS - வரைவு தயாரிக்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக சகல உரிய அமுல்படுத்தல் தரங்கள் இணைப்பு 6 - பகுதி 1 10 வது அச்சுக்கு அமைவாக மறுசீரமைப்புச் செயற்பாடுகளும் இப்பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட - மறுசீரமைப்பு இலக்கம் 40 C

### செயற்சாதனையை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்து செயற்பாட்டு அங்கீகாரங்கள்

ICAO வினால் புதிய செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்கத்துவ இராட்சியம் அதனை ஏற்றுக் கொண்டு அமுல்படுத்தும் போது கைத்தொழிலைப் போன்று மேற்பார்வை அதிகார சபையினால் பின்பற்ற வேண்டிய செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை அறிமுகப்படுத்த அந்த இராட்சியத்திற்கு முடிந்தது. இதற்கமைய PBN செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை அமுல்படுத்துவதற்காகவும் PBN கோவை என்ற பெயரினைக் கொண்ட செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைக் கோவை வெளியிடப்பட்டது. கைத்தொழிலைப் போன்று PBN செயற்பாடுகளுக்காக மேற்பார்வையாளரினால் பயன்படுத்தப்பட்டுள்ள பரிசோதகரினாலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பயணத் திசை வேறுபடுவதற்கமைய செயற்பட வேண்டியுள்ளது. செயற்சாதனையை அடிப்படையாகக் கொண்ட விமானக் கையாளுகைப் பணிகளை முன்னெடுப்பதற்காக செயற்பாட்டு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள விண்ணப்பப்படிவங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கான பொறுப்புக் கொண்டவருக்கு இந்தக் கைடேட்டின் மூலம் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### வழிகாட்டல் ஆவணங்கள்

மேலும் இப் பிரிவு வானியல் சேவை சார்ந்த ஆளணியின் சிரமத்தினை முகாமைத்துவத்திற்கு உட்படுத்துவதை நோக்காகக் கொண்டு விமானம் பறக்கும் காலம், கடமைக் காலம், வானியல் கடமைக் காலம் மற்றும் ஓய்வு நேரம் தொடர்பான தரங்களை உள்ளடக்கக்கூடியவாறு விமானம் பறக்கம் நேரம் மற்றும் கடமைக் காலத்தை வறையறுக்கும் ஆவணத்தை (SLCAP-4210) மறுசீரமைக்க இவ்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### விமானச் செயற்பாட்டாளர்களை

உறுதிப்படுத்தல். விமான செயற்பாட்டுப் பிரிவு, பிளை சதேன், சக்குராய் அவியேசன் மற்றும் லக்வின் அவியேசன் ஆகிய நிறுவனங்களுக்காக (AOC) வெளியிடும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அதுதொடர்பான ஆவணங்கள் மதிப்பீட்டுக் கட்டத்தில் உள்ளது. விமானச் செயற்பாட்டுச் சான்றிதழ்களை வழங்குவதற்காக விண்ணப்பதாரர்களுக்குரிய செயற்பாடுகளின் தன்மை மற்றும் அளவுடன் மேற்கூறப்பட்டவாறான அளவினை ஒழுங்கு செய்தல், விமானச் செயற்பாடுகளை நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் முறைகள், பயிற்சி வேலைத்திட்டங்கள், தள செயற்பாட்டுப் பணிகள் மற்றும் பராமரிப்பு வேலைத்திட்டங்கள் காண்பிக்கப்பட வேண்டும். சர்வதேச (AOC) 03 மற்றும் உள்நாட்டு AOC 05 புதுப்பிப்பதற்காகத் தேவையான பரிசோதனைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. கொஸ்மோஸ் அவியேசன் கம்பனியில் எழுந்துள்ள ஒழுங்கமைப்பு மற்றும் செயற்பாட்டு பிரச்சினைகள் காரணமாக இக்கம்பனியின் AOC புதுப்பித்தல் விண்ணப்பப்படிவங்கள் 18 மதிப்பீடுக்குட்படுத்தப்பட்டன. இப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கிடையே கீழ்க் குறிப்பிட்டவைகளும் அடங்கியுள்ளன.

- விரிவான மதிப்பீடுச் செயற்பாடுகளுக்குப் பின்னர் AOC கொண்டுள்ளோருக்காக 22 செயற்பாடுகள் சார்ந்த ஒழுங்கு விதிமுறைகளுக்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.
- விசேட செயற்பாட்டு அங்கீகாரங்கள் 18 வழங்கப்பட்டது.
- 07 சிமிலேட்டர்கள் புதுப்பித்தல்
- SLA A330 – 300 (4R-ALN, ALO,ALP,ALQ,ALR) உள்ளடக்குதல்
- த அவியேசனுக்காக 01 யூரோ கப்டர் அங்கீகரித்தல்

இவற்றுக்கு மேலதிகமாக வானியல் செயற்பாட்டுக் கையேடுகள் கவின்குரு விமான அறை ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் அவசரச் சந்தர்ப்ப செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைக் கோவைகள் உட்பட தளச் செயற்பாட்டுக் கோவை மறுசீரமைப்புக்களுக்காகவும் அங்கீகரிக்க அவை மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டன.

### வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர்கள் தொடர்பான தேடல்கள்

வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர்களை உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் எயார் சைனா, எயார் ஏசியா, மலிந்தோ எயார் வேஸ் மற்றும் ஒஸ்ரியன் எயார் லைன்ஸ் கம்பனிக்கு இலங்கையில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக சர்வதேச விமானப் போக்குவரத்து கம்பனியின் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்தும் இப்பிரிவினால் ஏற்கனவே இலங்கையில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் 25 விமானச் செயற்பாட்டாளர்களின் சர்வதேச விமானப் போக்குவரத்துக் கம்பனி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### ஆபத்தான பொருட்களை விமானம் மூலம் கொண்டு செல்லல்

அபாயகரமான பொருட்களை விமானம் மூலம் கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்டிருந்த வெளிநாட்டு விமானப் போக்குவரத்துக் கம்பனிக்குரிய DG 15 அனுமதிப் பத்திரங்கள் உள்நாட்டு விமானப் போக்குவரத்துக் கம்பனிக்குரிய அபாயகரப் பொருட்கள் (DG) இரண்டு அனுமதிப் பத்திரங்கள் 2016 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் புதுப்பிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக வானியல் செயற்பாட்டுப் பிரிவு விமானப் போக்குவரத்துக் கம்பனிகளுக்கு அபாயகரப் பொருட்களைக் கொண்டு செல்வதற்காக விசேட DG 23 அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

### DCP மேற்பார்வை மற்றும் PPC அங்கீகாரம்

22 விமானிகளுக்காக விமானித் தேர்ச்சி மட்டத்திற்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டதுடன் பிரிவின் பரிசோதகர்கள் விமானத் தேர்ச்சி மட்டத்தை பேணும் பெயரிடப்பட்ட 08 விமானிகள் மேற்பார்வைகளில் ஈடுபட்டனர்.

### ஆலோசகர்களை அங்கீகரித்தல்

- அபாயகரப் பொருள் சார்ந்த கோவைப் பரிசோதகர்கள் (DGR) 05 (SLA/Cinnamon)
- அங்கீகாரங்களுக்காக FITS Aviation அனுப்பப்பட்ட தரக்காப்பு முகாமைத்துவம் தொடர்பான சமர்ப்பிப்புக்கள்
- SLA இற்காக தற்காப்புப் பரிசேதகர்களை உறுதிப்படுத்துவதற்காக 4R-MRF விமானத்தின் மீது மேற்கொள்ளப்படும் வெளிப்படுத்தும் பயிற்சியினை மேற்பார்வை செய்தல்
- IAA இன் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிப்பதை மேற்பார்வை செய்தல்.
- செயற்சாதனை வகுப்பினை நடாத்திய லெப்டினல் மலித் பெரேரா தொடர்பான பயிற்சி மேற்பார்வைகள்
- Cinnamon Air இற்காக நடாத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் பாடநெறியினை மேற்பார்வை செய்தல்.

### கண்காணிப்புப் பணிகள்

இலங்கையின் பாதுகாப்பினை மேற்பார்வை செய்யும் முறைமையின் பலமான நிலைமையினை உறுதிப்படுத்துவதற்காக CAASL இன் மேற்பார்வை தேவைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்புத் திட்டங்களுக்கமைய இப்பிரிவினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான செயற்பாட்டாளர்கள் தொடர்பில் கண்காணிப்பு பணிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் இவ் ஆண்டுக்குள் பல சம்பவங்கள் குறித்த விசாரனைகளை மேற்கொள்ள தலையீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் செயற்பாட்டுப் பிரிவினால் ரம் பரிசோதனைகள், பயண வழிப் பரிசோதனைகள், DCP மேற்பார்வைப் பணிகள், தலைமையகப் பரிசோதனை மற்றும் பயிற்சி வேலைத்திட்ட மேற்பார்வைகள் உட்பட ஏனைய பரிசோதனைகள் உள்ளடங்கலாக 143 கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
ஹெலிடுவஸ் கம்பனியின் விமான செயற்பாட்டாளர் சான்றிதழ் (AOC) புதுப்பிப்பதற்காக, யுழுஊ கொண்டவர்களினால் ICAO தரம் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுடன் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டுக் கோவைகள்/ஒழுங்கு விதிச் செயற்பாடுகளுடன் இணைந்து மேற்கொள்ளும் உரிய தரத்தை நிர்னயிப்பதை அறிந்து கொள்ளும் வகையில் 2016 நவம்பர் 22 ஆம் திகதி FITS அவியேசன் நிறுவனத்தில் AOC புதுப்பிப்பதனை நோக்காகக் கொண்டு விரிவான மேற்பார்வை ஆய்வுகள் இந்நிறுவனம் தொடர்பில் நடாத்தப்பட்டது.

### நியமிக்கப்பட்ட விமானப் பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர்கள் (DFOIS)

விசேட கண்காணிப்புப் பணிகள் உட்பட மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்வதற்காக போதியளவு விமான பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர்கள் இன்மையினால் (FOI) 2014 ஆம் ஆண்டில் விமானப் பறப்பு செயற்பாட்டுப் பிரிவினால் நியமிக்கப்பட்ட செயற்பாட்டு பரிசோதகர்களை (DFOIS) சேர்த்துக் கொள்ள உரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தேவையான சந்தர்ப்பங்களில் CAASL இற்காக உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகார சபையினால் தேவையான அதிகாரங்களைப் பொறுப்பளித்த வழங்கப்பட்ட DFOIs இருவரை சேர்த்துக் கொள்ள இப்பிரிவு உத்தேசித்துள்ளது.

### ICAO உலகளாவிய விமானப் பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வு வேலைத்திட்டங்கள் (USOAP)

தொடர்ச்சியான மேற்பார்வை பிரவேசம் (CMA) எனக் கருதப்படுவது உலகளாவிய விமான சேவைப் பாதுகாப்பினை விருத்தி செய்யும் இறுதி நோக்குடன் அங்கத்துவ இராட்சியங்களின் பாதுகாப்பினை மேற்பார்வை செய்ய முடியும். தொடர்ந்தும் மேற்பார்வை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள முன் ஆரம்ப செயற்பாட்டு முறைகளாகும். பறப்பு செயற்பாட்டுப் பிரிவு 2016 ஆம் ஆண்டு பூராகவும் இலங்கையில் பாதுகாப்பு மேற்பார்வை இயலுமைகள் தொடர்பான சமகாலப்படுத்தப்பட்ட தகவல்கள்/தகவல்களை வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. மேலும் இப்பிரிவு 2017 டிசம்பர் மாதத்தில் நடாத்தவிருந்த ICAO கணக்காய்விற்குத் தயாராகும் வகையில் இதன் போது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளுக்கு (PQs/CAPs) பதிலளிப்பதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டது.

### விமானங்களைப் பதிவு செய்தல் மற்றும் விமானத் தகைமைப் பிரிவு

உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய இலங்கையில் சிவில் விமானங்களைப் பதிவு செய்வதற்கும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானங்களில் விமானத் தகைமை மேற்பார்வைகளை மேற்கொள்வதற்கும் தேவையான ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் பணிகளை வெளிப்படுத்துவது இப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படைப் பொறுப்புக்களாகும். விமானப் பராமரிப்பு அமைப்புக்களை அங்கீகரித்தல் மற்றும் இவ் அமைப்பின் பணிகளை மேற்பார்வை செய்வதும் இதில் அடங்குகின்றது.
2016 ஆம் ஆண்டில் இப்பிரிவு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சகல விமானங்களுக்குரிய விமானத் தகைமைகள் தொடர்பிலான பணிகளை மேற்கொண்டது.
2016 ஆம் ஆண்டு இறுதியளவில் இலங்கை விமானப் பட்டியலில் உள்ளடங்கியிருந்த விமான எண்ணிக்கை 80 ஆகும். இதில் பாரிய விமானங்கள் (MTOW>5700 KGS) 30, 33 இலகுரக விமானங்கள், 17 ஹெலிகப்டர்கள், 04 பலுான் மற்றும் மிகவும் இலகுரக 02 விமானங்கள் அடங்கியிருந்தன.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் விமானத் தகைமைச் சான்றிதழ்கள் 09 முதற் தடவையாக வெளியிடப்பட்டதுடன் 53 விமானத் தகைமைச் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன.

### விமானப் பராமரிப்பு அமைப்பு

2016 ஆம் ஆண்டில் விமானப் பராமரிப்பு அமைப்பு (AMO) 07 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் AMO 66 புதிதாக வழங்கப்பட்டதுடன் 20 வேலைத்தள அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

இலங்கை எயார் லைன்ஸ் கம்பனியின் பராமரிப்புத் தொடர்பில் விரிவான கணக்காய்வுகள் நடாத்தப்பட்டன.

விமானங்களை பதிவு செய்தல்
2016 ஆம் ஆண்டில் புதிதாக 19 பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 61 விமானங்களின் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் இலங்கை எயார் லைன்ஸ் விமான அணிக்குரிய 02 விமானங்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டன (De-Registered).

### பாதுகாப்பு மேற்பார்வை

சர்வதேச விமான மார்க்கங்களில் விமானப் போக்குவரத்தில் ஈடுபடும் விமானங்கள் தொடர்பில் 02 ரம் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. அண்மித்த தேடுதல்கள், நாளாந்தம் நடாத்தப்பட்ட பரிசோதனைகள் மற்றும் அமைப்புக்களின் முகாமைத்துவத்துடன் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் கூட்டங்கள் மற்றும் சர்வதேச செயற்பாடுகளின் ஊடாக அதற்கிணைவான விருத்திக்காக இவ் அமைப்பு சிறந்த முறையில் கட்டியெழுப்பும் நோக்குடன் உள்நாட்டுக் கைத்தொழிலை மேற்பார்வை செய்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

கைத்தொழிற் துறை சார்ந்த 149 சம்பவ அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதுடன் பாதுகாப்பு மேற்பார்வைப் பிரிவாக அவை தொடர்பில் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டன.

### வீசா வழங்குவதற்கான பரிந்துரை

உள்நாட்டுக் கைத்தொழில் சார்ந்த சேவையில் ஈடுபடுவோர் மற்றும் உள்நாட்டு அமைப்புக்களில் கல்வி பெறும் 148 வெளிநாட்டவர்களுக்கு தரையிறங்க மற்றும் வசிப்பதற்காக வீசா வழங்குவதற்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

### விமானப் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் பொறியியல் பயிற்சிப் பாடசாலைகள்

மொத்தமாக AMTO 05 அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் புதுப்பிக்கப்பட்ட AMTO 02 அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டன.

### விமானப் பராமரிப்பு அனுமதிப் பத்திரப் பரீட்சை (AML)

CAASL இவ்வாண்டுக்குள் விமானப் பராமரிப்பு அனுமதிப் பத்திரப் பரீட்சை AML இரண்டு நடாத்தப்பட்டது.

### உதிரிப் பாகங்களுக்கான அங்கீகாரம்

விமானப் பராமரிப்பிற்காகத் தேவையான உதிரிப் பாகங்களின் இறக்குமதி/ஏற்றுமதிகளுக்காக செயற்பாட்டாளர்கள் உட்பட பல பராமரிப்பு அமைப்புக்களுக்கு அங்கீகாரம் வழங்கி 201 ஆவணங்கள் வழங்கப்பட்டன.







# கூட்டாண்மைச் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார மேற்பார்வைக் கிளை

## பொருளாதார மேற்பார்வை ஒழுங்குகள் மற்றும் விமானப் போக்குவரத்துப் பிரிவு

2016 ஆம் ஆண்டில் பயணிகள், விமானங்களின் கையாளுகையின் அளவு அதிகரித்ததைத் தொடர்ந்து விமானப் போக்குவரத்துத் துறையில் வளர்ச்சி எட்டப்பட்ட ஆண்டாகக் கருதப்படுகின்றது. வெளிநாட்டு இராட்சியங்களுடன் செய்து கொள்ளப்பட்ட மிகச் சிறந்த விமானப் போக்குவரத்து சேவை வேலைத்திட்டங்கள் விமானப் போக்குவரத்துப் பிரிவின் வளர்ச்சிக்கு உதவியான அமைந்தன.

### விமானப் போக்குவரத்து கம்பனிகளின் செயற்பாடுகள்

2015 ஆம் ஆண்டில் செயற்பாடுகளை மேற்கொண்ட விமானப் போக்குவரத்துக் கம்பனிகளும் கூடுதலானவைகள் 2016 ஆம் ஆண்டுக்குள் இலங்கையில் தொடச்சியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நேபாளம் ஹிமாலயன் எயார் லைன்ஸ், இந்தோனேசிய ஶ்ரீ விஜய எயார் லைன்ஸ மற்றும் மாலைதீவு மெகா மோல்தீஸ் எயார் வேஸ் மற்றும் கொரியன் எயார் கம்பனி ஶ்ரீ லங்கன் எயார் லைன்சுடன் இணைந்து இலங்கைப் பயணிகள் போக்குவரத்துச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்குப் பிரதான பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன.

இலங்கை விமானக் கைத்தொழிலின் செயற்சாதனை விருத்திக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கி எயார் ஏசியா எக்ஸ், பிளை டுபாய் மற்றும் ஸ்பை ஜெட் கம்பனி, மிஹின் லங்கா கம்பனியுடன் சிக்கனமான விமானப் போக்குவரத்து கம்பனியாக இலங்கையில் மேற்கொள்ளும் அவர்களின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்கின்றனர். 2016 ஒக்டோபர் 30 ஆம் திகதி தொடக்கம் மிஹின் லங்கா கம்பனியின் செயற்பாடுகள் ஶ்ரீ லங்கன் எயார் லைன்சினால் பொறுப்பேற்கப்பட்டது.
மேற்கூறப்பட்ட நிரந்தரச் செயற்பாட்டளர்களுக்கு மேலதிகமாக லொட் பொலிஸ் (எயார் வேஸ்),

**2015/2016 ஒப்பீடுகள் (போக்குவரத்தில் ஈடுபட்ட பயணிகளின் எண்ணிக்கைக்கமைய)**

| 2015 | | 2016 | |
|---|---|---|---|
| விமானப் போக்குவரத்து கம்பனிகள் | % | விமானப் போக்குவரத்து கம்பனிகள் | % |
| ஶ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் (UL) | 51.70% | ஶ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் (UL) | 47.91% |
| எமிரேட்ஸ் (EK) | 9.97% | எமிரேட்ஸ் (EK) | 9.61% |
| கட்டார் எயார் வேஸ் (QR) | 6.14% | கட்டார் எயார் வேஸ் (QR) | 7.28% |
| மஹின் லங்கா (MJ) | 5.49% | மஹின் லங்கா (MJ) | 7.07% |
| பிளை டுபாய் (FZ) | 2.45% | பிளை டுபாய் (FZ) | 2.74% |
| ஜெட் எயார் வேஸ் (9W) | 2.33% | ஜெட் எயார் வேஸ் (9W) | 2.16% |
| எயார் அறபியா (G9) | 1.97% | எயார் அறபியா (G9) | 1.98% |
| இத்திகாட் எயார் வேர்ஸ் (EY) | 1.88% | இத்திகாட் எயார் வேர்ஸ் (EY) | 1.95% |
| சிங்கப்பூர் எயார் லைன்ஸ் (SQ) | 1.78% | சிங்கப்பூர் எயார் லைன்ஸ் (SQ) | 1.79% |
| கதே பசுபிக் (CX) | 1.77% | கதே பசுபிக் (CX) | 1.75% |

இலங்கையில் புதிதாக நிரந்தர வர்த்தக விமானப் போக்குவரத்து சேவையை ஆரம்பித்தது. இரண்டு தசாப்தத்தை அண்மித்த காலத்திற்குப் பின்னர் நெதர்லாந்தின் KLM ரோயல் டச் எயார் லைன்ஸ் கம்பனி இலங்கையில் மீண்டும் போக்குவரத்துச் செயற்பாடுகளை ஆரம்பித்தமை மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைந்துள்ளது.

உலகின் பிரதான விமானப் போக்குவரத்துக் கம்பனியான எமிரேட்ஸ், சிங்கப்பூர் எயார் லைன்ஸ், தாய் எயார் வேஸ், இத்திகாட் எயார் வேஸ், கட்டார் அசூர் எயார் (ரஷ்யா), நியோஸ் SPA (இத்தாலி) மற்றும் யுக்ரேன் எயார் லைன்ஸ் (ரஷ்யா) 2016 ஆம் ஆண்டில் சகலவற்றையும் உள்ளடக்கிய சுற்றுலா, வாடகைச் செயற்பாட்டாளர்களாக இலங்கையில் இவர்கள் குத்தகைச் செயற்பாடுகளை மேற்கொள்வதைத் தொடர்ந்தும் முன்னெடுத்தனர். ரோயல் பிளைட் எயார் லைன்ஸ் (ரஷ்யா), தொம்சன் ஏயார் வேஸ் (ஐக்கிய இராட்சியம்) மற்றும் ரவல் சேர்வசர்ஸ் பொலிஸ்கா (போலாந்து) 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் வர்த்தகக் குத்தகைச் செயற்பாடுகளை ஆரம்பித்தனர். ஶ்ரீ

விஜய எயர் லைன்ஸ் கம்பனி ஆரம்பத்தில் குத்தகைச் செயற்பாட்டாளராக இலங்கையில் தமது விமானக் கையாளுகைப் பணிகளை ஆரம்பித்ததன் பின்னர் நிரந்தரப் பணிகள் போக்குவரத்துச் செயற்பாட்டளாராக மாற்றம் பெற்றுள்ளது. இதற்கு மேலதிகமாக ஐஸ்லாந்து எயார், தோம்சன் எயார் மற்றும் மகான் எயார் கம்பனி இவ்வாண்டிலும் தேவைகளுக்கு ஏற்றவாறு குத்தகைச் செயற்பாட்டாளராக சகலவற்றையும் உள்ளடக்கிய சுற்றுலா விமானச் சேவையினை இலங்கையில் முன்னெடுத்தனர்.

இவ் ஆண்டுக்குள் பிரதான நேரடியான சர்வதேச விமானப் போக்குவரத்துக் கம்பனிகள் பல மூன்றாம் தரப்பின் விமானப் போக்குவரத்துக் கம்பனிகளுடன் இலங்கையில் மேற்கொண்ட பங்குடமை (Code Share) செயற்பாடுகள் கூடுதலான அளவு அதிகரித்தன. இதன் மூலம் இலங்கையில்/இலங்கைக்கு இடையே பயணிக்கும் பிரயாணிகளுக்கு பயன்களைப் பெறக்கூடிய வகையில் மாற்றுப் பயண கேந்திர நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. அத்துடன் இதன் மூலம் உலகில் கூடுதலாக பிரபல்யம் கொண்ட நகரங்களின் தொடர்புகளை கட்டியெழுப்பக்கூடிய இயலுமை உட்பட தொடர்புகளை வழங்கக்கூடிய பிரதான காரணியாகவும் அமைந்தது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் வெளிநாட்டு விமானப் போக்குவரத்துக் கம்பனிகளில் பங்குடமைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நேரடி விமானப் போக்குவரத்து கம்பனிகளாக இத்திகாட் எயார் வேர்ஸ், மலேசியன் எயார் லைன்ஸ் மற்றும் எமிரேட்ஸ் கம்பனிகள் காணப்படுகின்றன.

ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி 1000 பிரயாணக் கேந்திர நிலையங்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடன் தொடர்புகளை விரிவுபடுத்தக்கூடிய வலையமைப்புக் கொண்ட “வன் வேல்ட் எயார் லைன்ஸ்” பங்காளர்களுடன் பங்குடமைச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டது. இலங்கையின் சந்தையில் பிரதான பங்குடமைச் செயற்பாட்டாளராக ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி காணப்பட்டது. இலங்கை அரசங்கத்தின் தீர்மானங்களுக்கமைய இலங்கையின் ஒரேயொரு சிக்கனமாக விமானப் போக்குவரத்துக் கம்பனியாக மிஹின் லங்கா கம்பனியின் செயற்பாடுகள் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனியினால் பொறுப்பேற்கப்பட்டது. இத்தீர்மானம் எட்டுவதற்கு முன்னர் மிஹின் லங்கா கம்பனி ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனியுடன் பல பிரயாணங்களை பங்குடமை அடிப்படையில் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் பிளை டுபாய் மற்றும் ரொடானா ஜெட் கம்பனி அவர்களின் விமானச் செயற்பாடுகளை மத்தள ஊடாக மேற்கொண்டனர்.

### பயணிகள் மற்றும் சரக்குப் பொருள் அசைவுகள்

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் பிரயாணிகள் மற்றும் சரக்குப் பொருள் அசைவுகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி பதிவாகியது. இலங்கைக்கு வருகை தந்த மற்றும் இலங்கையிலிருந்து புறப்பட்டு சென்ற பிரயாணிகளின் மொத்த எண்ணிக்கை தொடராக 4,657,456 மற்றும் 4,684,762 ஆகும். இப்பிரயாணிகளின் எண்ணிக்கையில் 47.91மூ பயணங்கள் மேற்கொள்ளப்பட்டது ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் மூலமாகும்.

2016 ஆம் ஆண்டுக்குள் BIA மற்றும் MRIA விமான நிலையங்களிலிருந்து வெளியே கொண்டு செல்லப்பட்ட விமான சரக்குப் பொருட்களின் அளவு 146.920 மெ.தென் இல் 55.964 மெ.தொன் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனியின் ஊடாக கொண்டு செல்லப்பட்டன. BIA மூலம் மற்றும் MRIA மூலம் தரையிறக்கப்பட்ட விமான சரக்குப் பொருட்களின் அளவு 107.349 மெ.தொன் இல் 52.394 மெ.தொன் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனியால் தரையிறக்கப்பட்டது.

| ஆண்டு | பயணிகள் | | | சரக்குப் பொருள் (மெ.தொன்) | | |
|---|---|---|---|---|---|---|
| | புறப்பட்ட | வருகை | மொத்தம் | ஏற்றப்பட்ட | தரையிறக்கல் | மொத்தம் |
| 2012 | 3,554,969 | 3,590,122 | 7,145,091 | 108,043 | 66,602 | 174,645 |
| 2013 | 3,621,822 | 3,690,047 | 7,311,842 | 119,447, | 71,776 | 191,224 |
| 2014 | 3,926,447 | 3,893,400 | 7,819,847 | 115,400 | 77,040 | 192,440 |
| 2015 | 4,252,619 | 4,273,959 | 8,528,593 | 116,585 | 98,446 | 215,032 |
| 2016 | 4,657,456 | 4,684,762 | 9,342,218 | 146,920 | 107,349 | 254,269 |
| வளர்ச்சி அளவு ஆண்டு தோறும் | 10% | 10% | 10% | 26% | 9% | 18% |






### இடைத்தங்கல் பயணிகள்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA) பிராந்தியத்தின் கேந்திர விமான நிலையமாக அபிவிருத்தி அடைவதற்கு விமான நிலையம் ஊடாக இடைத்தங்கல் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும் முன்னேற்றுவதற்காகவும் விருத்தி செய்வதற்குமாகவும் தேவையான அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும். 2016 ஆம் ஆண்டில் பயணிகள் 1,364,452 ஆகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக பயணித்ததுடன், இதில் 94% (1,286,616) ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் ஊடாக பயணித்தனர்.

### உள்நாட்டு விமான சேவை

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் சினமன் நிலையான இறக்கைகள் மற்றும் சுழல் இறக்கைகள் கொண்ட விமானங்களைப் பயன்படுத்தி நாட்டின் பல பிரயாணக் கேந்திர நிலையங்களுக்கு விமான சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்தது. 2016 ஆம் ஆண்டில் செனொக் அவியேசன், வ/ப IWS அவியேசன் மற்றும் ரிஜ்சி ஸ்கைலாக் கம்பனிகள் ஹெலிகப்டர் மூலமான விமானக் கையாளுகைச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டனர். உள்நாட்டு விமான நிலையங்களுக்கிடையே பிரயாணிகள் போக்குவரத்தை மேற்கொள்வதற்காக நிலையான இறக்கை விமானங்கள் பயன்படுத்தப்பட்ட மிகவும் பிரபல்யம் வாய்ந்த விமான மார்க்கங்களில் சேவைகளை மேற்கொண்ட விமானப் போக்குவரத்து சேவைகள் தொடர்பிலான பட்டியல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**கடந்த ஆண்டுகளுக்குள் உள்நாட்டு விமானச் செயற்பாடுகளினால் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்ட பயணிகள் தொடர்பான புள்ளி விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

| போக்குவரத்து விபரங்கள் 2016 | | | | | |
|---|---|---|---|---|---|
1.3. 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்தின் கீழ் 2002 டிசம்பர் 27 ஆம் திகதி தாபிக்கப்பட்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை நிலையியற் சபையாகக் கருதப்படுவதுடன் அதன் பணிகளாக அமைவது 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்தினால் 2010 இலக்கம் 14 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை சட்டத்தினாலும் உள்ளடக்கப்பட்டுள்ள சட்ட ரீதியிலான ஒழுங்கு விதிமுறைகளின் கீழ் செயற்பட்டு சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை விதிமுறைகளுக்கமைய சிவில் விமான சேவையின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் செயற்திறன் உட்பட சிவில் விமான சேவையினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை மேற்பார்வை செய்வதாகும்.

### முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2. பொதுவான கொள்கைகள்

**2.1 இணக்க வெளிப்பாடுகள்**

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள், விளக்கமான வருமானம், பங்கு மாற்றங்கள். நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் குறிப்புக்களும் கணக்கீட்டு கொள்கை சுருக்கமும் (நிதி வெளிப்பாடு) சர்வதேச கணக்கீட்டுத் தரச் சபையினால் வெளியிடப்பட்ட சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் தரம் (IFRS) பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நிதி அறிக்கைப்படுத்தல் தரம் (SLFRS) இற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு:ள்ளது.

**வெளிப்பாடுகள் தொடர்பான பொறுப்புக்கள்**

நிதி வெளிப்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பது தொடர்பான பொறுப்புக்கள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் முகாமைத்துவத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

**2.2. வெற்றிகரமான வர்த்தகம்**

இந் நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் போது முகாமைத்துவமும், இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் இலாபமீட்டும் வெற்றிகரமான வர்த்தகமாக தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வதற்கு காணப்படும் இயலுமைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு சட்டரீதியான பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொண்டு தொடர்ந்தும் எதிர்காலத்திற்காக அச் செயற்பாடுகளை நிலையாகப் பேணுவதற்கு தேவையான போதியளவு வளம் அதனிடம் காணப்படுவதாக நியாயான எதிர்பார்ப்புக்கள் முகாமைத்துவதிற்கு உள்ளது. எதிர்காலம் தொடர்பில் பயன்பாட்டு அடிப்படையில் காணப்படும் தகவல்களைக் கருத்திற் கொள்ளும் வேளையில் அதிகார சபைக்கு அதன் செயற்பாடுகளை இடைநிறுத்த அல்லது ஏலமிட வேண்டி ஏற்படும் என்பதை காணமுடியவில்லை. இதற்கமைய முன் அதிகார சபையில் நிதி நிலைமைகளை தயாரிக்கும் போது தொடர்ந்தும் இலாபமீட்டும் வர்த்தக அடிப்படையில் (going concern basis) பயன்படுத்தப்படுகின்றது.

**2.3. முக்கியத்துவம் வாய்ந்த கணக்குகள் மீதான தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்**

அதிகார சபையின் நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் போது அறிக்கைப்படுத்தப் பட்ட தினத்திற்கு அறிக்கைப்படுத்தப்பட்ட வருமான அளவு, செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உட்பட தொடர்ச்சியான பொறுப்புக்கள் மூலம் வெளிப்படுத்தல் போன்றவைகள் மீது அழுத்தங்கள் ஏற்படக்கூடியதற்கமைய தீர்மானங்கள் மற்றும் ஊகங்களைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலை அதிகார சபைக்கு ஏற்படுகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் இதற்கமைய ஊகங்கள் காரணமாக எதிர்காலத்தில் ஏதேனும் சொத்து அல்லது பொறுப்புக்களை முன்னெடுத்துச் செல்லும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பீடுகளை மேற்கொள்வது அவசியமாக அமையும். கருத்துக்கள் அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தும் செயற்பாடுகளின போது கட்டியெழுப்பப்படும்

கருத்துக்கள் ஊகங்களைத் தவிர நிதி வெளிப்பாடுகளில ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுகள் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்**

எதிர்வரும் நிதியாண்டுக்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை முன்கொண்டு செல்லப்பட்ட நிலுவைகளின் ஒப்பீடுகள் அவசியப்படின் குறிப்பிடத்தக்களவு பாதிப்புக்களை ஏற்படுத்தும் எதிர்காலத்தின் மதிப்பீட்டுத் தேவைகள் ஏற்படும் வரை பிரதான வகைகள் தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்த ஊகங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றன.

**(அ) நிதிச் செயற்பாடுகளின் நியாயமான பெறுமதி**

நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாட்டின் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் நியாயமான பெறுமதி செயற்பாட்டுச் சந்தையிலிருந்து பெற முடியாத சந்தர்ப்பத்தில் கழிவாக வழங்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் முறைகள்/ அல்லது கணித முறைகளை உள்ளடக்கி பல்வேறுபட்ட மதிப்பீட்டுக் கலைசார் முறைகளை பயன்படுத்துவதன் மூலம் அது கணிப்பீடு செய்யப்படுகின்றது. இம் முறைகளுக்குத் தேவையான உள்ளீடுகள் அவ்வாறு மேற்காள்ளக்கூடிய சந்தர்ப்பங்களில் மேற்பார்வை செய்ய முடியுமான சந்தைப் புள்ளி விபரங்கள் மூலம் பெறப்படுவதாகவும் மேற்பார்வை செய்வதற்குரிய சந்தைப் புள்ளி விபரங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் நியாயமான பெறுமதியினை நிலைப்படுத்துவதற்கான மதிப்பீடுகள் (தீர்வுகள்) அவசியமாகும்.

இக்காரணிகள் தொடர்பில் ஊகங்களில் மாற்றங்கள் காரணமாக நிதி சார்ந்த பொருட்களின் அறிக்கைப்படுத்தப்பட்ட பெறுமதி தொடர்பில் அழுத்தங்கள் ஏற்பட முடியும். திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் மூலம் முன்னைய ஆண்டுகளில் அவற்றின் செலவினத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வாண்டில் அவற்றில் பெயரளவிலான பெறுமதிகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

ஐந்தொகை தினமன்று நிதிச் சொத்துக்களை முன்கொண்டு சென்ற நிலுவை ரூபா 2,182,856,428/- (2015 - &gh: 1,932,300,523/-)

**(ஆ)உரிய பிரதிலாப பொறுப்பு மதிப்பீடுகள்**

எரிய பிரதிலாப ஓய்வூதியத் திட்டங்களில் செலவினம் உறுதிப்படுத்தப்படுவது இலங்கை கணக்கீட்டுத் தரம் 19 (LKAS) இற்கமைவான (கழசஅரடய அநவாழன) சூத்திர முறைகளைப் பயன்படுத்துவதன் மூலமாகும்.
ஐந்தொகை தினமன்று உரிய பயன்களை பொறுப்புக்கள் முன்கொண்டு சென்ற பெறுமதி ரூபா. 7,356,896/-
(2015: ரூபா. 8,069,167/-)

**(இ) நியாயமான பெறுமதி**

நியாயமான பெறுமதியாக அமைவது முழுங்கை தூரம் அளவு கொடுக்கல் வாங்கல்களின போது வெளி அழுத்தங்கள் இன்றி அறிவு மற்றும் விருப்பம் கொண்ட இரு தரப்பினருக்கிடையே இணக்கத்தை எட்டுவதற்கான நியாயப் பெறுமதியாக அமைவது பொதுவாக அதற்காக செலுத்தப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட்ட நியாயப் பெறுமதியாகும். ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் சந்தையில் விலை குறிப்பிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியாக அமைவது பொதுவாக அதன் விற்பனை விலையாகும். சந்தையில் விலை குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் (நியாயப் பெறுமதியாக அமைவது பொதுவாக அதன் கேள்வி விலையாகும். நிதிக்கு சமமானவைகள் மற்றும் குறுகிய கால முதலீடு போன்ற குறுகிய கால நிதி முன்கொண்டு சென்ற பெறுமதி அதன் நியாயப் பெறுதியாக பொதுவாக ஏற்றுக் கொள்ள முடியும்.

**(ஈ) வருமான வரி**

அதிகார சபையின் வருமான வரிகளுக்கு உட்படுவதுடன் வருமான வரிக்காக தேவையான மொத்த ஒதுக்கீட்டு அளவினை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்களவு மதிப்பீடுகள் அவசியமாகும்.

**2.4 செயற்பாடுகள் மற்றும் சமர்ப்பிப்பது**

தொடர்பில் புழக்கத்திலுள்ள நிதி அதிகார சபையின் செயற்பாட்டு நிதிவகை இலங்கை நாணயமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிதி வெளிப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது இலங்கை ரூபாக்களின் அடிப்படையிலாகும்.

**2.5 கடந்த ஆண்டின் ஒப்பீடுகள்**

2.5.1.ஒழுங்குக் கோவையினை வெளிப்படுத்துவதற்காக உதவிகளைப் பெற்றுக் கொள்ள ICAO விற்கு செலுத்தப்பட்டதன் பின்னர் மீளக் கிடைக்கப் பெற்ற ரூபா 29,728,011.20 நிதி மற்றும் இலங்கையின் விமான சேவையின் நூற்றாண்டு (100) விழாவிற்காக பங்களிப்பு வழங்குவது நிதி அடிப்படையில் கிடைக்கப் பெற்ற ரூபா 2,993,688.43 நிதி கடந்த ஆண்டு வருமானமாகக் கருதி அதிகார சபையினால் முன்கொண்டு செல்லப்பட்ட இலாபத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

2.5.2.2015 ஜூலை மாதத்திற்கு

முன்னர் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளத்திற்கமைய PAYE வரி அடிப்படையில் அதிகார சபையின் நிதியத்திலிருந்து ரூபா 5,285.00 நிதி செலுத்தப்பட்டிருந்ததுடன் அக்கொடுக்கல் வாங்கல்களின் அளவு தொடர்பில் கருத்திற் கொண்டு அது அமுலில் உள்ள ஆண்டின் கொடுப்பனவுக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பின்னர் அதன் ஊழியர்களது சம்பளத்திலிருந்து PAYE வரி குறைக்கப்படுகின்றது.

## 3. விசேட கணக்கீட்டுக் கொள்கைகள்

**3.1 நிதிச் சொத்துக்கள்**

அதிகார சபை அதன் நிதிச் சொத்துக்களை கீழ் குறிப்பிடப்பட்டவாறு வகைப்படுத்தியுள்ளது. கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள், காலாவதியாகும் வரை தேக்கி வைக்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யவுள்ள சொத்துக்கள் என்ற அடிப்படையிலாகும். முகாமைத்துவத்தினால் ஆரம்ப அங்கீகாரத்தின் போது இவ் வகைப்படுத்தல்கள் உறுதிப்படுத்தப்படுவதுடன் அது உரிய முதலீடுகள் பொறுப்பேற்கப்பட்ட தேவைக்கமைய நிலைப்படுத்தப்படுகின்றது.

**3.1.1 வகைப்படுத்தல்கள்**
(அ) கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள்
கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் எனப்படுவது செயற்பாட்டுச் சந்தையின் விலைகள் குறிப்பிடாத உரிய தினத்திற்கு செலுத்த வேண்டிய அல்லது உறுதிப்படுத்தக்கூடிய கொடுப்பனவுகளைக் கொண்ட அல்லது பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். பொதுவான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்ட கிடைக்க வேண்டியவைகளும் இப் பிரிவின் கீழ் வகைப்படுத்தப்படுவதுடன் அவ்வாறான சொத்துக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பீடுகள் தொடர்பில் மீளாய்விற்குட்படுத்தப்படுகின்றன.

(ஆ) முதிர்ச்சி அடையும் வரை தேக்கி வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள்
முதிர்ச்சி அடையும் வரை தேக்கி வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் என்பது அதிகார சபையின் முகாமைத்துவத்திற்கு முதிர்ச்சி அடையும் வரை தேக்கி வைப்பதற்கான இயலுமை உறுதியான குறிக்கோளைக் கொண்ட உரிய தினத்திற்கு செலுத்த வேண்டிய மற்றும் உறுதிப்படுத்த முடியமான கொடுப்பனவுகளைக் கொண்ட பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். இருப்பினும் கீழ் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் இவ் வகையில் அடங்குவதில்லை.

- ஆரம்ப அங்கீகாரத்திற்கு பின்னர் அதிகார சபையினால் இலாபம் அல்லது நட்டம் ஊடாக தீர்க்கப்படும் நியாயப் பெறுமதி கொண்ட சொத்தாக பெயரிடப்படும் சொத்துக்கள்

- அதிகார சபையினால் விற்பனை செய்யவுள்ள சொத்தாக பெயரிடப்படும் சொத்துக்கள்

- கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் தொடர்பாக வரைவிலக்கணப்படுத்த முடியுமான சொத்துக்கள் முதிர்ச்சி அடையும்வரை பேணப்பட்ட முதலீடுகள் மூலம் கிடைக்கும் வட்டி வருமான வெளிப்பாட்டில் உள்ளடங்குவதுடன் “முதலீட்டு வருமானம்” என அறிக்கைப்படுத்தப்படுகின்றது.

(இ) விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்கள்

விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்களாக அறிமுகப்படுத்தப்படுவது நிச்சயமற்ற கால எல்லைக்காகத் தேக்கி வைக்க எதிர்பார்க்கப்படும், ஏல விற்பனை செய்வதற்கான தேவை அல்லது வட்டி விகிதாசாரம், செலாவணி விகிதாசாரம் அல்லது பங்கு மாற்றங்களினால் ஏற்படக்கூடிய தேவைகளுக்கமைய விற்பனை செய்ய வேண்டி ஏற்படும் கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள், முதிர்ச்சியடையும் வரை தேக்கி வைக்கப்பட்ட முதலீடு அல்லது இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியாக அங்கீகரிக்கப்படும் நிதிச் சொத்துக்கள் அல்லாத நிதிச் சொத்துக்களாகும்.

**3.2 அங்கீகரித்தல் மற்றும் அளவீடுகள்**

நிதிச் சொத்துக்கள் பிரதானமாக நியாயப் பெறுமதிமதிக்கமைய ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதிக்கமைய முன்கொண்டு செல்லப்படாத சகல நிதிச் சொத்துக்களையும் அனுப்பி பொறுப்பேற்பதற்காக நேரடியாக செலவாணி கொடுக்கல் வாங்கல்கள் செலவினத்திற்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்காக நியாயப் பெறுமதிக்கு முன்கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்கள் பிரதானமாக நியாயமான பெறுமதியில் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் செலவினம் வருமான வெளிப்பாட்டில் செலவாகக் குறிப்பிடப்படுகின்றன. நிதிச் சொத்துக்கள் மூலம் பெறும் நிதிப்பாய்ச்சலை ஏற்றுக் கொள்ளும் உரிமை முடிவடையும் வேளையில் அல்லது நிதிச் சொத்துக்கள் மாற்றப்பட்டு உரிமையின் பயன்கள் மற்றும் பாதிப்புக்களையும் அதிகார சபையினால் சமநிலைப்படுத்தி மாற்றப்படும் வேளையில் அல்லது அவ்வாறான சொத்துக்களை ஏற்றுக் கொள்வது கைவிடப்படுகின்றது. (னுநசநஉழபnைநைன) விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்களை தொடர்ந்து நியாயமான பெறுமதிக்கு பேணப்படுகின்றது. காலாவதியாகும் வரை வைத்திருக்கும் நிதிச் சொத்துக்களும் கடன் மற்றும் கிடைக்கவேண்டியவைகளும் அமுலில் உள்ள வட்டி அளவினை பயன்படுத்துவதன் மூலம் தேய்மானம் மேற்கொண்டு செலவினம் பேணப்படுகின்றது. விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிதி மற்றும் நிதியல்லாத பிணைகளின் நியாயப் பெறுதியில் மாற்றங்கள் இருப்பின் விளக்கமாக வருமானத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விற்பனை செய்யவுள்ள சொத்துக்களாக

வகைப்படுத்தப்பட்டு விற்பனை செயயப்படும வேளையில் அல்லது அவற்றிக்குப் பாதிப்புக்கள் ஏற்படும் வேளையில் வேறு விளக்கமான வருமானத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

விற்பனை செய்யவுள்ள சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ள பிணை விற்பனை செய்யும் போது அல்லது அதற்கு இழப்பீடுகள் ஏற்படும் பட்சத்தில் அவை விளக்கமான வருமானத்தின் கீழ் உட்படுத்தப்பட்டு திரண்ட நியாயப் பெறுமதியின் ஒப்பீட்டுச் சொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தேறிய இலாபம்/ நட்டமாக வருமான வெளிப்பாட்டில் உள்ளடக்கப்படுகின்றது.

விற்பனை செய்யவுள்ள பிணைக்காக அமுலில் உள்ள வட்டி முறையினை பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட வட்டி அளவு வருமான வெளிப்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

### 3.3 நியாயப் பெறுமதியினை உறுதிப்படுத்தல்

கடன் மற்றும் முற்பணங்களைப் போன்று வங்கி உட்பட கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோருக்கு காணப்படும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதி உறுதிப்படுத்தப்படுவது கடன் நிலைமை, அதனைத் தீர்த்தல் மற்றும் செலவினத்தை கருத்திற் கொண்டு தற்போதைய பெறுமதி முறையினைப் பயன்படுத்தும் அடிப்படையிலாகும்.

வர்த்தகக் கிடைக்க வேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகளின் இழப்பீடுகளுக்கான ஒதுக்கீடுகளை குறைத்து முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி அவற்றின் நியாயப் பெறுமதியாக பொதுவாக ஏற்றுக் கொள்ள முடியும்.

### 3.4 அங்கீகாரத்தைக் கைவிடல் (De-recognition)

கீழ் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் ஏதேனும் நிதிச் சொத்துக்கள் அல்லது (உரிய சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்களின் பகுதி அல்லது சமமான நிதிச் சொத்துப் பிரிவின் ஒரு பகுதி) ஏற்றுக் கொள்வது கைவிடப்படுகின்றது.

- உரிய சொத்துக்கள் மூலம் பெறும் நிதிப்பாய்ச்சலைப் பொறுப்பேற்கும் உரிமை பூர்த்தியடையும் வேளையில்.
- சொத்துக்கள் மூலம் பெறும் நிதிப்பாய்ச்சலை பொறுப்பேற்கும் உரிமையினை அதிகார சபையினால் மாற்றப்பட்டுள்ள அல்லது அதிகார சபையினால் பொறுப்பேற்கும் நிதி “கைமாற்றல்” (Pass through) வேலைத்திட்டத்தின் கீழ் கூடுதலான தாமதங்கள் இன்றி மூன்றாம் தரப்பினருக்கு செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ள சந்தர்ப்பம் மற்றும்

(அ)அதிகார சபையினால் சொத்துக்களில் பிரதிலாபங்கள் மற்றும் பாதிப்புக்கள் கணிசமான அளவு அடிப்படையில் மாற்றப்பட்டிருப்பின்

(ஆ)அதிகார சபையின் சொத்துக்களின் பிரதிலாபங்கள் மற்றும் பாதிப்புக்கள் சகல கணிசமான அடிப்படையில் மாற்றுதல் அலலது தேக்கி வைக்காது இருப்பினும் சொத்துக்களின் நிருவாகம் மாற்றப்பட்டிருப்பின்

அதிகார சபையினால் ஏதேனும் ஒரு சொத்தின் மூலம் கிடைக்கும் நிதிப் பாய்ச்சல்களைப் பொறுப்பேற்கும் உரிமை மாற்றப்பட்டிருப்பின் அல்லது “கைமாற்றல்” (Pass through) வேலைத்திட்டத்தில் உள்ளடக்கி உரிய சொத்துக்களின் சகல பயன்பாடுகள் மற்றும் பாதிப்புக்களை மாற்றியமைத்தல் அல்லது கணிசமாக தேக்கி வைக்காது அதன் நிருவாகத்தை மாற்றாதிருப்பின் அல்லது அவ்வாறான சொத்தினை ஏற்றுக் கொள்வது அதிகார சபை அச்சொத்துக்கு தொடர்ந்தும் தலையீடு செய்யும் வரை மாத்திரமாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிகார சபை அச் சொத்துக்கள் சார்ந்ததாக உள்ள பொறுப்பினை ஏற்றுக் கொள்கின்றது. மாற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் அது சார்ந்த பொறுப்புக்கள் அதிகார சபையினால் நிலைப்படுத்தப்பட்டுள்ள பயன்கள் மற்றும் பொறுப்புக்கள் மூலம் சித்தரித்து காட்டும் அடிப்படையில் அளவீடு செய்யப்படுகின்றது. மாற்றப்பட்ட சொத்துக்களுக்கான பிணையின் தன்மைக்கமைய அதிகார சபையின் தலையீடுகள் மதிப்பீடு செய்யப்படுவது சொத்தின் ஆரம்பப் பெறுமதி மற்றும் அதிகார சபைக்கு மீள செலுத்த வேண்டி ஏற்படக்கூடிய உயர்ந்தபட்ச பெறுமதி ஆகிய இரண்டின் குறைந்த பெறுமதி அடிப்படையிலாகும்.

## 4. சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

### 4.1. செலவினம்/மீள்மதிப்பீடு

உரிமையாளர் வசித்துவரும் சொத்துக்கள் உட்பட சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் நாளாந்த சேவைச் செலவினங்களைத் தவிர திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட இழப்பீடுகளை குறைத்து செலவினத்திற்கு குறிப்பிடப்படுகின்றது. மீள் ஒதுக்கீடு அல்லது பிரதான பரிசோதனை செலவினத்தைக் கொண்டவைகளின் செலவினம் நம்பகத்தன்மையுடன் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின் மற்றும் உரிய வகை சார்ந்ததாக எதிர்காலத்தில் நிறுவனத்திற்குப் பொருளாதார பயன்கள் கிடைக்கக் கூடியதாக இருப்பின் அவ்வாறான செலவினம் மூலதனமாக்கப்படுகின்றது.

சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் செலவினமாக கருதப்படுவது அவற்றை பொறுப்பேற்றல் அல்லது கட்டியெழுப்பல் செலவினம் தேவையானவாறு பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு முன்கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமாகும். சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் அவ் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் வகைகளின் சேர்த்து மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதிகார சபையினால் சகல 03 மாதங்களுக்கு ஒரு தடவையும் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் கொள்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினம் மீள் மதிப்பீட்டுக்கு உட்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதிக்கு முன்கொண்டு செல்லப்பட்ட அளவில் பாரியளவு மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் அவ்வாறான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றன.

சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும் வேளையில் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியில் ஏதேனும் அதிகரிப்பு ஏற்படும் பட்சத்தில் அவ் அதிகரிப்பு நேரடியாக மீள் மதிப்பீட்டுப் பிரிவில் வைப்பிலிடப்படுகின்றது. இருப்பினும் அவ் அதிகரிப்பினால் இணைச் சொத்துக்கள் வருமான வெளிப்பாட்டில் முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டின் குறைவில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அவ்வாறான அதிகரிப்பு வருமான வெளிப்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஏதேனும் தற்போதைய மீள் மதிப்பீட்டு நிலுவை காரணமாக அச்சொத்தும் அதற்கு முன்னர் மீள் மதிப்பீட்டு மிகை தழுவப்படுவதாயின் நேரடியாக மீள் மதிப்பீட்டுப் பிரிவிலுள்ள மிகைக்கு எதிராக அது தீர்க்கப்படுகின்றது. ஏதேனும் சேமிப்பு காணப்படும் பட்சத்தில் அது செலவினமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சொத்து விற்பனை செய்யப்படும் வேளையில் அல்லது நீக்கப்படும் வேளைளயில் அதற்குரிய மீள் மதிப்பீட்டுப் பிரிவில் தேக்கி வைக்கப்பட்ட உழைப்புக்களுக்கு மாற்றப்படுகின்றது.

**4.2** பொதுத்திறைசேரி மூலம் அரசாங்கத்தினால் அதிகார சபைக்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் அச்சொத்துக்கள் பொறுப்பேற்ற தினத்தில் காணப்பட்ட நியாயப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது (2003 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுக்குப்படுத்தப்பட்டது) ஐகுயுளு இற்கு மாற்றப்பட்ட பணிகளுக்காக அச்சொத்துக்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் 2011 ஜனவரி 01 ஆம் திகதி காணப்பட்ட செலவினமாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

4.3. 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் 9 வது வாசகத்திற்கமைய கௌரவ அமைச்சரினால் மட்டக்களப்பு விமானத் தளம் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு மாற்றப்பட்டு பொறுப்பேற்க 2016 ஜூலை 01 ஆம் திகதி இலக்கம் 1973/78 கொண்ட வர்த்தமாணி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விமான நிலையம் தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்திடும் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. விமான நிலையச் செயற்பாடுகள், பராமரிப்புக்கள் மற்றும் இரண்டாவது மற்றும் மூன்றாவது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விமானப் போக்குவரத்து சேவை வழங்கல் தொடர்பிலான கணக்கினை பேணும் பணிகள் கௌரவ அமைச்சரினால் அது தொடர்பில் வர்த்தமாணி அறிவித்தல் பிரசுரிக்கும் கட்டளையினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.4. இலக்கம் 65-3651 மற்றும் இலக்கம் 65-3653 கொண்ட இரு வாகனங்களின் பெறுமதி இலங்கை சுங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரியளவினை அடிப்படையாகக் கொண்டு கணக்குகளில் பதியப்பட்ட இரு வாகனங்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது. அது கிடைக்கப் பெற்றதன் பின்னர் அது தொடர்பில் தொடர்ந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 4.5 தேய்மானம் மேற்கொள்ளல்.

சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் செலவினம்/ மதிப்பீட்டுப் பெறுமதிக்கமைய குறுகிய அடிப்படையினைப் பயன்படுத்தி (சொத்துக்களின் செலவினங்கள்/ மதிப்பீட்டுப் பெறுமதியில் 10% தினை குறைத்து) தேய்மானம் கணிப்பீடு செய்யப்படுகின்றது. காணியைத் தவிர சகல சொத்துக்களினதும் செலவினம் மற்றும் உபகரணங்கள் பயன்மிக்க ஆயுட்காலம் நிறைவடையும் வேளையில் நீக்கக்கூடியவாறு வருடாந்தம் தேய்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டடம் | 6 2/3 % |
| மோட்டார் வாகனம் | 12.5 % |
| ஆதனங்கள், இயந்திர உபகரணங்கள | 25 % |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 25 % |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 25 % |

சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட தினம் தொடக்கம் தேய்மானம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு சொத்துக்களினதும் தேய்மானம் மேற்கொள்ள வேண்டிய ஆரம்பப் பெறுமதியினை உறுதிப்படுத்தும்போது அச் செலவினத்தில்/மதிப்பீட்டுப் பெறுமதியில் 10% நிலுவைப் பெறுமதி நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் டுமுயுளு-16 உரியவாறு சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் பொருளாதார ஆயுட்காலம் பெறமுடிந்திருந்த சிறந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் பயனாக ஒரு சில சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களில் தேய்மானம் மேற்கொள்ளும் விகிதாசாரம் மாற்றப்பட்டது. சொத்துக்களின் பொருளாதார ஆயுட் காலம் மாற்றமடைவதினால் ஏற்படக்கூடிய அழுத்தங்களுக்கமைய 2012 ஆம் ஆண்டு தொடக்கம் நிதி வெளிப்பாடுகளில் ஒப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2008 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்காக பயன்மிக்க ஆயுட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்யப்படுவதுடன் தேய்மான விகிதாசாரம்

25% - 12.5 % வரை குறைக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் பயன்படுத்தப் பொருத்தமற்றது என்ற தீர்மானித்த அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதினால் தேய்மான விகிதாசாரத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

### 4.6 அங்கீகரிப்பதை கைவிடல்

சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் வகைகள் அகற்றப்பட்ட வேளையில் அல்லது அவை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் தொடர்ந்தும் எதிர்கால பொருளாதார பிரதிலாபம் தொடர்பில் எதிர்பார்க்கக்கூடிய நிலைமைக்கு மாற்றமடையும் வேளையில் அல்லது அவ்வாறான சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை அங்கீகரிப்பது கைவிடப்படுகின்றது. சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் வகைகள் அங்கீகரிப்பதை கைவிடல் மூலம் ஏற்படக்கூடிய நட்டம் அல்லது இலாபமாக உறுதிப்படுத்தப்படும் அவ்வாறான சொத்துக்கள் விற்பனை செய்து பெற்றுக் கொண்ட நிதியினை முன்கொண்டு சென்ற இரு பெறுமதிகளில் மாற்றம் அடைவதுடன் அவ் இலாபம் அல்லது நட்டம் வருமான வெளிப்பாட்டில் காண்பிக்கப்படுகின்றது.

4.7 2016 ஆம் ஆண்டு அதிகார சபையின் பிரதான அலுவலகக் கட்டடத்தை நிர்மானிப்பதற்கு வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 7,127,059.00 பெறுமதியான கட்டடம் அகற்றப்பட்டது. இதனால் ரூபா. 2,039,537.32 நட்டம் பதியப்பட்டுள்ளது.

### 4.8 கற்புலனாகக்கூடிய சொத்துக்களின் இழப்பீடுகள்

அதிகார சபையின் சகல அறிக்கைப்படுத்தும் கால எல்லை இறுதியிலும் அதன் கற்புலனாகும் சொத்துக்களுக்கு இழப்பீடுகள் ஏற்படுவதினால் ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருப்பதாக காணக்கூடியதாக இருப்பதாக உறுதிப்படுத்துவதற்காக இச் சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்பட்ட பெறுமதி மீளாய்விற்குட்படுத்தப்படுகின்றது. அவ்வாறு தென்படக்கூடியதாக இருப்பின் இழப்பீட்டு நட்டம் எந்தளவு என உறுதிப்படுத்துவதற்காக உரிய சொத்துக்களிலிருந்து அறவிடக்கூடிய நிதி எந்தளவு என மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஒரு தனிச் சொத்தினை அறவிடக்கூடிய நிதி மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் அச்சொத்துக்களுக்குரிய முழுமையான நிதியீட்டல் பிரிவிற்காக அறவிடக்கூடிய நிதி உறுதிப்படுத்தப்படுகின்றது. இதற்கான காரணங்களுடன் மற்றும் பொருத்தமானவாறு ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் அடிப்படையினை இனங்காணக்கூடிய சந்தர்ப்பங்களில் சொத்துக்களில் நிதி உழைப்புப் பிரிவாகவும் வேறுபடுத்தப்படுகின்றது. அவ்வாறு இன்றேல் அதற்கான காரணம் மற்றும் பொருத்தமான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதனை அடிப்படையாகக் கொண்டு இனங்காணக்கூடியதாக இருப்பின் அவை சிறிய நிதி உழைப்புப் பிரிவிற்கு ஒதுக்கப்படுகின்றது. இன்றேல் அவ்வாறான காரணங்களுடன் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஒதுக்குவதை இனங்காண முடியுமாயின் அவை சிறிய நிதி ஒதுக்கீட்டு அலகுப் பிரிவில் உள்ளடக்கப்படுகின்றது.

அறவிடக்கூடிய நிதியாக அமைவது விற்பனையின் செலவினத்தைக் குறைத்து நியாயப் பெறுமதி அல்லது பயன்படுத்தப்படும் இடைப்பட்ட பெறுமதி ஆகிய இரண்டில் கூடிய பெறுமதியாகும். பயன்படுத்தும் போது பெறுமதியினை மதிப்பீடு செய்வது நிதியின் காலப் பெறுமதி தொடர்பில் தற்போதைய சந்தைப் பெறுமதி மற்றும் எதிர்கால நிதிப்பாய்ச்சல் மதிப்பீடுகளை ஒப்பீடு செய்யாதுள்ள சொத்துக்களுக்கு விசேட அவதானம் காண்பிக்கப்படும் முன்னைய - வரிக் கழிவு விகிதாசாரத்தை பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால நிதிப்பாய்ச்சல் பிரிவின் தற்போதைய பெறுமதிக்கு கழிவு கணிப்பீடு செய்யப்படுகின்றது.

சொத்து (அல்லது நிதி உழைப்புப்பிரிவு) அறவிடக்கூடிய நிதி முன்கொண்டு சென்ற பெறுமதியை விடக்குறைவானது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வேளையில் அச் சொத்தின் (நிதியீட்டல் பிரிவின்) முன்கொண்டு சென்ற பெறுமதி அறவிடக்கூடிய அளவினைக் குறிப்பிட்டு குறைக்கப்படுகின்றது. இருப்பினும் உரிய சொத்துக்கள் முன்கொண்டு செல்லப்பட்டிருப்பது மீள் மதிப்பீட்டுப் பெறுமதியாயின் உரிய இழப்பீட்டு நட்டம் மீள் மதிப்பீட்டுக் குறைவாகக் கருதப்படுகின்றது.

## 5. கற்புலனாகும் சொத்துக்கள்

2015 ஆம் ஆண்டில் சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட IT மென் பொருள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் கற்புலனாகும் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

கற்புலனாகும் சொத்துக்களை அளவீடு செய்யும் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. IT மென்பொருட்களின் செலவினங்களுக்கமைய (சொத்துச் செலவினத்தின் 10மூ நிலுவைப் பெறுமதியினை குறைத்து) குறுகிய முறையினை அடிப்படையாகக் கொண்டு சொத்தின் பெறுமானத்தைப் பதிவளிப்பதற்காக ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யப்படுகின்றது. பயன்மிக்க ஆயுட்காலம் பூர்த்தியடையும் வேளையில் அதனை நீக்குவதற்காக சகல IT மென்பொருள் 50மூ பெறுமானம் பதிவளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## 6. பொருட் பதிவேடு

சகல பொருட்பதிவேடுகளும் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டிருப்பது செலவினத்திற்கு அல்லது தேறிய திரண்ட பெறுமதியாகிய இரண்டில் குறைந்த பெறுமதியின் அடிப்படையிலாகும். செலவினம் உறுதிப்படுத்தப்படுவது First in first out (FIFO) அடிப்படையிலாகும்.

## 7. ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்களுக்கிடையே வேறு கடன்படுனர்கள் அல்லது கிடைக்க வேண்டியவைகள், முற்பணம், வைப்பு, முற்கொடுப்பனவு மற்றும் கிடைக்க வேண்டிய நிதியும் அடங்குகின்றது.

(அ) முற்பணம், வைப்பு, முற்கொடுப்பனவு செலவினம்
ஒரு நிதியாண்டை விட மேற்பட்ட காலத்திற்குள் பயன்கள் கிடைக்கக்கூடிய அல்லது அதனுடன் தொடர்புபட்டுள்ளதாக கருத்திற்கொள்ளக்கூடிய செலவினம், முற்பணம், வைப்பு மற்றும் முற்கொடுப்பனவு செலவினமாக வகைப்படுத்தப்படுகின்றது. அவ்வாறான செலவினம் அதற்குரியதான கால எல்லைக்குள் சமமான காலத்தின் அடிப்படையில் நீக்கப்படுகின்றது.

(ஆ) ஏனைய கடன்படுனர்
ஏனைய கடன்படுனர்களின் இழப்பீட்டு நட்டம் குறைக்கப்பட்ட செலவினத்திற்கு அங்கீகரிக்கப்படுகின்றது.

(இ) கிடைக்க வேண்டிய வரி நிதி
கிடைக்கவேண்டிய வரி நிதி செலவினமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

(ஈ) பணியாளர் முற்கொடுப்பனவு
அதிகார சபை ஊழியர்களுக்கு சலுகை வட்டி விகிதாசாரத்திற்கமைய வழங்கப் பட்டுள்ள பணியாளர் சபைக் கடனில் எஞ்சியவை இதன் மூலம் காண்பிக்கப் படுகின்றது.

(உ) கிடைக்க வேண்டிய - ஏயுவு வரி
கிடைக்க வேண்டிய - வட் வரியாக ரூபா 59,504,356 நிதி 2016 நிதி வெளிப்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் கணக்காய்விற்குட்படுத்தப்பட்ட இறுதி அறிக்கை இது வரையில் உள்நாட்டு வருமானத் திணைக்களத்திலிருந்து கிடைக்கப் பெறவில்லை

## 8. நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்

முன்னர் அறிந்த நிதி அளவிற்கு இலகுவில் மாற்றப்படக்கூடிய மற்றும் பெறுமதியினை மாற்றும் சிறு அவதானங்களுக்கு மாத்திரம் உட்பட்டு கூடுதலான திரவத் தன்மை கொண்ட குறுகிய கால முதலீடுகள் மற்றும் கையிலுள்ள நிதி உட்பட நிதிக்கு சமமானவைகளை உள்ளடக்கியவைகளாகும். இவை குறுகிய கால காசுத் தேவைகளை ஈடுசெய்யும் நோக்குடன் பேணப்படுகின்றன. நிதிப்பாய்ச்சல் கூற்றுக்களின் செயற்பாடுகளுக்காக நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகளாகக் கருதப்படுவது கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள வைப்புக்களாகும். குறுகிய கால முதிர்ச்சியடையும் முதலீடுகளும் நிதிக்குச் சமமானவைகளாகக் கருதப்படுகின்றன. வங்கி மேலதிகப் பற்று கூட்டிணைக்கப்பட்ட ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் கடன்படுனர்களின் காண்பிக்கப் படுகின்றன.

## 9. ஒதுக்கீடுகள்

உரிய பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக பொருளாதார பயன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிச் செல்லுகை சாத்தியமாக இருக்கக்கூடிய வேளையிலும் அத்துடன் பொறுப்புக்களின் அளவு தொடர்பிலும் நம்பகரமான மதிப்பீடுகளையும் தயாரிக்கக்கூடிய தற்போதைய பொறுப்பு (சட்ட ரீதியான அல்லது அங்கீகரிக்கப்பட்ட) முன்னைய நிகழ்வின் பயனாக அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள வேளையில் ஒதுக்கீடுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. நிதியின் காலப் பெறுமதியின் அழுத்தங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவதாயின் முதலில் நிதியின் காலத்திற்குரிய பெறுமதி தொடர்பில் தற்போதைய சந்தை மதிப்பீடுகள் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொறுப்புக் கூறுவதற்கு விசேடமான அவதானங்கள் சித்தரித்துக் காண்பிக்கப்படும். ஆரம்ப வரி கழிவு விகிதாசாரத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நிதிப்பாய்ச்சலில் கழிவாக மாற்றுவதன் மூலம் ஒதுக்கீடுகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

### 9.1 ஊழியர் பிரதிலாபங்கள்

#### தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

தொடராக உரிய பிரமாணக் குறிப்பு மற்றும் ஒழுங்குக் கோவைகளுக்கமைய ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியம் (நுவுகு) பங்காளர் நிதிக்கு உரிமை கொண்டவர்களாகும். அதிகார சபை உழியர்களின் மொத்தத் தேறிய சம்பளத்திற்கமைய உரிய பங்காளர் நிதி அளவு ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்தப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக எந்தவொரு கொடுப்பனவுகளையும் செலுத்த சட்ட ரீதியிலான அங்கீகாரத்திற்கு நிறுவனம் கட்டுப்பட்டில்லை.

#### உரிய பிரதிலாபத் திட்டங்கள்

உரிய பிரதிலாபத் திட்டங்கள் எனப்படுவது உரிய பங்களிப்பு நிதித் திட்டங்களுக்கு மேலதிகமாக தொழில் வாய்ப்பிற்குப் பின்னரான திட்டங்கள் 1983 இலக்கம் 12 கொண்ட பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ் அதிகார சபை ஊழியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவுகளை மேற்கொள்ள சட்டத்தின் மூலம் கடப்பாடுகள் உள்ளன. இப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காகத் தேவையான ஒதுக்கீட்டு அளவு ஊழியர் மூலமும் சேவையில் ஈடுபடுத்தப்படும் சகல வருடங்களுக்காகவும் அரை மாத சம்பளம் வீதம் கணிப்பீடு செய்து தீர்மானிக்கப்படுவதுடன் அவ்வாறு கணிப்பீடு செய்யப்படுவது டுமுயுளு 19 வரையிலான சூத்திர முறையினை அடிப்படையாகக் கொண்டாகும்.

### 9.3 பணியாளர் சபை நலன்புரி மற்றும் சமூகக் காப்புறுதி நிதியம்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் 20(5) வாசகத்திற்கமைய அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சிவில் விமான சேவை அதிகார சபையுடன் இணைந்த அரச உத்தியோகத்தர்களுக்காக பணியாளர் சபை நலன்புரி மற்றும் சமூகக் காப்புறுதி நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் பெயரிலும் இந்நிதியத்தில் வைப்பிலிடப்படட நிதி அவ்வவ் உத்தியோகத்தர்களினால் சிவில் விமான சேவை அதிகார சபை மூலம் ஓய்வுபெறும் போது திரண்ட வட்டியுடன் விடுவிக்கப்படும்.

2015 ஆம் ஆண்டு நடைமுறைச் சொத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்த பணியாளர் சபை நலன்புரி மற்றும் சமூக காப்புறுதி நிதியத்தின் நிலையான வைப்பு 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறை/ நடைமுறையால்லாத சொத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டது.

## 10. நிதிப் பொறுப்புக்கள்

### 10.1 ஆரம்ப இனங்காணலும் அளவீடுகளும்

LKAS 39 வியடப்பரப்பிற்குள் உட்படும் நிதி பொறுப்புக்கள், இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதிக்கு ஏற்றுக் கொள்ளப்படும் நிதிப் பொறுப்புக்கள் அல்லது பொருத்தமானவாறு கடன்நிதி மற்றும் கடன்பெறல் ஆகியவைகள் வகைப்படுத்தப்படுகின்றன.

சகல நிதிப் பொறுப்புக்களும் அடிப்படையாகக் நியாயமான பெறுமதிக்கமைய இனங்காணப்படுவதுடன் கடன் நிதி கடன்பெறும் தேய்மான செலவினத்தின்கீழ் கொண்டுவரப்படுகின்றது. இதற்காக நேரடி கொடுக்கல் வாங்கல்கள் செலவும் உள்ளடக்கப்படுகின்றது.

வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளும் அதிகார சபையின் நிதிப் பொறுப்புக்களில் உள்ளடக்குகின்றன.

## 11. ஏனைய பொறுப்புக்கள்

திரண்ட செலவினம் ஏனைய கடன் உட்பட ஏனைய கடன்படுனர் பொறுப்புக்களில் அடங்குகின்றன. இப்பொறுப்புக்கள் அவற்றின் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் கருத்திற்கொள்ளப்படும் வரலாற்று பெறுமதியில் எடுத்துரைக்கப்படுகின்றது.

## 12. பொது ஒதுக்கீடு

1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 10.2(e) வாசகத்திற்கமைய, CAA இன் 95 வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் தீர்மானத்திற்கமைய பிரதான அலுவலகக் கட்டத்தை நிர்மானிக்கும் மூலதனச் செலவிற்காக 1,150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## 13. வருமானத்தை இனங்காணல்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் 12 வது வாசகத்திற்கமைய சிவில் விமான சேவை அதிகார சபை அதற்குரிய நிதியினைப் பேண வேண்டியதுடன் 12(2) வாசகத்தின் கீழ் அதிகார சபைக்குக் கிடைக்கும் சகல நிதி அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டும். இவ்வாறு 12(2) வாசகத்தின் கீழ் அதிகார சபைக்குக் கிடைக்கும் நிதி SLFRS இற்கமைய சமர்ப்பிக்கும் பணிகளுக்காக நிதி வெளிப்பாட்டில் வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளது.

13.2 வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டணம்/ விமான ஏற்றல் வரி மீதான சேவைக்கட்டணம், அனுமதிப்பத்திரங்களை முதலில் வெளியிடல் மற்றும் புதுப்பித்தல்கள்/விமான சேவைக் கம்பனி அனுமதிப்பத்திரம் மீதான சீர்திருத்தங்கள், நியதிச்சட்ட சேவைக் கட்டணங்கள்/ பரீட்சைக் கட்டணங்கள். மேற்கூறப்பட்ட சேவைகள்/ கட்டணங்கள் மூலம் பெறும் வருமானம் உரிய சேவை வழங்கப்பட்ட கால எல்லைக்குள் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றது.

13.3. 2015 ஆம் ஆண்டில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட விமானக் கட்டணம் மற்றும் பிரவேச அனுமதிப் பத்திரப் பாடநெறி மூலம் கிடைக்கப் பெற்ற வருமானமும் தண்டப்பணமாக மற்றும் விமான சேவையின் நூற்றாண்டு புத்தகத்தை விற்பனை செய்ததன் மூலம் பெற்ற வருமானமும் 2016 ஆம் ஆண்டில் செயற்பாடல்லாத வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 13.4 வட்டி வருமானம்

இலாபம் அல்லது நட்டங்கள் ஊடாக சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதி ஆவணங்கள் உட்பட சகல வட்டியுடன் கூடிய நிதி ஆணங்களின் வட்டி வருமானம் அமுலில் உள்ள வட்டி விகிதாசார முறையைப் பயன்படுத்தி வருமான வெளிப்பாட்டில் முதலீட்டு வருமானமாக இனங்காணப்படுகின்றது. நிறுவனத்திற்கு கிடைக்கவேண்டிய நிதிக் கிடைப்பனவுகளின் இயலுமை குறைவடைந்துள்ள சந்தர்ப்பங்களில் அவ்வாறு கிடைக்க வேண்டிய நிதி எதிர்காலத்தில் கிடைக்கும் என ஊகித்து நிதியின் தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு அறிக்கைகள் பேணப்படுகின்றன. தற்போதைய பெறுமதிக்கு கணிப்பீடு செய்யப்படுவது எதிர்காலத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கக்கூடிய நிதி உரிய வட்டி விகிதாசாரத்தை குறைத்தலின் அடிப்படையிலாகும்.



13.5 ஏனைய வருமானங்கள்
ஏனைய வருமானங்கள் திரண்ட அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

## 14. செலவினங்களை இனங்காணுதல்.

சகல செலவினங்களும் அவற்றின் உரிய கால எல்லைக்குள் காண்பிக்கப்பட்ட மற்றும் இனங்காணப்பட்ட முறையின் நியாயப் பெறுமதிக்கமைய மதிப்பீடுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

தற்போதைய பயன்மிக்க ஆயுட்கால மாற்றங்கள் அல்லது உள்ளடக்கப்பட்ட பொருளாதார பயன்களைப் பயன்படுத்தக்கூடிய எதிர்பார்ப்புடன் மாற்றங்களுக்கு ஏற்றவாறு தேய்மான கால எல்லை மாற்றமடைவதுடன் அவ்வாறான மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்களாகக் கருதப்படுகின்றன.

2015 ஆம் ஆண்டில் பொதுவான செயற்பாட்டுச் செலவினத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட DGCA சம்மேளனத்தின் செலவினம் 2016 ஆம் ஆண்டின் கூட்டம், கருத்தரங்கு மற்றும் செயலமர்வின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட 05 வாகனங்களுக்காக வாடகை மற்றும் கூலிக் கட்டணமாக ரூபா 581,390/- நிதி செலுத்தப்பட்டுள்ளது.

## 15. கடன் பெறுவதற்கான செலவினங்கள்

கடன் பெறுவதற்கான செலவினம் எனப்படுவது நிதியத்தை கடனாகப் பெற்றுக் கொள்ளும்போது அதிகார சபையினால் ஏற்கப்படும் வட்டி மற்றும் ஏனைய செலவினங்களாகும். அச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட கால எல்லைக்குள் இடம்பெற்றதாக இனங்காணப்படுகின்றது.

## 16. நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி

கால எல்லைக்காக வரிச் செலவானது நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை உள்ளடக்குகின்றது. இருப்பினும் எவையேனும் வரி நிதி வேறு விடயங்களுக்கான வருமானத்திற்குள் அல்லது நேரடிப் பங்குகளுக்குள் இனங்காணப்பட்டுள்ள வகைகளுக்குரியதாக இருப்பின் அவ்வாறான வரி தொடராக ஏனைய விரிவான வருமானம் அல்லது நேரடி பங்கில் இனங்காணப்படுகின்றது.

நடப்பு வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைக் கொண்டமைவது நடப்பாண்டை போன்ற முன்னைய ஆண்டுகளுக்குரிய வரியினை அறவிடும் பொறுப்பாளர்களினால் அறவிட உள்ள அல்லது அவர்களுக்கு செலுத்தவுள்ள நிதியளவாகும். இவ் வரியளவு கணிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்படுவது நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாட்டின் உரிய தினத்திற்கு முன்னர் அல்லது அதற்குப் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட வரிச் சட்டங்கள் மற்றும் வரி விகிதாசாரத்தின் அடிப்படையிலாகும். இதற்கமைய 2006 இலக்கம் 10 கொண்ட உள்நாட்டு வருமானச் சட்டம் மற்றும் அதன் மறுசீரமைப்பு ஒழுங்கு விதிகளுக்கமைவாக வரிச் செயற்பாடுகளுக்காக ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த இலாபத்தின் அடிப்படையில் வரி கொடுப்பனவிற்ககாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படை மற்றும் நிதி வெளிப்பாடுகளில் முன்கொண்டு செல்லப்பட்ட பெறுமதிக்கிடையே எழும் தற்காலிக மாற்றங்களுக்கமைய பொறுப்புக்களுக்கான முறைகளைப் பயன்படுத்தி தேக்கி வைக்கப்பட்ட வருமான வரி இனங்காணப்படுகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் உரிய தேக்கி வைக்கப்பட்ட வருமான வரி மீது அல்லது வரி அறவிடக்கூடிய வட்டி தொடர்பில் அளுத்தங்கள் மேற்கொள்ளப்படாத, வர்த்தக பங்குடமை அல்லாத கொடுக்கல் வாங்கல்களுக் குரியதான சொத்து அல்லது பொறுப்புக்கள் அடிப்படை இனங்காணலாக இருப்பின் அது கணக்கில் பதியப்படுவதில்லை. ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி தீர்மானிக்கப்படுவது அறிக்கைப்படுத்தப்படும் காலம் நிறைவடையும் வேளையில் அல்லது அதற்குப் பின்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த மற்றும் உரிய காலாவதியான வருமான வரிப் பொறுப்புக்களை தீர்க்கும்போது உரியதாக காணப்படும் என எதிர்பார்க்கப்படும் வரி விகிதாசாரம் (மற்றும் சட்டம்) போன்றவற்றை பயன்படுத்தியாகும்.

ஒத்தி வைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் இனங்காணப்படுவது தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டு அதற்கு எதிராக பயன்படுத்தக்கூடிய எதிர்கால வரியினை அறவிட முடியுமான வட்டி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் காலம் வரையிலாகும்.

### 20. நிலையியல் வரி விகிதாசாரம் இரட்டிப்பாக்கப்பட்ட கணக்கீட்டு இலாபங்களுக்கிடையிலான ஒப்பீடுகள் கீழ்க் குறிப்பிட்டவாறு அமைகின்றன.

| | 2016 (ரூபா) | 2015 (ரூபா) |
|---|---|---|
| வருமான வரிக்கு முன்னர் கணக்கீட்டு இலாபம் | 1,224,771,614.01 | 1,214,472,416.00 |
| கழி - வருமானத்தைத் தவிர ஏனைய வகைகளில் பெறப்பட்ட வருமானம் | (190,485,588.03) | (157,772,142.49) |
| | 1,034,286,025.98 | 1,056,700,273.51 |
| குறைக்க முடியாத செலவினம் | 24,930,991.00 | 30,403,355.15 |
| வர்த்தகத்தின் மூலம் பெற்ற நிலையியல் வருமானம் | 1,059,217,016.98 | 1,087,103,628.66 |

| | 2016 | 2015 |
|---|---|---|
| கழி - இலாபத்தைத் தவிர வரி | 0.00 | 0.00 |
| வரி அறவிடக்கூடிய வருமானம் - வர்த்தக வருமானம் | 1,059,217,016.98 | 1,087,103,628.66 |
| வரி அறிவிட முடியுமான வருமானம் - வர்த்தகமல்லாத வருமானம் | 170,838,411.06 | 121,336,825.59 |
| வரி அறிவிடக்கூடிய மொத்த வருமானம் | 1,230,055,428.04 | 1,208,440,454.25 |
| வருமான வரிச் செலவினம் | | |
| வரி அறிவிடக்கூடிய வருமானம் - வர்த்தக மற்றும் வர்த்தகமல்லாத வருமானம் | 344,415,519.85 | 338,363,327.19 |
| வருமான வரிச் செலவினம் | 344,415,519.85 | 338,363,327.19 |

தற்காலிக ஒத்தி வைத்தல் அமுல்படுத்தும் காலம் அதிகார சபையினால் நிர்வகிக்கப்படும் மற்றும் காணக்கூடிய எதிர்காலத்தில் அதனை மீள் கட்டமைக்க வேண்டியதில்லை என நம்பப்படக்கூடிய சந்தர்ப்பங்களைத் தவிர துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மீது எழும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்ட வரி ஒதுக்கீடாக மாற்றப்படுகின்றது.

அமுலிலுள்ள வரிச் சொத்துக்களுக்கு எதிராக நடப்பாண்டில் வரிப் பொறுப்புக்களை பதிவளிப்பதற்காக சட்ட ரீதியாக செயற்படுத்தக்கூடிய உரிமை இருப்பின் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வருமானமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒருவரின் அறவீட்டு பொறுப்பாளர், வரி செலுத்த வேண்டிய ஒரு நிறுவனத்திற்கு அல்லது தேறிய அடிப்படையில் நிலுவையினைத் தீர்க்க எதிர்பார்க்கும் தனித்தனியாக வரி செலுத்த வேண்டிய நிறுவனத்தின் மீது அல்லது விடுக்கப்பட்ட வரி நிதிக்கு உரியதாக இருப்பின் அல்லது அவ்வாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் பதிவழிக்கப்படுகின்றது.

செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாத நட்டம் மற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாத வரிச் செலவுகளின் கீழ் கொண்டு வரப்பட்டதான வரித்தாக்கங்கள் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைப்பதற்கான சாத்தியத்தன்மைக்கு எதிராக இவ்வாறான நட்டங்கள் பயன்படுத்தப்பட முடிகின்றபோது அது ஒரு சொத்தாக இனங்காட்டப்படுகின்றது.

## 17. வெளிநாட்டு நாணய மாற்றம் கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணயம் தவிர்ந்த நாணயங்களிலான அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும், கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட தருணத்தில் வழக்கமான பரிமாற்று வீதங்களைப் பயன்படுத்தி இலங்கை ரூபாக்களில் பதிவு செய்யப்படுகின்றது. நிதி நிலைமைத் திகதியினை ஒவ்வொரு கூற்றிலும், வெளிநாட்டு நாணயங்களில் வெளிப்படுத்தப்படும் பணரீதியற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடவடிக்கைத் திகதியில் பொதுவாகவுள்ள பரிமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன. பணரீதியான விடயத்தின் தீர்ப்பை மற்றும் பணரீதியான விடயங்களின் மீள் பரிமாற்றத்தின் மீது எழும் பரிமாற்று வேறுபாடுகள் அவை எவ்வருடத்தில் ஏற்படுகின்றனவோ அவ் வருடத்தில் வருமானக் கூற்றில் இனங்காட்டப்படுகின்றது.

## 18. அறிக்கைப்படுத்தப்பட்ட காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

பணிப்பாளர் சபை சகல விடயங்கள் தொடர்பிலும் மிக நெருக்கமாக மேற்பார்வைகளை மேற்கொள்வதுடன் ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் தொடர்பில் அமுலில் உள்ள நிதி வெளிப்பாட்டில் ஒப்பீடுகள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 19. எதிர்பாராத பொறுப்புக்கள்

கடந்த காலச் சம்பவமொன்றின் பெறுபேறு ஒன்றாக சாத்தியமான எதிர்கால கடமைப்பாடு காணப்படுமெனில் அல்லது கொடுப்பனவு ஒன்று சாத்தியமற்ற அல்லது தொகையானது நியாயமற்று மதிப்பிடப்பட்டதொன்றாக இருக்குமிடத்து கடந்த கால நிகழ்வென்றில் பெறுபேறொன்றாக தற்போதைய கடப்பாடு இருக்குமெனில் சார்ந்த பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

## 20. நிதிப் பாய்ச்சல் கூற்று

நிதிப் பாய்ச்சல் கூற்றான இலக்கம் 09 கொண்ட இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கமைய மறைமுக முறையினைப் பயன்படுத்தி நிதிப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதியல்லாத தன்மைகளைக் கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் கடந்த கால அல்லது எதிர்கால செயற்பாட்டு நிதிக் கிடைப்பனவு அல்லது கொடுப்பனவுகளை ஒத்தி வைக்க பொருத்தமான மற்றும் நிதிப் பாய்ச்சல் முதலீடுகளை மேற்கொள்ளல், நிதியாக்கம் சார்ந்த வருமானம் அல்லது செலவினங்கள் போன்ற அழுத்தங்களுக்கமைய ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட இலாபம் அல்லது நட்டம் இவ் மறைமுக முறை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 21. அரச நன்கொடைகள்

அதிகார சபை தாபிக்கப்பட்ட காலப் பகுதியில் சிவில் விமான சேவைத்



திணைக்களமாக மாற்றப்பட்ட சொத்துக்களின் திரண்ட தேய்மானத்தைக் குறைத்து அரச வழங்கல்களின் பெறுமதியாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 0.2590 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட காணித்துண்டு அரச வழங்கலாக கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே இலக்கம் 3927 கொண்ட காணி உறுதி மூலம் கிடைக்கப் பெற்றுள்ள கட்டுநாயக்கா, நைக்கந்தையில் அமைந்துள்ள காணியின் பரப்பளவு 0.5325 ஹெக்டேயராக காணப்படுகின்றது.

கட்டுநாயக்கா நைக்கந்தையில் 0.2737 ஹெக்டேயர் (முன்னர் இருந்த அளவு) காணிச் சொத்தின் பெறுமான பதிவழிப்புப் பெறுமதி ரூபா 22,049,992/- நிதி 2015 ஆம் ஆண்டில் பெறுமானப் பதிவழிப்புக் குழாமாகக் கணக்குகளில் பதியப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டில் இதன் பெறுமானப் பதிவழிப்புப் பெறுமதி அரச வழங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 2015.01.01 இல் அரச வழங்கல்கள் | - | ரூபா. | 7,350,272 |
| கூட்டு - ஆண்டில் பெறப்பட்ட அரச வழங்கல்கள் | - | ரூபா. | 22,365,308 |
| கழி : 2015 ஆம் ஆண்டுக்கான தேய்மானம் | - | ரூபா. | (544,903) |
| 2015.12.31 இல் அரச வழங்கல்கள் | - | ரூபா. | 29,170,677 |
| கூட்டு - ஆண்டில் பெறப்பட்ட அரச வழங்கல்கள் | - | ரூபா. | 22,049,992 |
| கழி : 2016 ஆம் ஆண்டுக்கான தேய்மானம் | - | ரூபா. | (872,710) |
| 2016.12.31 இல் அரச வழங்கல்கள் | - | ரூபா. | 50, 347,959 |

### அரச வழங்கல் பெறுமானங்களை பதிவழிப்புச் செய்தல்

சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் செலவினம்/பெறுமதிக்கு (சொத்தின் செலவினம்/பெறுமதிக்கமைய எஞ்சிய மதிப்பீட்டுப் பெறுமதியில் 10% தை குறைத்து) சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களில் குறுகிய நிரல் அடிப்படைக்கமைய தேய்மானம் மற்றும் ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யப்படுகின்றன. காணியைத் தவிர சகல சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் அரசாங்கத்தின் வழங்கல்களுக்கு அமைவாக கணக்குகளில் பதியப்படுவதுடன் அவற்றின் பயன்மிக்க ஆயுட்காலத்திற்குள் கீழ்க் குறிப்பிடப்பட்ட விகிதாசாரங்களுக்கமைய பெறுமானப் பதிவளிப்புக்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

| | |
|---|---|
| கட்டடம் | - 6 2/3 % |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | - 25 % |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | - 25 % |

## 22. தொடர்புபட்ட தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டுத் தரம் (LKAS 24) தொடர்புபட்ட தரப்பினருடனான வெளிப்படுத்தல்களுக்கமைய அதிகார சபையின் செயற்பாட்டுத் திட்டங்களுக்கு, வழிகாட்டல்களுக்கு மற்றும் நிருவாகத்திற்கமைய அதிகார சபை பொறுப்புக்கள் கொண்டவர்கள் பிரதான முகாமைத்துவப் பிரிவாகக் கருதப்படுகின்றனர். இதனால் அதிகார சபையின் பணிப்பாளர் சபை பிரதான முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான தரப்பினராக அமைகின்றனர்.

பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்காக நட்டஈடுகள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

| | 2016 (ரூபா.) | 2015 (ரூபா.) |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் பிரதிலாபம் | 58,997,664 | 35,923,733 |
| தொழிலுக்குப் பின்னரான பிரதிலாபங்கள் | - | - |
| ஏனைய நீண்டகாலப் பிரதிலாபங்கள் | - | - |
| சேவை முடிவுறுத்துவதற்கான பிரதிலாபங்கள் | - | - |

| குறிப்பு | 2016 (ரூபா.) | 2015 (ரூபா.) |
|---|---|---|
| **(1) செயற்பாட்டு வருமானம்** | **1,496,319,113** | **1,462,339,535** |
| வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் | 1,233,237,881 | 1,236,794,398 |
| விமான ஏற்றி இறக்கல் வரி - சேவைக் கட்டணம் | 181,187,790 | 151,426,238 |
| மேற்பார்வை ஊழியர்களின் வருமானம் | 81,893,442 | 73,532,009 |
| ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் | - | 586,890 |
| **(2) செயற்பாட்டு ரீதியற்ற வருமானங்கள்** | **163,951,935** | **116,553,039** |
| வாடகை வருமானங்கள | 111,146 | 101,195 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை | 36,861 | 155,581 |
| சுற்றுலா பங்களா ஒதுக்கீடு | 270,940 | 132,480 |
| ஊழியர் கடன் மீதான வட்டி வருமானம் (IFRS) ஒப்பீடுகள் | 5,270,095 | 3,505,538 |
| அரச வழங்கல்களின் பெறுமானப் பதிவழித்தல் | 872,710 | 544,903 |
| கேள்வி கோரல் கட்டணம் | 10,000 | 7,000 |
| விமானக் கட்டணம் மற்றும் பிரவேசப் பத்திர பாடநெறி - கிடைப்பனவு | 267,600 | - |
| நிருவாக தண்டப்பணம் | 834,494 | - |
| பல்வகை வருமானம் | 1,482,380 | 2,229,143 |
| **வட்டி வருமானம்** | | |
| ஊழியர் கடனுக்கான வட்டி | 2,840,600 | 3,304,833 |
| திறைசேரி முறிகள் மீதான வட்டி | 112,528,009 | 86,807,695 |
| அழைப்பு வைப்புக்கள் மீதான வட்டி | 39,427,100 | 19,764,671 |
| **(3) ஊழியர் செலவினங்கள்** | **236,120,184** | **186,176,165** |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | 109,243,992 | 88,552,947 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 67,927,555 | 51,888,006 |
| ஊக்குவிப்புப் கொடுப்பனவு | 31,750 | - |
| ஊழியர் சேமலாப நிதியம் | 26,279,491 | 20,964,759 |
| ஊழியர் பொறுப்பு நிதியம் | 5,250,909 | 4,230,804 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | 5,285 | 1,404,046 |





| குறிப்பு | 2016 (ரூபா.) | 2015 (ரூபா.) |
|---|---|---|
| விடுமுறை நிதிக் கொடுப்பனவு | 4,432,312 | 4,269,777 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவு | 3,711,520 | 3,373,323 |
| ஊழியர் நலன்புரி செலவினம் | 10,083,895 | 9,394,980 |
| பணிக்கொடை | 604,470 | (4,307,213) |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினச் சம்பளம் | 3,278,911 | 2,899,198 |
| கடன் பிரதிலாபங்களுக்கமைய பணியாளர் சபைச் செலவினம் IFRS ஒப்பீடுகள் | 5,270,095 | 3,505,538 |
| கடன் பிரதிலாபங்களுக்கமைய பணியாளர் சபைச் செலவினம் IFRS ஒப்பீடுகள் | 5,270,095 | 3,505,538 |
| **(4) கூட்டங்கள் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகள்** | **29,468,364** | **16,953,174** |
| பயிற்சி பட்டறைகள், கருத்தரங்குச் செலவுகள் | | |
| உள்நாடு | 241,025 | 2,266,491 |
| வெளிநாடு | 10,815,924 | 14,686,683 |
| பணிப்பாளர் நாயகத்தின் சம்மேளன செலவினம் | 18,411,415 | - |
| **(5) பயிற்சியளித்தல் செலவுகள்** | **8,973,167** | **8,756,865** |
| **பயிற்சியளித்தல் செலவுகள்** | | |
| உள்நாடு | 1,125,073 | 1,459,430 |
| வெளிநாடு | 7,848,094 | 7,297,435 |
| **(6) நிருவாதக மற்றும் எனைய செலவினம்** | **135,269,400** | **124,068,461** |
| பரிசோதனை | 484,527 | 162,804 |
| வெளிக் கூட்டம் | 352,457 | 120,608 |
| உள்ளகக் கூட்டம் | 505,402 | 434,097 |
| பிரயாணச் செலவினம் - உள்நாடு | 30,505 | 12,793 |
| ஆலோசனை மற்றும் சட்டக் கட்டணம் | 368,000 | 257,000 |
| வெளித் தொழில்நுட்ப உதவி | 80,000 | 419,516 |
| பணியாளர் சபைப் பிணக்குகளைத் தீர்த்தல் | 78,400 | - |
| நேர்முகப் பரீட்சை/பணியாளர் சபை மதிப்பீடுகள் | 2,007,274 | 527,500 |
| பணிப்பாளர் சபைக் கொடுப்பனவு | 1,291,500 | 933,000 |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணப் பராமரிப்பு | 2,011,104 | 1,340,159 |

| குறிப்பு | 2016 (ரூபா.) | 2015 (ரூபா.) |
|---|---|---|
| காகிதாதிகள் மற்றும் நுகர்வுப் பொருள் செலவி-னம் | 7,482,784 | 6,107,865 |
| உள்நாட்டு விமான நிலைய அபிவிருத்தி | 57,490 | - |
| ஏனைய வழங்கல் | 488,649 | 914,537 |
| தொலைத் தொடர்பு | 4,354,330 | 3,941,136 |
| தபால் கட்டணம் | 264,476 | 225,104 |
| சர்வதேச சிவில் விமான சேவைத் தாபனத்தின் வழங்கல் நிதி | 21,400,252 | 22,860,390 |
| வெளியீடு மற்றும் விளம்பரத்திற்கான பங்காளர் நிதி | 910,321 | 1,719,463 |
| பரீட்சைக் கட்டடணம் | 400,237 | 153,245 |
| முத்திரைக் கட்டணம் | 1,495,241 | 607,077 |
| வங்கிக் கட்டணம் | 360 | - |
| கணக்காய்வுக் கட்டணம் | 1,800,000 | 500,000 |
| சொத்துக்களை வெளியேற்றல் நட்டம் | 2,039,537 | 349,184 |
| மொழி பெயர்ப்பு மற்றும் தட்டச்சுச் செலவினம் | 98,205 | 175,015 |
| நலன்புரிப் பயன்பாடுகள் - விளையாட்டு | 209,927 | 293,490 |
| பல்வகைச் செலவினம் | 82,156 | 42,164 |
| எரிபொருள் மற்றும் உராய்வு | 3,722,409 | 5,250,349 |
| வாகனப் பராமரிப்பு | 8,660,570 | 9,263,305 |
| வாடகை மற்றும் வாடகைக் கட்டடணம் | 581,390 | - |
| பொது - நலன்புரி | 44,113,103 | 266,088 |
| அலுவலகக் கட்டடம் மற்றும் தங்குமிட இல்லத்-திற்கான செலவினம் | | |
| கட்டடக் கூலி | 44,113,103 | 40,499,657 |
| மின்சாரம் | 13,565,499 | 12,144,549 |
| நீர் | 1,170,303 | 1,028,661 |
| பாதுகாப்பு | 3,464,924 | 2,930,172 |
| சுத்திகரிப்பு | 1,830,189 | 1,871,861 |
| ஏனைய பராமரிப்பு | 1,168,953 | 1,539,857 |
| முகாமைத்துவ சேவை | 2,302,500 | 2,253,060 |
| விமான சேவை அபிவிருத்தி | 1,838,485 | 1,531,185 |
| தகவல் தொழில்நுட்பப் பராமரிப்பு | 2,207,933 | 974,891 |



நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| | குறிப்பு | 2016 (ரூபா.) | 2015 (ரூபா.) |
|---|---|---|---|
| | கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்கள் | - | 25,000 |
| | ஒழுங்கமைப்பு நிகழ்வுகள் | 1,734,836 | 428,951 |
| | பணிப்பாளர் நாயகத்தின் சம்மேளன செலவினம் | - | 1,861,218 |
| | விமானக் கட்டணம் மற்றும் பிரவேச பத்திரப் பா-டநெறி செலவினம் | 256,995 | 103,510 |
| **(7)** | **வரிக் அறவீடுகள்** | **346,480,058** | **343,184,623** |
| | அமுலிலுள்ள ஆண்டுக்கான வருமான வரி 28மூ | 343,734,024 | 340,052,276 |
| | நீண்ட கால குத்தகை வரி | 2,746,034 | 3,132,347 |

| குறிப்பு (08) | சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் (ரூபா) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2016.01.01 ஆம் திகதிய மீதி | சேர்த்தல்கள் / மாற்றங்கள் | விற்பனைகள | 2016.12.31 ஆம் திகதிய மீதி | 2015.12.31 ஆம் திகதிய மீதி |
| | காணி | 49,774,500 | 10,426,070 | - | 60,200,570 | 49,774,500 |
| | கட்டடம் | 101,872,632 | 256,7106 | (7,127,059) | 95,002,283 | 101,872,632 |
| | வாகனம் | 110,315,313 | - | - | 110,315,313 | 110,315,313 |
| | ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 59,245,520 | 10,530,119 | (615,821) | 69,159,818 | 59,245,520 |
| | தகவல் தொழினுட்ப சாதனங்கள் | - | - | - | - | 15,260,623 |
| | தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 32,763,927 | 1,088,159 | - | 33,852,085 | 32,763,927 |
| | ஏனைய நிலையான சொத்துக்கள் | 536,946 | 202,490 | - | 739,436 | 536,946 |
| | மொத்தம் | **354,508,838** | **22,503,547** | **(7,742,880)** | **369,269,505** | **369,769,460** |
| | பெறுமானத் தேய்வு | 2016.01.01 ஆம் திகதிய மீதி | வருடாத்திற்கான பெறுமானத் தேய்வு | விற்பனைகள் மீதான பெறுமானத் தேய்வு | 2016.12.31 ஆம் திகதிய மீதி | 2015.12.31 ஆம் திகதிய மீதி |
| | கட்டடம் | 15,742,034 | 5,813,867 | (4,933,262) | 16,622,639 | 15,742,034 |
| | வாகனம் | 54,287,027 | 10,247,492 | - | 64,534,519 | 54,287,027 |
| | ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 46,374,071 | 3,301,322 | (584,932) | 49,090,461 | 46,374,071 |
| | தகவல் தொழினுட்ப சாதனங்கள் | - | - | - | - | 11,638,948 |
| | தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 25,311,501 | 1,660,933 | - | 26,972,434 | 25,311,501 |
| | ஏனைய நிலையான சொத்துக்கள் | 510,008 | 17,803 | - | 527,811 | 510,008 |
| | **மொத்தம்** | **142,224,640** | **21,041,418** | **(5,518,194)** | **157,747,865** | **153,863,589** |
| | **குறைத்து எழுதப்பட்ட பெறுமதி** | | | | **211,521,640** | **215,905,872** |



வருடாந்த அறிக்கை 2016

| குறிப்பு (09) | கற்புலனாகும் சொத்துக்கள் (ரூபா.) | | | | |
|---|---|---|---|---|---|
| செலவினம்/பெறுமதி | 2016.01.01 ஆம் திகதியன்று நிலுவை | சேகரிப்பு/ மாற்றங்கள் | வெளியேற்றல் | 2016.12.31 ஆம திகதியன்று நிலுவை | |
| IT மென்பொருள் | 15,260,623 | 100,000 | - | 15,360,623 | |
| **மொத்தம்** | **15,260,623** | **100,000** | - | **15,360,623** | |
| | | | | | |
| **தேய்மானம்** | 2016.01.01 ஆம் திகதியன்று நிலுவை | ஆண்டுக்குள் அறவீடு | வெளியேற்றுவதற்காக தேய்மானம் மேற்கொள்ளல் | 2016.12.31 ஆம் திகதியன்று நிலுவை | |
| | | | | | |
| IT மென்பொருள் | 11,638,948 | 1,777,001 | - | 13,415,949 | |
| **மொத்தம்** | **11,638,948** | **1,777,001** | - | **13,415,949** | |
| | | | | | |
| **குறைத்து எழுதப்பட்ட பெறுமதி** | - | - | - | **1,944,674** | |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| | | 2016 (ரூபா.) | 2015 (ரூபா.) |
|---|---|---|---|
| (10) | **வேலைகளின் முன்னேற்றம்** | **281,217,671** | **172,365,244** |
| | கட்டுநாயக்கா தலைமை அலுவலகம் | 280,325,671 | 172,278,334 |
| | CAASL வலைத்தளம் | - | 86,910 |
| | உள்நாட்டு விமான நிலையம் - பண்ட-ாரவெல | 577,000 | - |
| | உள்நாட்டு விமான நிலையம் - புத்தளம் | 315,000 | - |
| (11) | **வர்த்தகக் கிடைக்க வேண்டியவைகள்** | **116,299,047** | **242,091,717** |
| | கிடைக்க வேண்டியவைகள் OSS விமான மற்றும் வரிசேவைக் கட்டணம் | 93,797,484 | 241,869,1916 |
| | ஏனைய கடன்படுனர்கள் | 22,501,563 | 222,526 |
| (12) | **ஊழியர் கடன்கள்** | **39,904,738** | **46,112,586** |
| | ஊழியர் கடன்கள் | 66,268,933 | 70,445,908 |
| | ஒத்திவைக்கப்பட்ட பணியாளர் செலவு (கடன்) | (26,364,195) | (24,333,322) |
| (13) | **நிதிச் சொத்துக்கள்** | **1,694,555,305** | **1,582,300,523** |
| | நிலையான வைப்புக்கள் | - | 301,123 |
| | திறைசேரி உண்டியல்கள் | 1,694,555,305 | 1,581,999,400 |
| (14) | **முற்பணங்கள், முன்னைய கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வருமதிகள்** | **93,426,423** | **102,402,377** |
| | முற்பணங்கள் | 1,429,805 | 1,285,550 |
| | முன்னைய கொடுப்பனவுகள் | 4,115,984 | 10,651,525 |
| | வரி வருவாய் | 59,504,3566 | 65,340,654 |
| | வட்டி வருமான வருமதிகள் | 2,012,084 | 791,326 |
| | முன்னர் செலுத்தப்பட்ட ஊழியர் செலவு | 26,364,194 | 24,333,322 |



## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| | | 2016 (ரூபா.) | 2015 (ரூபா.) |
|---|---|---|---|
| (15) | **காசும் காசுக்கு சமமானவையும்** | **1,209,653,318** | **829,000,040** |
| | வங்கியிலுள்ள காசு | | |
| | நடைமுறைக் கணக்கு (0002026666) | 51,067,213 | 82,779,658 |
| | நடைமுறைக் கணக்கு (0002026678) | 670,586,105 | 396,220,382 |
| | குறுகிய கால முதலீடுகள் | 488,000,000 | 350,000,000 |
| (16) | **பெறப்பட்ட நன்கொடைகள்** | **50,347,959** | **29,170,677** |
| | காணி | 49,774,500 | 27,724,508 |
| | கட்டடம் | 1,257473 | 1,802,378 |
| | சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 147,795 | 147,794 |
| | மனைப் பொருட்கள் மற்றும் பொருத்துதல்கள் | 18,113 | 18,113 |
| | ஏனைய நிலையான சொத்துக்கள் | 22,787 | 22,787 |
| | மொத்தம் | 51,220,669 | 29,715,580 |
| | குறித்த ஆண்டில் தீர்ப்பனவுகள் | (872,710) | (544,903) |
| | **வருட இறுதியிலுள்ள மீதி** | **50,347,959** | **29,170,677** |
| (17) | **மீள்மதிப்பீட்டு மிகை** | **7,000,418** | **29,050,410** |
| | காணி | - | 22,049,992 |
| | ஆதனங்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 2,636,245 | 2,636,245 |
| | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 4,364,173 | 4,364,173 |
| (18) | **பொதுவான இருப்பு** | **1,150,000,000** | **1,150,000,000** |
| | ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 1,150,000,000 | 1,200,000,000 |
| | ஆண்டிற்கான பறிமாற்றல்கள் | - | (50,000,000) |

| | | 2016 (ரூபா.) | 2015 (ரூபா.) |
|---|---|---|---|
| (19) | **பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்** | **14,076,078** | **11,330,044** |
| | ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 11,330,044 | 8,197,697 |
| | ஆண்டுக்கான தள்ளுபடி | 2,746,034 | 3,132,347 |
| | ஆண்டு இறுதியில் மீதி | 14,076,078 | 11,330,044 |
| (20) | **ஒத்தி வைக்கப்பட்ட வட்டி வருமானம்** | **30,804,275** | **28 805 992** |
| | ஆண்டு ஆரம்பத்தில் நிலுவை | 28,805,992 | - |
| | ஆண்டுக்குள் மாற்றங்கள் | 1,998,283 | 28,805,990 |
| (21) | **ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய மாற்றங்கள்** | **26,476,006** | **265,927,756** |
| | பணியாளர் சபை நலன்புரி நிதி | 301,123 | 301,123 |
| | அனர்த்த அபாய நிதியத்திற்கான ஒதுக்கீடு | - | 250,000,000 |
| | கிடைக்கப் பெற்ற வைப்பு | 26,174,883 | 15,626,633 |
| (22) | **ஓய்வு பெறுபவர்களுக்கான கடப்பாடுகள்** | **7,356,896** | **8,069,167** |
| | ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 8,069,167 | 12,479,380 |
| | ஆண்டுக்கான தள்ளுபடி | 604,470 | (4,307,213) |
| | ஆண்டில் செலுத்தப்பட்டவை | (1,316,740) | (103,000) |
| | ஆண்டு இறுதியில் மீதி | 7,356,896, | 8,069,167 |
| (23) | **வியாபாரக் கொடுப்பனவுகள்** | **966,442,757** | **723,166,052** |
| | பரிசோதனைக் கட்டணம் மற்றும் வைப்புக்கள் மீதான செயற்பாடுகள் | 2,735,782 | 5,311,769 |
| | விமான நிலையம், விமானப் போக்குவரத்து அதிகார சபை மற்றும் அரச பொதுத்திறைசேரி | 948,586,104 | 711,220,381 |
| | ஏனைய கடன்கள் | 15,120,871 | 6,633,902 |





| | | 2016 (ரூபா.) | 2015 (ரூபா.) |
|---|---|---|---|
| (24) | **ஏனைய செலுத்த வேண்டியவைகள்** | **20,344,855** | **15,086,796** |
| | திரண்ட செலவினம் | | |
| | - பணியாளர் சபைச் செலவினம் | 14,571,426 | 10,008,668 |
| | - பயிற்சி | 49,000 | - |
| | - | 5,724,429 | 5,078,128 |
| (25) | **குத்தகை வரிப் பொறுப்புக்கள்** | **120,957,108** | **170,847,196** |
| | ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை | 170,847,196 | 176,812,769 |
| | ஆண்டுக்கான ஒதுக்கீடு | 343,734,024 | 340,052,276 |
| | மீள் கொடுப்பனவு | ( 21,676,129) | (5,057,598) |
| | ஆண்டுக்குள் கொடுப்பனவு | ( 371,947,982) | (340,960,252) |
| | **ஆண்டு இறுதியில் நிலுவை** | **120,957,108** | **170,847,196** |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. ஏவீஏ/பீ/சீஏஏஎஸ்எல்/எவ்ஏ/2016 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2017 யூலை 27

தலைவர்,
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2017 யூலை 12 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.



AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சியினால் அதிகாரசபைக்கு 2014 யூலை 16 இல் மாற்றப்பட்ட இரண்டு மோட்டார் வாகனங்களினுடைய சந்தைப் பெறுமதிக்கான மதிப்பீடு மற்றும் கணக்கீட்டுற்கு பதிலாக மோட்டார் வாகனக் கணக்குக்கு ரூபா 282,448 இறக்குமதி தீர்வை மட்டும் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் சொத்துக்கள் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் அதிகாரசபையினால் கொள்வனவுகள் தொடர்பில் பெறவேண்டிய உள்ளீட்டு பெறுமதி சேர் வரி ரூபா 59,504,356 தொகையாகவிருந்தது. இந்த தொகையினை மீளப்பெறுவது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தும் கூட, அத்திகதி வரை இறுதித் தீர்மானமொன்று அடையப்பெறப்பட்டிருக்காததுடன் மற்றும் அதனால் அத்தொகையை அறவிடுவதும் நிச்சயமற்றமாகக் காணப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டம் 9 ஆம் பிரிவு | இரண்டாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட வானூர்தி மற்றும் மூன்றாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட கடற்படை வசதிகளுடன் கூடிய வானூர்தி மற்றும் அவ்வானூர்திகளுக்கான இடவசதிகள் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நியதிகள் மூலம் அதிகாரசபைக்கு கையளிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு கையேற்று கையேற்கப்பட வேண்டிய பட்டோலையில் குறிப்பிடப்படும் விடயங்கள் இனம்காணப்பட்டு கையளிப்பதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அதிகாரசபையினுடைய பதவியணி விதிகள் மற்றும் நிர்வாக நடைமுறைகளின் பிரிவு 11.2.6 | சர்வதேச மாநாடு, கூட்டங்கள், பயிற்சிப்பட்டறைகள் அல்லது பயிற்சிகளில் பங்குபற்றுதன் மூலம் பெறப்படும் விடய பொருட்கள் மற்றும் பயன்பாடுகளின் விபரம் பங்குபற்றிய அதிகாரசபையின் அலுவலகர்களினால் திரும்பியதிலிருந்து 30 நாட்களுக்குள் அனைத்து அலுவலகங்களினாலும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ விபரிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறான விடயங்கள் மற்றும் அது தொடர்பான ஒரு அறிக்கை அவ் உரிய அதிகாரியினால் பேணப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அந்த நடைமுறைகளினை அதிகாரசபை பின்பற்றியிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 4.2.5 ஆம் பிரிவு | பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய விடயங்களினுடைய வயதுப் பகுப்பாய்வு அறிக்கையொன்று அதிகாரசபையினால் மாதாந்தம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |





## 2.5 போதியளவு அதிகாரம் அளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2016 பெப்ரவரி 10 இல் இடம்பெற்ற அமைச்சரவையினுடைய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், ஆசிய பசுபிக் வலயத்தினுடைய சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகங்களின் ஐம்பத்தி மூன்றாவது மாநாட்டினை நடாத்துவதற்கான கிரயமொன்றாக ரூபா 20 மில்லியன் அதிகூடியதாக அதிகாரசபையினுடைய நிதியத்திலிருந்து செலவினமாக ஏற்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையினுடைய நிதியத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட தொகையினை விஞ்சி ரூபா 2.3 மில்லியன் தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 871 மில்லியன் மிகையுடன் ஒப்பிடும் ரூபா 881 மில்லியனை விளைவித்திருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 10 மில்லியனான முன்னேற்றத்தினைச்

சுட்டிக்காட்டுகின்றது. உத்தியோகத்தர்கள், நிர்வாகம் மற்றும் ஏனையவற்றின் மீதான செலவினங்கள் ரூபா 63 மில்லியனால் அதிகரித்த போதிலும், தொழிற்பாடு மற்றும் தொழிற்பாடற்ற செயற்பாடுகளிலிருந்தான வருமானம் ரூபா 81 மில்லியன் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் மேற்படி முன்னேற்றத்திற்கு தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, மிகையானது 2012 ஆம் ஆண்டில் ரூபா 523.4 மில்லியனிலிருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 881.1 மில்லியனுக்கு தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. ஊழியர்களின் ஊதியம், அரசுக்கு செலுத்தப்பட்ட வரி மற்றும் அதிகாரசபையின் மிகைக்குரிய நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீதான பெறுமானத்தேய்வு என்பனவற்றை மீள சரிபடுத்திய பின்னர், 2012 ஆம் ஆண்டில் ரூபா 792.8 மில்லியன் பங்களிப்புத்தொகை 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,493.4 மில்லியனுக்கு தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டினுடைய மொத்த வருமானம் ரூபா 1,660 மில்லியன் தொகையாகவும் மற்றும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது ரூபா 81 மில்லியன் அல்லது 5 சதவீத முன்னேற்றமொன்றினைக் சுட்டிக்காட்டுகின்றது. மொத்த வருமானத்தில், ரூபா 1,233 மில்லியன் அல்லது 74 சதவீதம் நேர் முயற்சியல்லாது வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணத்திலிருந்து பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினதும் மற்றும் அதற்கு முன்னைய ஆண்டினதும் பொருண்மையான விகிதங்கள் மற்றும் வீதாசாரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | 2015 |
|---|---|---|
| விற்பனைக்கான தேறிய இலாப விகிதம் | 53% | 55% |
| விற்பனைக்கான ஊழிய கிரயம் | 14% | 12% |
| நடைமுறை விகிதம் | 2.8:1 | 3.1:1 |





விற்பனைக்கான ஊழிய விகிதம் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முற்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான பெறுபேற்று இலக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னர் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை உயர் அளவில் அடைந்துகொள்ளல் அல்லது மிகைத்து செல்லல். பொருத்தமானதன் பிரகாரம் வளங்களை பெற்றுக்கொள்ளல், தொழில்துறைக்கும் நிபுணத்துவதற்கும் நியமனம் வழங்கல், விரிவான நம்பிக்கையுடன் வரவேற்பைப் பெற்றுக்கொள்ளல் அதிகாரசபையின் செயலாற்றலை நிரந்தரமாக பேணிச்செல்லல் மற்றும் மேம்படுத்துதல், ஒவ்வொரு செயற்பாட்டையும் உயர்மட்ட செயற்திறனுடாக நிறைவேற்றுதல், சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களுக்காக கூடிய இணக்கப்பாடொன்றை காட்டுதல் மற்றும் சிவில் விமான சேவை நடவடிக்கைகளைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்காக பலம்மிக்க வசதிகளை வழங்கக் கூடியதாக இருத்தல் என்பன அதிகாரசபையின் நோக்கங்களாகும்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மற்றும் கடமைகளில் பின்வரும் தொழிற்பாடுகள் மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது இடம்பெற்றிருக்கவில்லை.

(i) இலங்கை தேசிய விமானப் போக்குவரத்து கொள்கையினை முறைமைப்படுத்துவதற்கு அமைச்சரவைக்கு அதிகாரசபை உதவியளித்தல் வேண்டும், தேசிய விமானப் போக்குவரத்து கொள்கையினை முறைமைப்படுத்துவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் அதிகாரசபை ஆரம்ப செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்தது.

எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 வரையிலும் அது வரைபு நிலையிலேயே இருந்தது.

(ii) தேசிய விமானப் போக்குவரத்து கொள்கையினை முறைமைப்படுத்துவதிலுள்ள கால தாமதம் காரணமாக இலங்கைக்கான விமான சேவைகள் அபிவிருத்தி திட்டமொன்றினை அதிகாரசபையினால் தயாரிக்க முடியாதிருந்தது.

**(ஆ) விமான சேவைகள் பாதுகாப்பு பிரிவினுடைய செயலாற்றல்**

---

அதிகாரசபையினுடைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்க்கமைய, பணிப்பாளர், 2 சிரேஷ்ட சிவில் விமான சேவைகள் பரிசோதகர்கள் மற்றும் 5 சிவில் விமான சேவைகள் பரிசோதகர்களை உள்ளடங்களாக, விமான சேவைகள் பாதுகாப்பு (Aviation Security) பகுதியில் பணிப்பாளர் உட்பட 8 உத்தியோகத்தர்கள் காணப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையில் ஒரு சிரேஷ்ட சிவில் விமான சேவைகள் பரிசோதகர் மற்றும் ஒரு சிவில் விமான சேவைகள் பரிசோதகர் மாத்திரமே வேலைக்கமர்த்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது, 4 பயிற்சி விமான சேவைகள் பரிசோதகர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அவர்களினை நிரந்தரமான சேவையில் உள்வாங்குவதற்கு ஆண்டு பயிற்சிக்காலமொன்று வழங்கப்படுதல் வேண்டும். அதனால், அவ்வாறான 07 அலுவலகர்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள், நடைமுறையில் 02 அலுவலகர்களினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 வருடங்களில் செயற்பாடுகளினுடைய மேற்பார்வைகள் (Surveillances) தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 மற்றும் 2016 ஆண்டுகளிற்காக விமான சேவைகள் பாதுகாப்பு (Aviation Security) பிரிவினால் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனைகளின் எண்ணிக்கை முறையே 26 மற்றும் 31 என வருடாந்த புலனாய்வுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், உண்மையாக மேற்கொள்ளப்பட்டிருந்த பரிட்சீப்புக்களின் எண்ணிக்கை முறையே 18 மற்றும் 24 என குறிப்பிடப்பட்டிருந்தது.







(ii) பரிசோதனைகள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ஆண்டுக்கு 4 பரிசோதனைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அக் குறித்த ஆண்டுகளில் அவ் பரிசோதனைகளில் ஒன்று மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

(iii) 2014 ஆம் ஆண்டில் 06 உள்ளக செயற்பாட்டு பரிசோதனைகள் மற்றும் 04 இரவு பரிசோதனைகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் உண்மையாக ஒவ்வொன்றிலும் 2 பரிசோதனைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 ஆண்டுக்கு பின்னர், இது தொடர்பான பரிசோதனைகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மத்தல மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பரிசோனைகளின் எண்ணிக்கை முறையே 12 மற்றும் 4 என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மற்றும் உண்மையாக நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை 6 மற்றும் 1 என குறிப்பிடப்பட்டிருந்தது, ஆகையால் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியாக பரிசோதனைகளின் எண்ணிக்கைக்கிடையில் குறைவொன்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

**(இ) விமான வழிப்பாதை சேவைகள் (Air Navigation Services) பிரிவின் செயலாற்றல்**

---

2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை அத்தகைய திட்டங்களினை பரீட்சித்தல் மற்றும் அவ் திட்டங்களினுடைய அடைதல்களினை பரிசோதனை செய்த போது, 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விமானங்களினுடைய தகவல் சேவை பரிசோதனைகள் (ஏஜஎஸ்) தொடர்ச்சியாக குறைவடைந்தமையால் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) விமான நிலைய பகுதியினுடைய செயலாற்றல் (Aerodrome)**

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வைகளுக்கமைய, 2016 ஆம் ஆண்டின் போது கட்டுநாயக்க, மாத்தளை மற்றும் ரத்மலான விமான நிலையங்களில் 24, 06 மற்றும் 06 கொண்ட

மொத்தமாக 36 மேற்பார்வைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டில் கட்டுநாயக்க, மத்தல மற்றும் ரத்மலான விமான நிலையங்களில் முறையே 20, 05 மற்றும் 04 மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன, ஆகையினால், 2016 ஆம் ஆண்டில் உண்மையாக மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வைகளில் ஒரு குறைவினை சுட்டிக்காட்டுகின்றது.

**(உ) விமானத் தகுதிப் (Airworthiness) பிரிவினுடைய செயறலாற்றல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விமானத் தகுதியை உறுதிப்படுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த 215 பரிசோதனைகளில், 42 பரிசோதனைகள் அல்லது 19 சதவீதம் மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினை கருத்திற்கொள்ளும் போது, விமான பரீட்சிப்புக்களின் மீது மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைகளினுடைய மீளாய்வினால் அதிகாரசபையினுடைய விமானத்தகுதி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களின் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல்களில் ஒரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

**(ஊ) பிரதான தொழிற்பாடுகள் பிரிவின் செயலாற்றல்**

---

கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளில் அதிகாரசபையினுடைய பிரதான தொழிற்பாட்டுப் பகுதியின் செயலாற்றல் மீதான கற்கை பாடநெறியின் போது இலங்கைக்கு வருகைதந்த விமானங்கள் மற்றும் விமான தொழிற்பாடுகள் ஆண்டுக்கு ஆண்டு சீராக அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சிவில் விமான சேவை பிரமாணம் தொடர்பிலான பரீட்சிப்புக்களின் முன்னேற்றம் தொடர்பில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.





**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய பசுபிக் வலயத்தின் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகங்களினுடைய ஐம்பத்தி மூன்றாவது மாநாட்டிற்கு ஆதரவாளர்களிடமிருந்து ரூபா 13 மில்லியன் தொகையொன்றினை பெறுவதற்கு அதிகாரசபை எதிர்பார்த்திருந்த போதிலும், ரூபா 9 மில்லியன் மாத்திரமே பெறப்பட்டது. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 4 மில்லியன் தொகையொன்றை அதிகாரசபைக்கு ஆதரவாளர்களிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மட்டக்களப்பு விமான நிலையத்தினுடைய நிர்மாணம் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் உள்நாட்டு விமான பிரயாணத்திற்கும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது என இலங்கை விமானப்படை அதிகாரசபைக்கு அறிவித்திருந்த போதிலும் 2016 ஜுன் 24 ஆம் திகதியில் பூர்த்தியாக்கப்பட்டதுடன் மற்றும் விமான பிரயாணத்திற்கு பயன்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகின்றதுடன், 2017 மார்ச் வரையிலும் அதனை திறப்பதற்கும் மற்றும் விமான பிரயாணங்களினை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அதிகாரசபையினால் நிர்மாணத்தினை ஏற்படுத்தியிருந்த ரூபா 18,973,363 செலவினம் மீள் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் மீளவழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், திறைசேரியினுடைய அனுமதியுடன் டொலர்க்கான நாணயமாற்று விகிதத்தினை தீர்மானிப்பதற்கான அதிகாரத்தை பணிப்பாளர் நாயகம் கொண்டுள்ளார். 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய டொலர்க்குரிய ஆண்டு நாணயமாற்று விகிதம் முறையே ரூபா 135.18 மற்றும் 145.93 ஆகக் காணப்பட்ட போதிலும், இறக்குமதி வரியினைச் செலுத்தும் போது டொலரொன்று முறையே ரூபா 130 மற்றும் ரூபா 140 ஆக கணிப்பிடப்பட்டது. ஆகையினால், 2016 ஏப்ரல் தொடக்கம் திசெம்பர் வரை செலுத்தப்பட்ட விமான ரிக்கட்கள் தொடர்பான ரூபா 2,524,216 வருமானம் மீதான இறக்குமதி வரி ரூபா 446,886,322 இனால் குறைவாகக் கணிப்பிட்டிருந்தது. மேலும், 2015 ஒக்தோபர் 26 இல் இறக்குமதி வரியினுடைய கட்டணம் தொடர்பான நாணயமாற்று விகிதம் தொடர்பான இறுதி

தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் மற்றும் அத்தொகை டொலர்க்கு ரூபா 140 ஆகவிருந்தது. அதற்குப் பிறகு நாணயமாற்று விகிதத்தினை மாற்றுவற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி I இன் 2(1) ஆம் பிரிவினால் விநியோகிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம், நிதி அமைச்சினால் 2017 ஜனவரி மற்றும் பெப்ரவரிக்கு அறவிடப்பட வேண்டிய இறக்குமதி வரியாக பிரேரிக்கப்பட்ட பெறுமதியாக டிக்கட்டுக்கு ஐ.அமெரிக்க டொலர் 50 ஆக இருந்ததுடன் டொலர் ஒன்றிற்கான ரூபா பெறுமதியொன்றாக ரூபா 140 தொகை அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 ஜனவரி மற்றும் பெப்ரவரிக்குரிய சராசரி நாணயமாற்று விகிதம் ரூபா 150.45 ஆகக் காணப்பட்டது. இறக்குமதி வரியினை அறவிடும் போது நாணயமாற்று சந்தை வீதம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாததுடன் ஆகையினால், ஜனவரி மற்றும் பெப்ரவரிகளில் ஒரு ரிக்கட்டின் மீதான வரி ரூபா 522 குறைவாக மதிப்பிடப்பட்டு அறவிடப்பட்டது, ஆகையினால் 658,452 விமான டிக்கட்டுக்களிலிருந்து குறைவாக சேகரிக்கப்பட்ட, வரியின் பெறுமதியானது தொடர்புடைய 2 மாதங்களின் போது ரூபா 272,732,919 அண்ணளவான பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டது.

(உ) தலைமை அலுவலக கட்டிடத்துடன் தொடர்புடைய 2011 பெப்ரவரி 10 இன் 420 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் 20 ஆம் பிரிவின் பிரகாரம், ஆரம்ப உடன்படிக்கை செல்லுபடிக் காலம் இரண்டு வருடங்களுக்கு செல்லுபடியாகும் என குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், குத்தகையினை பெறுபவர் உடன்படிக்கையை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்புச் செய்ய விரும்பும் பட்சத்தில் உடன்படிக்கை புதுப்பிக்கப்படல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆரம்ப உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதிலிருந்து 6 வருடங்கள் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தொடர்புடைய உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2010 ஆம் ஆண்டில் சர்வதேச சிவில் விமான சேவைப் போக்குவரத்து நிறுவனத்தினால் (ஐசீஏஓ) விநியோகிக்கப்பட்ட அரச பாதுகாப்பு அறிக்கையின் பிரகாரம், 191 நாடுகளுக்குள் இலங்கை பத்தொன்பதாவது இடத்தினைப் பெற்றுக்கொண்டது. எவ்வாறாயினும், 2018 ஜூன் 04 தொடக்கம் 14 ஆம் திகதி வரை உறுப்பு நாடுகளை இலக்கிடுவதன் மூலம் இலங்கையில் பாதுகாப்பு ஆய்வினை நடாத்துவதற்கு சர்வதேச சிவில் விமான சேவைகள் நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.





## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் ஒவ்வொரு பிரிவுடன் தொடர்புடைய சீராக்கப்பட வேண்டிய 80 பலவீனங்களினை சீராக்கம் செய்வதற்கு 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வில் சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பு (ஐசீஏஓ) பரிந்துரைத்திருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது, விமான இயந்திரப் பிரிவுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட 7 பிரதான பலவீனங்களில் 3 இற்குரிய வலயத்திலுள்ள நாடுகளுடன் இணக்கப்பாட்டு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடுதல், வளிமண்டலவியல் திணைக்களம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கிடையே முறையான சட்ட உடன்படிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் காலநிலை தகவல்களினை வழங்குகின்ற தரம் சம்பந்தமான முறைமையொன்றினை ஸ்தாபித்தல் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இறுதி முடிவுகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் சகல தொழிற்பாட்டு செயற்பாடுகளை மேவுகை செய்யக்கூடிய வகையில் 13 துறைகள் இணங்காணப்பட்டு அதற்கு ஒத்த பிரதான செயலாற்றல் சுட்டிக் காட்டிகள் (key Performance Indicators) அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்கக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2005 ஏப்ரல் 09 ஆந் திகதிய டீஎம்எஸ்/1748 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினுடைய கடிதத்தின் பிரகாரம், விமான வழிப்பாதையினுடைய (Air Navigation) இயக்குனர் பதவியில் சேவையாற்றும் மூன்று உத்தியோகத்தர் தொழில்நுட்ப படிகளினைப் பெறுவதற்கு வர்த்தக விமானி அனுமதிப்பத்திரத்தினை (Commercial pilot) (நிலையான சிறகு - Fixed wing) / சுழற்சியான சிறகு - (Rotary Wing) கொண்டிருக்க வேண்டுமென வேண்டப்படுகின்றது. இருந்தபோதிலும், வர்த்தக விமானி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருக்காத (Commercial Pilot) விமான போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் அனுமதிபத்திரத்தை (Air Traffic Controller) உடையவர்களுக்கு 2016 ஆம் ஆண்டின் போது 12 மாதங்களுக்கு மாதமொன்றிக்கு முறையே ரூபா 235,000, ரூபா 130,000 மற்றும் ரூபா 225,000 கூட்டுமொத்தமாக ரூபா 7,080,000 மொத்தத் தொகை தொழில்நுட்பப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 ஒப்பந்த நடைமுறை**

தலைமை அலுவலக கட்டிடத்தின் நிர்மாணம் ரூபா 803,369,988 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2015 திசெம்பர் இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மற்றும் 2016 திசெம்பர் 31 இல் பௌதீக முன்னேற்றம் மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 76 சதவீதம் மற்றும் ரூபா 610,561,191 ஆக எதிர்பார்க்கப்பட்டது. இருந்தபோதிலும் அத்திகதியில் பௌதீக முன்னேற்றம் மற்றும் நிதிசார் முன்னேற்றம் 38 சதவீதம் மற்றும் ரூபா 305,280,595 கொண்டிருந்தமையினால், எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினை அடைந்திருக்கவில்லை. மேலும், 2017 ஜுன் 13 இல் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த இந்த கட்டிடத்தினுடைய நிர்மாண வேலைகள் ஒப்பந்தகாரரினால் மந்தமான வகையில் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்ததாரரினுடைய வேண்டுகோள் மற்றும் 2017 ஜுன் 07 திகதிய சீஎம்/17/1019/709/041 இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் உரிய ஒப்பந்தக் காலம் 3½ மாதங்களினால் 2017 செப்தம்பர் 30 வரை நீடிப்புச்செய்யப்பட்டிருந்தது. ஆகையினால், தற்போது அதிகாரசபையினால் பயன்படுத்தப்படுகின்ற கட்டிடத்திற்கு அக்காலப்பகுதிக்காக மாதத்திற்கு ரூபா 3,727,386 வீதப்படி மேலதிக வாடகையாக ரூபா 13,045,851 தொகை செலுத்த நேரிட்டது. நிர்மாணிப்பிலுள்ள தாமதத்தால் அதிகாரசபையினால் ஏற்படுத்த வேண்டிய ஒரு மேலதிக கிரயமாக இந்த தொகையிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

2011 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 324,000 பெறுமதியான மூன்று அச்சிடல் இயந்திரங்களும் 3 கணனிகளும் வரிசை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தன.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

அதிகாரசபையின் 02 சிரேஷ்ட நிறைவேற்று மட்ட பதவிகள் மற்றும் 8 நிறைவேற்று மட்ட பதவிகளைக் கொண்டதாக 10 வெற்றிடங்கள் பல ஆண்டுகளுக்கு மேலாக காணப்பட்டன. அதிகாரசபையினால் பதவியணியிலுள்ள அலுவலகர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதன் மூலம் அல்லது புதிய ஆட்சேர்ப்பு மூலம் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பதிலாக ஒப்பந்த அடிப்படையில் 10 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் சேவைக்கும் அமர்த்தப்பட்டிருந்தனர். 2016 ஆம் ஆண்டுக்காக அவர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 30,857,888 மொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ் உத்தியோகத்தர்களினுடைய சேவைக்காலத்தினை நீடிப்புச் செய்வதன் மூலம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வருடாந்த எடுக்கப்பட்டிருந்த





போதிலும், உத்தியோகத்தர்களினை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு மற்றும் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பயிற்சிகளினூடாக பொருத்தமான பதவிகளுக்கு அலுவலகங்களினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமை அதிகாரசபையினுடைய தொடர்ந்து இயங்கும் தன்மையின் மீது பாதகமான தாக்கமளிப்பதாக கணக்காய்வின் நோக்கில் அவதானிக்கப்பட்டது.

**5. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**5.1 பாதீட்டு கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 36 சதவீதம் தொடக்கம் 64 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது ஒரு வினைத்திறன் வாய்ந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமை சுட்டிக்காட்டுகின்றது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளினுடைய பரப்புக்கள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | கணனிகளினை மீள்மதிப்பிடுவதற்கு மற்றும் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு தவறியமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | உயர்மட்ட முரண்பாடுகளினை கொண்டிருத்தல். |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | நிரந்தர அடிப்படைக்குப் பதிலாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் |
| (ஈ) கணக்கீடு | கணக்கீட்டு நியமங்களினுடைய தேவைப்பாடுகளினை பூர்த்தி செய்வதற்குத் தவறியமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் திணைக்களம்

பத்தரமுல்ல

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையில் 2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) (சி) வாசகத்திற்கமைய கணக்காய்வாளர் அறிக்கை**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக தங்களது இலக்கம் ஏ.வி.ஏ/வி.சி.ஏ.ஏ.எஸ்.எல்./எப்.ஏ.ஃ2016 மற்றும் 2017.07.27 ஆம் திகதிய அறிக்கை தொடர்பாக

சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு விடயங்கள் தொடர்பில் இவ் அதிகார சபையின் கருத்துக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

தங்களது மேற்பார்வைக்கு இனங்குகிறேன். இவ்விரு வாகனங்களையும் மதிப்பீடு செய்வதற்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அனுப்புமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திற்கு மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நினைவு கூறல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் அதற்காக பதில் கிடைக்கவில்லை. இது தொடர்பில் தொடர்ந்தும் பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் துரிதகதியில் இப் பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இறுதி நிதி வெளிப்பாடுகளில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.3. கிடைக்க வேண்டிய கணக்கு**

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இது எவ்வாறாக இருப்பினும் உள்நாட்டு வருமானத் திணைக்களம் இந் நிதியினை வழங்குவது தொடர்பில் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் இந்நிறுவனம் இது தொடர்பில் பின்னாட்டல்களை மேற்கொள்கின்றது. இந்நிதிக் கிடைப்பனவில் சந்தேகத்திற்குரியதான நிலைமைகள் இல்லை.

**2.4. சட்டங்கள், ஒழுங்குக் கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை**

| | |
|---|---|
| (அ) 2002 இலக்கம் 34 கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் 9 வது வாசகம் | 2002 இலக்கம் 34 கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் 09 வது வாசகத்தின் 2 வது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விமானப் போக்குவரத்து வசதிகள் மற்றும் அது சார்ந்த இணைந்த காணி சிவில் விமான சேவை அதிகார சபைக்கு பொறுப்பளித்து வழங்க முடிந்தபோதிலும் இப் பொறுப்பேற்பு மேற்கொள்ளப்பட வேண்டியது அரச கொள்கைளுக்கமைய கௌரவ அமைச்சர் மூலமாகும். இதற்கமைய சிவில் விமான சேவை அதிகார சபைக்கு ஏற்கனவே பொறுப்பேற்க தீர்மானிக்கப்பட்டிருப்பது மட்டக்களப்பு விமான நிலையம் மாத்திரமாகும். |
| (ஆ) அதிகார சபையின் பணியாளர் சபை மற்றும் நிருவாக சட்ட ஒழுங்குக் கோவைகள் 11.2.6 | தங்களது மேற்பார்வைக்கு இணங்குகிறேன். சர்வதேச மாநாட்டிற்கு, கூட்டத்திற்கு, செயலமர்வுகள் அல்லது பயிற்சிகளுக்கு பங்கேற்பதன் மூலம் பெறும் விடயம் சார்ந்த அம்சங்கள் தொடர்பில் உரிய உத்தியோகத்தரினால் முறையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாநாட்டுக்கு, பயிற்சிக்கு, கூட்டத்திற்குரியதான ஆவணமும். அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்திற்கு வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள், வழங்கப்பட்ட அறிவு தொடர்பாக தமது பிரிவிற்குள் பிரிவுப் பொறுப்பாளர் உள்ளிட்ட ஏனைய நிறைவேற்று உத்தியோகத்தர்களுடன் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இது எவ்வாறாக இருப்பினும் இது தொடர்பில் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவினை பரிமாறிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் எழுத்து மூல அறிக்கை பேணப்படவில்லை. இதற்கு பின்னர் அது தொடர்பில் எழுத்து மூலக் குறிப்பினைப் பெற்று கோவைப்படுத்த குறித்துக் கொள்கிறேன். |

| | |
|---|---|
| (இ) இலக்கம் பி.ஈ.டி./12 மற்றும் 2003 ஜுன் 02 ஆம் திகதிய பொது வர்த்தகச் சுற்றறிக்கை<br><br>(ஸ) 4.2.5 வாசகம் | தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன்.<br><br>எதிர்காலத்தில் இவ் அறிக்கையினைச் சமர்ப்பிக்கக் குறித்துக் கொள்ளப்பட்டது. |

**2.5. போதியளவு அதிகாரம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள்**

**தயவு செய்து இணைப்பைப் பார்க்கவும்.**

2016 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற ஆசிய பசுபிக் வலயத்தின் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகங்களின் 53 வது மாநாட்டிற்காக செலவினமாக 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,861,217.65 மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்ட செலவினத்தின் கீழ் நிதி வெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினமாக ரூபா. 18,411,414.75 என இச் செலவினத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய மாநாட்டுக்காக நேரடியாக மேற்கொள்ளப்பட்ட நிதி ரூபா. 20,272,632.40 ஆகும். அது மதிப்பீடு செய்யப்பட்ட நிதியான ரூபா 20 மில்லியனை விட மேற்பட்ட ரூபா 272,632.40 தாண்டியுள்ளது.

இச் செயலமர்வில் ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளுக்காகப் பங்கேற்ற சிவில் விமான சேவை அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்காக செலவான நிதி Organizational Events இன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் உரிய செலவினம் அதன் கீழ் நிதி வெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்காக செலவான நிதி அவ்வவ் உரிய செலவினத் தலைப்பின் கீழ் கணக்குகளில் பதியப்பட்டுள்ளன. அவ்வாறு மேற்கொள்வதற்குக் காணரமாக அமைந்திருப்பது ஏற்பாட்டு சபைக்காக செலவான நிதி மாநாட்டுக்குரியதான பணிகளுக்காக செலவிடப்பட்ட நேரடி நிதியல்ல என்பதினாலாகும்.

மேலும் இம்மாநாட்டுக்கு இணைவாக நாடத்தப்பட்ட விமான சேவை ஊக்குவிப்புப் பணிகளுக்கான செலவினம் Aviation Development இன் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்குரிய செலவினம் இச் செலவினத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. விமான சேவைத் துறையின் ஊக்குவிப்பு (Aviation Development) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்குரியதாக அமைவதாயின் குவன் சர சஞ்சிகையில் ஒரு பாகம் இம்மாட்டுக்கிணைவாக வெளியிடல் மற்றும் NGAP (Next Generation of Aviation Professionals) என்ற பாடசாலை மாணவர்களை நோக்காகக் கொண்டு விமான சேவை ஊக்குவிப்பு வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது. குவன் சர சஞ்சிகை இவ் அதிகார சபையினால் பிரசுரிக்கும் பணிகள் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதுவரையில் 15 வலயங்களில் வெளியிடப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டில் 04 பாகங்களை வெளியிட திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 03 பாகங்கள் வெளியிடப்பட்டிருந்தன. அதில் ஒரு பாகம் மாநாட்டினை நடாத்துவதற்கிணைவாக வெளியிடப்பட்டது இப் பணிக்கான கௌரவத்தினை மாநாட்டின் ஊடாக வழங்குவதற்காகும்.

NGAP செயற்திட்டம் சர்வதேச விமான சேவை அமைப்பினால் 2009 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டதுடன் அதனை உள்நாட்டில் அமுல்படுத்த இவ் அதிகார சபையின் CADEC செயற்திட்டத்தின் உடாக நடவடிக்கை எடுக்கப்பட்டன. இச் செயற்பாட்டு மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் புதிய வரைவிலக்கணங்களை வழங்கி NGAP விடயத் தலைப்பின் கீழ் தொடர்ந்தும் விரிவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் இலங்கை அதற்காக முன்னெடுக்கும் முயற்சிகளை இம்மாநாட்டில் விசேட கௌரவித்திற்குட்படுத்தப்பட்டது. மாநாடு மற்றும் கம்பனியின் NGAP செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை மாநாட்டின் நேரடி விடயப் பரப்பிற்கு சம்பந்தப்பட்டதாக அமையவில்லை.

மாநாட்டுக்கு இணைவாக கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்கள் மாநாட்டை தொடர்ந்து இப் பொருட்கள் முன்னர் கோரிய பிரிவிற்கு வழங்கப்பட்டதுடன் அவை அதிகார சபையின் சொத்தாகப் பதியப்பட்டுள்ளன.

**03. நிதி மீளாய்வு**

**3.1. நிதிப் பெறுபேறுகள்**

தங்களினால் குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வுக்கு இணங்குகிறேன்.

**3.2. விளக்கமான நிதி மீளாய்வு**



வருடாந்த அறிக்கை 2016

தங்களினால் குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வுக்கு இணங்குகிறேன்.

**04. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1. செயற்சாதனை**

**(அ)**

(i) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இது எவ்வாறாக இருப்பினும் வரைபிற்காக உரிய தரப்பினர்களின் கருத்துக்கள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதுடன் இறுதி வரைவு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக எதிர்வரும் காலங்களில் சமர்ப்பிக்கப்படும்.

(ii) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன்.

**(ஆ) விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவின் செயற்சாதனைகள்**

ஊழியர் எண்ணிக்கை தொடர்பான புள்ளிவிபரங்கள் சரியானது.

(i) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். பயிற்சி பெற்ற பயற்றுவிப்பாளர்களின் நிலுவை இதற்கு அழுத்தங்களை ஏற்படுத்தக் காரணமாக அமைந்துள்ளது. நிலைமையினைத் திருத்தியமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் குறித்துக் கொள்கிறேன்.

(ii) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். நிலைமையினை திருத்தியமைக்கத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளக் குறித்தக் கொள்கிறேன்.

(iii) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். நிலைமையினை திருத்தியமைக்கத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளக் குறித்தக் கொள்கிறேன்.

(iv) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் அமுல்படுத்த வேண்டிய பரிசோதனைகளின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டுக்கு இணைவாக 2016 ஆம் ஆண்டில் குறைவதற்குக் காரணமாக அமைந்திருப்பது அவ் விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானக் கையாளுகைச் செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டிற்கு இணவைாக 2016 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு மட்டத்தில் அதிகரிப்பு மற்றும் பின்னடைவுகளை திருத்தியமைத்து விமான நிலையச் செயற்பாடுகள் நிறுவனத்தினால் இதுவரை மேற்கொண்டு பூர்த்தி செய்யப்படாமையாகும்.

**(இ) விமானப் போக்குவரத்து சேவைப் பிரிவின் செயற்சாதனைகள்**

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இருப்பினும் தங்களது மேற்பார்வை தொடர்பில் கூடுதலாக ஆராயும் போது திட்டமிடப்பட்ட பரிசோதனைகள் மத்தள விமான நிலையத்தின் ஊடாக கிரமமாக குறைவடைந்துள்ளதைக் காண முடிகின்றது. இதற்குக் காரணமாக அமைந்திருப்பது இம் விமான நிலையத்தில் செயற்பாட்டு ரீதியிலான கையாளுகைகள் குறைந்த மட்டத்தில் இருப்பதாகும். மேலும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தாபிக்கப்பட்டிருந்த விமானத் தகவல் சேவை அலுவலகத்தின் பணிகள் விமான நிலைய செயற்பாட்டாளரினால் கட்டுநாயக்க அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டமையினால் மத்தள விமானப் போக்குவரத்து தகவல் சேவை அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பிலான பரிசோதனைப் பணிகள் குறைவடைந்துள்ளது.

**(ஈ) விமானத் தளம்** (Aerodrome) **பிரிவின் செயற்சாதனைகள்**

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன்.

விசாரனைத் திட்டங்கள் உரியவாறு செயற்படுத்தப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக மிகவும் முறையான மேற்பார்வைத் திட்டங்களை அமுல்படுத்துவதற்குக் குறித்துக் கொள்கிறேன்.

**(உ) விமான சேவைத் தகைமை** (Airworthiness) **பிரிவின் செயற்சாதனைகள்**

(i) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இப்பரிசோதனை ஊடாக 2016 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருப்பது விமானப் பராமரிப்பின் பின்னர் பறப்பதற்குத் தயாராகுவதற்கு முன்னர் (Ramp Inspection) என்ற அடிப்படையிலாகும். இருப்பினும் இப்பரிசோதனை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் வேளையில் நிகழ்வுகள் மிகவும் பொருத்தமானது என உணர்வதனால் ஒரு சில பரிசோதனைகள் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. அப்பரிசோதனைகள்

இக் கணிப்பீட்டுக்குள் உள்ளடக்கப்படவில்லை.

(ii) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். மேற்கூறப்பட்ட விமானத் தளப் பரிசோதனை 2013 - 2014 ஆண்டுகளில் கூடுதலான இடம்பெற்றிருப்பது விமானத் தளத்தின் மூலமாகும். விமானங்கள் நிறுத்தப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட காலத்திற்கிடையில் என்பதுடன் அவ்வாறான பரிசோதனைகள் மூலம் விமானங்களின் விமானத் தகைமைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் சிறந்த விளக்கத்தினை பெற்றுக் கொள்வது கடினமானது என்பதினால் விமானப் பரிசோதனைகளை நடாத்தும் கொள்கையிளை மீள மீளாய்விற்குட்படுத்தி விமானச் செயற்பாட்டாளர்களின் தலைமையகம் பரிசோதனைகளுக்குக் கூடுதலாக கவனம் செலுத்தக்கூடிய வகையில் மறுசீரமைப்புக்ள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே 2015 - 2016 ஆண்டுகளில் பரிசோதனைகளில் குறைவு ஏற்பட்டுள்ளது.

## (ஊ) பிரதான செயற்பாட்டுப் பிரிவின் செயற்சாதனைகள்

### ரம் பரிசோதனை

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். சமர்ப்பிக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருப்பது 2013 புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட FS001 புதிய மேற்பார்வைச் செயற்பாடாகும். எனவே 2013 என்பது 00 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டில் கூடுதலான பரிசோதனைத் எண்ணிக்கைகள் குறிப்பிடப்பட்டிருப்பது FS001 செயற்பாடுகளுக்கான பணிகளில் ஈடுபடுத்தப்படும் பயிற்சி (OJT) மேற்கொள்வதன் மூலமாகும். அதனைத் தொடர்ந்து ஆண்டுக்குள் இப்பெறுமதி கிரமமாக குறைவடைந்திருப்பது பரிசோதகர்கள் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஏனைய பிரிவுகள் மீது கூடுதலாக ஆர்வம் செலுத்தியமையினாலாகும்.

### அபாயகரப் பொருட்கள்

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். (அபாயகரப் பொருள் பரிசோதனை எண்ணிக்கை தொடர்பான புள்ளிவிபரங்கள் தங்களது குறிப்பில் வானியல் பாடசாலைக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ளதாக தயவாய் அறியத்தருகிறேன்.

பயிற்சி பெற்ற அபாயகரப் பொருட்களை கொண்டு செல்வதற்கான பரிசோதகர் பதவி வெற்றிடங்கள் இன்மையினால் 2012 ஆம் ஆண்டுக்காக அவ் ஆண்டுக்குரியதாக 14 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 2013 மே மாதம் 15 ஆம் திகதி இப்பதவியிலிருந்து உத்தியோகத்தர் பதவி உயர்வு பெற்றமையினால் அப்பதவி வெற்றிடமாகியமையினால் அவ்வாண்டில் 08 பரிசோதனைகள், தடவைகள் 08 ஆகக் குறைவடைந்தது. உரிய விடயம் தொடர்பில் ஏனைய பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் செயற்பாட்டுப் பிரிவில் இன்மையினால் பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தரினால் 2014 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு பரிசோதனை எண்ணிக்கை 09 மேற்கொள்ளப்பட்டுள்ளது. விடயம் தொடர்பில் உரிய உத்தியோகத்தர் 2015 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டில் முதல் பகுதியில் அடிப்படை பயிற்சிகளுக்குப் பின்னர் மீள் பரிசோதனைப் பணிகளை மேற்கொள்ளும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

### இடம் சார்ந்த செயற்பாடுகள்

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளுக்கு இணைவாக உள்நாட்டில் மேற்கொள்ளும் தற்காப்பு மேற்பார்வை பணிகள் விருத்தி செய்யப்பட்டு முறையாகப் பேணப்பட்டது. வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் இடம் சார்ந்த செயற்பாடுகள் மிகக் குறைந்த மட்டத்தில் பேணப்பட்ட போதிலும் அம் மேற்பார்வைப் பணி ஆவணங்களின் பரிசோதனைகள் போன்றன தமது முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் ஊடாக அவ்விடத்தில் தரங்கள் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டன.

### வானியல் சார்ந்த பாடசாலைகள்

வானியல் பாடசாலைகள் தொடர்பாக போதியளவு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது எவ்வாறாக இருப்பினும் பரிசோதனைத் திட்டங்கள் உரியவாறு அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மிகவும் கூடுதலாக மதிப்பீட்டுத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு குறித்துக் கொள்கிறேன்.



## 4.2. முகாமைத்துவ வினைத்திறன் இன்மை

(அ) தங்களது மேற்பார்வையுடன் இணங்குவதில்லை. 13 மில்லியன் ரூபா நிதி அனுசரவையாளர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அதிகார சபை ஆரம்பத்தில் எதிர்பார்த்த போதிலும் அந்நிறுவனங்கனால் பெற்றுக்கொள்ள முடிந்தது 09 மில்லியன் மாத்திரமாகும். சிவல் விமான சேவை அதிகார சபையின் விமான சேவைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வர்த்தக நிறுவனம் மேற்பார்வை செய்யப்படும் நிறுவனம் என்பதினால் உள்நாட்டு அனுசரனையினைப் பெற்றுக் கொள்ளும் போது எந்தவொரு எல்லைக்கும் உட்பட்டு செயற்படுவது மேற்பார்வை நிறுவனத்தின் பிரதான நோக்கம் என்ற வகையில் மேற்பார்வை பணிகள் தடைகளை எதிர்கொள்ளாத வகையில் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இவ் எல்லைக்குட்பட்டு பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்ந்தபட்ச பங்களிப்பினை வழங்குவதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேலும் அனுசரனையாளர்களைப் பெற்றுக் கொள்ளும் போது இவ் அனுசரனையாளர்களின் பங்களிப்புக்கு ஏற்றவாறு மாநாடு நடைபெறும் வேளையில் பிரதிலாபங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ கால எல்லைக்குள் விடயச் செயற்பாடுகளுக்காக உயர்ந்தபட்சம் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. அனுசரனையாளர்களுக்கு பிரதிலாபங்களை வழங்கவிருந்த வாய்ப்பு இதன் மூலம் தவிர்க்கப்படும் எனும் அறிந்து கொண்டமையினால் மேலதிக வெளிநாட்டு அனுசரனைகளை பெற்றுக் கொள்வதை வரையறுக்க வேண்டி ஏற்பட்டது. (உ-ம் என்ற அடிப்படையில் மதிய உணவு அல்லது இரவு உணவிற்காக அனுசரனை வழங்குவதாயின் அவர்களின் வர்த்தக செயற்பாடுகள் ஊக்குவிப்பதற்காக பிரச்சார வேலைத்திட்டங்களையும் குறைந்தபட்சம் 06 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை கோரப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் மாநாட்டின் கால எல்லையினை சுருக்க வேண்டி ஏற்பட்டது)

(ஆ) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இது எவ்வாறாக இருப்பினும் மட்டக்களப்பு விமானத் தளத்தினை விமான சேவைப் பணிகளுக்காக பயன்படுத்துவதற்காக தற்போது இலங்கை விமானப் படையின் கீழ் காணப்படும் பிரதேசம் மற்றும் சிவில் விமான சேவைப் பணிகளுக்காக பயன்படுத்தும் பிரதேசத்தைத் தெளிவாக வேறுபடுத்தி சிவில் விமான சேவைப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் பிரதேசத்திற்கு நேரடியாக பிரவேசிப்பதற்காக தேவையான செயற்பாடுகள் வகுக்கப்பட வேண்டும் என்பதினால் அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய இதற்காக இலங்கை விமான படையின் உதவியினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் விமான நிலையம் சிவில் உள்நாட்டு விமான சேவைப் பணிகளுக்காக எதிர்வரும் மாதத்திற்குள் திறக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ)/(ஈ) தங்களது மேற்பார்வையுடன் இணங்கவில்லை.

இவ் அதிகார சபையினால் 2003 இலக்கம் 25 கொண்ட நிதிச் சட்டத்திற்கமைய 2003 செப்ரெம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் புறப்படுகை விரி நிதியினை சேர்த்து உரிய நிறுவனத்திற்கு விநியோகிக்கம் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் 15 டொலருக்குச் சமமான குத்தகை வரி நிதியினை விமான நிலையத்திற்குள் விமானத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் பிரயாணியிடமிருந்து அறிவிடப்படுவதுடன் 2003 செப்ரெம்பர் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் இந்நிதி விமான அனுமதிச் சீட்டில் உள்ளடக்கப்பட்டது. தற்போது டொலருக்கு இணைவாக ரூபாவின் பெறுமதி 100/- எனக் கருத்திற் கொள்வற்காக பொதுத் திறைசேரியினால் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

சட்டத்திற்கமைய டொலரின் பரிமாற்றல் பெறுமதி திறைசேரியின் அங்கீகாரத்திற்குட்பட்டு தீர்மானிக்கும் அதிகாரம் பணிப்பாளர் நாயகத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளமையினால் 2004, ஆண்டு தொடக்கம் இடைக்கிடையே பணிப்பாளர் நாயகத்தினால் காணப்படும் செலாவணி விகிதாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பது தொடர்பில திறைசேரி பிரதிச் செயலாளரிடம் வினவப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு வரை பொதுத்திறைத் சேரியிடமிருந்து டொலர் பரிமாற்ற விகிதாசாரம் 100/- என்ற அடிப்படையில் பேணுமாறு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் இதன்போது திறைசேரி குத்தகை நிதியினை அதிகரித்துள்ளமையினால் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்கள் கருத்திக் கொள்ளப்பட்டன.

அதிகார சபையின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு 2013 ஜனவரி 01 தொடக்கம் பொதுத் திறைசேரியிலிருந்து ரூபாவிற்கான டொலரின் பெறுமதி ரூபா. 130 என்றும் 2015.11.15 ஆம் திகதி தொடக்கம் 140 ரூபா என்றும் தீர்மானிக்கப்பட்டது. இப்பெறுமதியினை மீண்டும் கருத்திற் கொள்ளும் போது 2016.04.18 ஆம் திகதி மற்றும் 2017.03.20 ஆம் திகதி பொதுத்திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு அதிகார சபையினால் அறிவிக்கப் பட்டுள்ளதுடன் அதற்காக இதுவரையில் வரவேற்புக்கள் கிடைக்கவில்லை.

இது எவ்வாறாக இருப்பினும்

பொதுத்திறைசேரியினால் டொலருக்கு இணைவாக ரூபாவின் பெறுமதியினை மாற்றியமைக்க அங்கீகாரம் வழங்கப்படும் பட்சத்தில் அதற்கமைய அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இவ் உடன்படிக்கையினை புதுப்பிப்பதற்காக பலசுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடாத்தப் பட்டதுடன் கட்டட உரிமையாளரினால் கோரப்பட்டிருந்த குத்தகை நிதி தொடர்பாக இணக்கத்தை எட்ட முடியவில்லை. இக் குத்தகை நிதி அரசாங்கத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியினை விடக் கூடுதலான பெறுமதியினைக் காண்பிப்பதனால் உரிமையார்களினால் தயாரிக்கப்பட வேண்டிய உடன்படிக்கைக்கமைய அதிகார சபைக்கு வழங்கப் படாமையினாலும் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது. முதலாவது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவ் உடன்படிக்கையினை எட்டுவதற்குத் தேவையான செயற்பாடுகளை வகுக்குமாறு உரிமையாளருக்கு அதிகார சபையினால் தொடர்ந்தும் நினைவுகூறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் தற்போது அதிகார சபையினால் உரிமையாளர்களுக்கு செலுத்தப்படுவது அரசாங்கத்தின் மதிப்பீட்டை விடக் குறைந்த வரி நிதிப் பெறுமதியாகும். இந்நிதி செலுத்தப்படுவதும் உரிய வசதிகளைப் பயன்படுத்தியதைத் தொடர்ந்து அடுத்த மாதத்திலாகும். மேலும் உடன்படிக்கை இன்மையினால் அதிகார சபையினால் உரிமையாளருக்கு வழங்க வேண்டிய வைப்பு நிதியினை வழங்குவதற்கான தேவையும் எழவில்லை.

(ஊ) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன்.

### 4.3. செயற்பாட்டு வினைத்திறன் இன்மை

இக் கணக்காய்வு மேற்பார்வைகள் 03 உரியதாக அமைவது விமானப் போக்குவரத்து சேவைப் பிரிவிற்கு என்பதுடன் இக் குறைபாட்டினை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு மாத்திரம் திருத்தியமைக்க முடியாது. அதன் அவ்வவ் மேற்பார்வைகளுக்காக அயல் இராட்டியங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். மேலும் பரிசோதனைகளுக்காக இலங்கை விமானத் தளம் மற்றும் விமான சேவைக் கம்பனி மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியுள்ளதுடன் எஞ்சிய மேற்பார்வைகளுக்காக வளிமண்டலவியல் திணைக்களம் நேரடியாக செயற்பட வேண்டும் இம் மூன்று விடயங்களையும் திருத்தியமைப்பதற்காகத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். அதிகார சபையின் பிரதான செயற்சாதனைச் சுட்டி, செயற்சாதனை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது அதிகார சபையின் சகல செயற்பாடுகளுக்கமைய தழுவக்கூடிய வகையில் இனங்காணப்பட்டுள்ளதுடன் இலக்கம் 18 க்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றிற்கமைய குறிப்புக்கள் இன்மையினால் எதிர்காலத்தில் செயற்சாதனை அறிக்கையினைச் சமர்ப்பிக்கும் போது அதற்கமைவாக சமர்ப்பிக்கக் குறித்துக் கொள்ளப்பட்டது.

### 4.4. கருத்து முரன்பாடுகளுக்குட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இருப்பினம் DMS/1748 கொண்ட கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தில் காணப்படும் முரன்பாடுகள் அதிகார சபையின் பரிந்துரைக்கமைய தயாரித்து கணக்காய்வு மேற்பார்வை விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள பதவிக்காக உரிய தொழில்நுட்பவியல் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்வது அவசியமாயின் Air Traffic Controller அனுமதிப் பத்திரமாக 2017.03.20 ஆம் திகதி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் திருத்தியமைத்து கொடுப்பனவிற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 4.5. ஒப்பந்தச் செயற்பாடுகள்

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். பிரதான அலுவலக நிர்மானிப்பு தொடர்பில் செயற்திட்டத்தின் ஆரம்பம் தொடக்கம் தொடர்ச்சியாக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் 2016.12.31 ஆம் திகதியளவில் 35 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொடர்ந்தும் ஒப்பந்தாரருக்கு அறிவிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சிற்கும் தாமதம் ஏற்படுவது தொடர்பில் அறிவிக்கப்பட்டது. போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் இது தொடர்பில் எழுத்து மூலம் ஒப்பந்த தாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 4.6. ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகார சபையின் வளங்கள்

இச் சொத்துக்களை மீள வழங்குமாறு நிரல் அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### 4.7 பணியாளர் சபை நிருவாகம்

2016 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபைக்கமைய சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்தில் (HM 1-1) 11 பதவிகள் மற்றும் நிறைவேற்று மட்டத்தில் (MM 1-1) 30 பதவிகள் காணப்பட்டன.

2016 ஜனவரி 01 ஆம் திகதியளவில் அதிகார சபையில் சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்தில் (HM 1-1) மற்றும் நிறைவேற்று மட்டத்தில் (MM 1-1) வெற்றிடங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

| பதவி | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் | 4 |
| நிறைவேற்று உத்தியோகத்தர் | 18 |

சிரேஷ்ட நிறைவேற்று மட்டம் மற்றும் நிறைவேற்று மட்டத்தில் காணப்படும் வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இடைக்கிடையே பத்திரிகை விளம்பரத்தை பிரசுரித்து ஆட்சேர்ப்புக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்களுடன் விண்ணப்பதாரர்கள் இல்லாதமையினால் ஓய்வு பெற்ற அனுபவம் கொண்ட தகைமைமிக்க 10 பயிற்சி பெற்ற நிபுனர்கள் அப்போது காணப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைக்கமைய 2017.03.031 ஆம் திகதி சேவை அமுலுக்கு வரும் வகையில் அமைச்சரவையினால் அங்கீகாரத்திற்கமைய நீடிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் நிதி அமைச்சரின் அங்கீகாரத்துடன் அமுல்படுத்தப்பட்ட விசேட கொடுப்பனவு காரணமாக மேற்கூறப்பட்ட ஆனேமாக வெற்றிடங்களை நிரப்ப முடிந்ததுடன் அதற்கமைய 2016.12.31 ஆம் திகதியளவில் வெற்றிடங்கள் சிரேஷ்ட மட்டத்தில் 02 பதவிகள் மற்றும் நிறைவேற்று மட்டத்தில் 08 பதவிகள் மாத்திரமே காணப்பட்டன.

## 05. கணக்கீட்டுச் செயற்பாட்டுப் பணிகள் மற்றும் சிறந்த நிருவாகம்

### 5.1. வரவு செலவு ஆவணங்களை நிருவகித்தல்.

எதிர்காலத்தில் இது தொடர்பில் கவனம் செலுத்தி வரவு செலவு விரிசலை முடியுமான அளவு குறைக்க குறித்துக் கொள்ளப்பட்டது.

## 06. முறைமை மற்றும் நிருவாகம்

தங்களினால் குறைபாடாகக் காண்பிக்கப்பட்டுள்ள முறைமை மற்றும் நிர்வாகத் துறை தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்குரிய பணிகளை மேற்கொள்ளக் குறித்துக் கொள்ளப்பட்டது.



..........................................

**ஆனந்த விமலசேன**
தலைவர்



..........................................

**எச்.எம்.சி. நிமல்சிறி**
சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

**சிவில் விமான சேவைகள் அதிகார சபை**
2017 பிப்ரவரி 28

Civil Aviation Authority
Sri Lanka

Safe and Efficient Skies for all


**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை**
இல 04, ஹுணுப்பிட்டி வீதி கொழும்பு - 02
தெலைபேசி: 94 -11-2304632, 94-11-2358800
தொலைநகல்: 94 -11-2304644
மின்னஞ்சல் முகவரி: info@caa.lk
இணையம்: www.caa.lk